பிஸ்மில்லாஹி.

# லால்கெளஹர் நாடகம்.

இஃது

நாகூர்.

ம-ள-ள-ஸ்ரீ, செ. மதாறுசாகிபு நகுதா அவர்கள்

குமாரராகிய

முகம்மது நயினாமரைக்காயர்

அவர்களாலியற்றி

ஷெய்கு

குலாம்காதிறுநாவலரவர்கள் பார்வையில்

அச்சிடப்பட்ட பிரதிக்கிணங்க


சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS.

1901

# சாற்றுகவி.

நாகூர்-ம-ள-ள-ஸ்ரீ.

## வ. குலாம்காதிறு நாவலர்
## இயற்றியது.

*

கழிநெடிலாசிரிய விருத்தம்.

வங்காளநெடுந்தேயத்தகுசாமென்றகனகரம்வைகிப்பூமி
யெங்காளவரும்ஜம்ருதிறைமகன்லால்கௌஹர்மயலிதயத்தூற (ன்ற
வெங்காளமெயிற்றரவூர்புலிதிரியுங்கடந்தொறும்போய் மெலியாபிணை
கங்காளிகாளகத்துவண்மணந்தவரியப்பழங்கதைமற்றோர்ந்து (1)

விரும்பாடலிவிரிந்தவதனியலடங்கப்பண்ணமைந்துவிளங்குமூற்றுங்
கரும்பாடல்வழியொழுகுதீஞ்சாற்றிற்பல்வகையகானமிக்கத்
தரும்பாடல்பலபஃறருக்கண்ணிரைபடறிநிறீஇச்சான்றோர்சால்வீர்
அரும்பாடற்படிமினிதுநடிமினிகாண்மினெனவற்பிற்கூற (2)

பாடகமெல்லடிமடவார்கடித்துவகைபயப்பிப்பார்மிக்கக்
கூடகமொன்றுணராதுதம்பித்துச்சிலாரூபக்குறியாய்ஞ்ஞீற்பட
ஆடகமென்றறியாதபுதிதாகப்பரதனந்நாளாண்டுபோந்த
நாடகம்வாழ்மக்கணினிநாடகமாயஞ்செய்தானால். (3)

* ஆஞ்சாறுவழியொழுகியொருவழியினில்லாமலலைவாரென்று
நெஞ்சாறுபோகாதுநியதியாரெழுகுநராணிகழ்த்தவந்தோன் (செம்
மிஞ்சாறுவருத்துக்காங்கிதுவெனக்கண்டதுவாய்ப்ப விளங்கியோன்
பஞ்சாறுவளருமடியார்மால்கொள்ளமால்கொண்டபண்பனன்று. (4)

தனநாகூர்தலைவன்மதாறுசாகிபுதவத்தார்தனையன்முன்னம் (ன்
இளநாகூர்மையடைந்துமுதுநாவலர்வரைகவிபல்லியம்பத்தேர்ந்தோ
குளநாகூர்வழிதொருமுத்தொளிர்பொழில்சூழ்பெருங்கீர்த்திக்குறை
யாதோங்கும்நாகூர்முகம்மதுஅபிறுமரைக்காயப்புலமைவல்லோ
ன்மன்னே. (5)

* இச்செய்யுளொன்றையும் நிந்தாஸ்துதியாகப்பொருள்கொள்க.

## சாற்றுகவி.

நாகூர்-ம-ள-ள-ஸ்ரீ,

### மு. செவத்துமரைக்காயர்

இயற்றியது.

இரட்டையாசிரியவிருத்தம்.

சீரோங்குமகுசாமெனும்பதியிலரசுசெய்ஜெம்ருதுபாத்துஷாவின்
செல்வமெனுலாலரசன்கௌஹரைச்சேர்தருந்திவ்வியசரித்திரத்தை
ஏரோங்குமினியசெந்தமிழினாற்பல்வண்ணவிசைபெருநாடகமென
வின்புறவிரற்றியுலகெங்குஞ்சம்பறப்பினனேற்றபுகழ்நாகூரினன்
பாரோங்குபலகலைகளுணருமதிபுணத்துவப் பண்பினனன்பான்புகழ்ப்
பாமஞ்சரியினொடுபலபல்விசித்திரப்பாமனைமொழிந்தமேகங்
காரோங்குவண்மைக்கரத்துடைமதாறுசாகிபுகனஷவப்புதல்வனாங்
கற்றவர்வியக்குமுகம்மதுசுய்னுமரைக்காயனெனுநாவலோனே

நாகூர்-ம-ள-ள-ஸ்ரீ,

### க. பகீர்முகியித்தீன்

இயற்றியது.

கழிநெடிலாசிரியவிருத்தம்.

மினக்குமீன்கிளர் முழுகவுணீஇயவால்பு
விரிதிறப்பின்பணிமுடி லாலரசனென்பான்
சினக்குமீன்பொருகுழைக்கண் கவ்ஹர் கூட்டஞ்
செழுந்தமிழினிசைபுனை நாடகமாச்செய்து
வினக்குமீன்படுகர்வள நாகூர்கேள்வி
விளங்குமுகம்மதுசயினுமரைக்காயப்பேர்
நினக்குமீன்கிடந்துலக மிசைஇயவாழ்க்கை
நினைஇயவர்யாருமான நிகழ்த்தற்பாலே

நாகூர்-ம-ள-ள-ஸ்ரீ,

### செ. கு. குலாம்முகம்மதுசாகிபுமரைக்காயர்

இயற்றியது.

இரட்டையாசிரியவிருத்தம்.

பஞ்சுதவழ்சோலைச்செழுங்கமலவாவிபங்காளவகுமிசான்மன்னன்
வஜைரால்ஜம்ருதுசேய்லாலரசுகௌஹரைமணந்தவரலாறதனையே

## சாற்றுகவி.

செஞ்சொற்றமிழின்சுவைநிரம்புபன்னிசையேழ்சிறக்குமோர்நாடகமெனச், செய்துலகமெங்கும்பரப்பினன்யாரெனிற்செல்வமுறுநாகூரினன், மிஞ்சுபுகழாரிலக்கணவிலக்கியமெலா மேவுபொக்கிடவகத்தான், வென்றியொடுபலகவிதைவருஷிக்கு முகில்சாகமீதொலிவிரிந்தபொற்றுள, அஞ்சலிசெய்பக்தவிசுவாசனென்னேயனன் றூர்ந்திடுமதாறுசாகிபருண்பகமுகம்மதுநயினா மரைகாயனெனுமன்போங் குகவிவலோனே.

நாகூர்-ம-ள-ள-ஸ்ரீ

### மீ. அல்லிமரைக்காயர்

இயற்றியது.

கழிநெடிலாசிரியவிருத்தம்.

விதியிலங்கும்பதியகுசாமானுமன்லால்
வேந்தரியகௌஹறினைவிரும்பிச்சேர்ந்த
திதியிலங்குஞ்சரித்திரத்தைநாகூர்வாழுஞ்
செல்வமுறுமதாறுசாகிபுகுமாரன்
மதியிலங்குமுகம்மதுநயினாமரைக்கான்
வண்டமிழ்த்தேன்புலவர்செவிநிறைத்தன்மானச்
சுதியிலங்குமிராமுறைபிறழாவண்ணந்
தொகுத்திட்டான்நாடகமாய்வகுத்திட்டானே.

மருமூதுப்ந்தர் ம-ள-ள-ஸ்ரீ,

### அ. முகம்மதுசுல்தான மரைக்காயர்

இயற்றியது.

கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொன்பூத்தவருசாமி னிறைலால்கௌஹர்
பூங்கொடியைப்புணர்ந்தவரலாறுதன்னை
கொன்பூத்தவிலக்கண்மா விலக்கியத்தின்
கொழுந்தேறவொழுகுசதா நாவினாலே
மின்பூத்தமணிநிரம்பு சோலைநாகூர
விளங்கவருமதாறுசாகிபுவின்மைந்தன்

சாற்றுகவி.

தென்பூத்தமுகம்மதுநய்னாமரைக்கான்
செப்பினானாடகமாட்டினானே.

திருஎவ்வுளூர் ம-ள-ள-ஸ்ரீ,

இராமசாமிசெட்டியார்

இயற்றியது.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வளமருவுமுத்தமிழ்ப்பாவலர்களுளங்களிகூரவள்வநாட்டெண்
வளமடல்சேரணிமாடகோளைகமுகம்மதுநயினாமரைக்காருங்க
வளமகிழ்வாரணப்புலவன்வால்லீகளஹூர்சரித்திரத்தைவளமுலகால்
வளமதனிற்பெய்யுமமுதென்னநாடகஞ்செய்துவழங்கினானே.

காசூர் ம-ள-ள-ஸ்ரீ,

மு· ஆ· முகியித்தின் அப்துல்காதிறியற்றியது.

விருத்தம்.

மணியுற்றவொளிக்குத்த முடிபெற்றவலாக்கௌஹூர்
வண்பரிகுணக்குகளைதைய
எழுமலவுகோளைகப் பிரானடிக்கொருதாசன்
மருவுமெய்க்கோவைக்கோத்திரன்
இனியுற்றதமிழிலக்கணவிலக்கியமெலாஞ்
சேர்க்கும்பொழிகாளமேகன்
தெம்படாதெனக்கவிசு ராம்போலெதலாந்தருந்
திகழுமதுரகவிவாரிதி
அணியுற்றவத்தவிதவஸ்துவிலேயோர்க்கெதாமுகு
மன்பாதுகத்தனென்றும்
அருளார்மதுரசா கிபுலெவையுங்குருதக
வருந்தவகுப்புத்திரனன்
குணப்புற்றருப்புமுகம்மது நய்னாமரைக்
காயர்க்குமவிற்பன்னன்
கூறினனாடகந் தாக்குன்றேனநாளுங்
கூர்பெருமையும்மெத்தீக்கும்.

பிஸ்மில்லாஹி.

# லால்கௌஹா நாடகம்.

(*)

## காப்பு.

கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீரோங்கும்பங்களாதேயமதைச்சேர்ந்தவஹஷாமிற்செல்வா
சேரோங்கவரசுசெயும்லாலெனுஞ்சுல்தானிகிளைந்தேயப்பெண்ணில்
ஏரோங்கவாழ்கௌஹர்தமைச்சேர்ந்தகாதையைநாடகமியற்றிப்
பாரோங்கவெப்பொருட்குமுட்பொருளே காப்பாகபணிதல்செய்வாம்

## ஆதிகவி.

கழிநெடிலாசிரியவிருத்தம்

நம்மிறசூல்நபிமுகம்மதநூபக்கருமறுதூமானலியார்நல்ல
செம்பதுமவடிக்களையுமசனுசனுருபயசெழுந்திருத்தாளாதி (ண்டே
செம்மலொலிகுததுபுகள்பற்பெரியோர்கள்கழல்களையுஞ்சிரமேற்கொ
ஆம்புவியில்லால்கௌஹர்சரித்திரத்தைநாடகமாவறைகுவாமே.

## ஆக்கியோன்பெயர்

கழிநெடிலாசிரியவிருத்தம்.

சேலேந்துங்கயத்துடவைசெறிந்திலகுப்ங்காளதேயமுய்யக்
கோலேந்துலாலரசன்கௌஹறை சேர்காதையைநாடகமாக்கோத்த
மாலேந்தும்படியுரைத்தான்மதாறுசாஹிபுதவத்துமைந்தன்சால
வாலேந்துதிருநாகூர்வாழுமுகம்மதுயிறுமரைக்காண்மாதோ.

அ

# லால்கௌஹர் நாடகம்.

## அவையடக்கம்

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அண்டமெலாங்கிடுகிடெனவசையும்வண்ண
  மதிர்ந்தொலிக்குமிடியெதிரேயொருசிற்றீசின்
றெண்டரவிரைந்திரைதல்போலுஞ்சற்று
  மிருந்தமிழினிசையறியாப்பேதையென்போன்
தண்டமிழாலுலகோம்புமிறைலால்கௌஹர்
  சரித்திரத்தைநாடகமாச்சாற்றினேன்கைக்
கொண்டறிஞருள்ளகுறைமுழுதநீக்கிக்
  கொள்ளுவார்மனமகிழ்ந்துவிள்ளுவாரே.

## மங்களம்

கலிவிருத்தம்.

கங்கைமேவுபங்காளமெனும்புகழ்
பொங்குநாட்டிறைபொற்குடிகௌஹரைத்
துங்கமாயனைநாடகஞ்சொல்லிட
மங்களம்பெறவேகணிவாழ்த்துவாம்.

தரு-௧-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

மங்களம் திவ்யமங்களம் சுப
மங்களம் ஜயமங்களம்.

அநுபல்லவி.

பொங்குபுகழ்சஃருதுஷா புதல்வன்லாலேந்த்ரனுக்கு மங்

சரணங்கள்.

காதலங்கல்வாகறகுஜவாஹாஷாமருகற்குச்
சீதமதிமுகத்தற்குத் தேவகணநாயகற்கு மங்க

மானுருவெடுத்தவற்கு வான்பரியைவென்றவற்கு
பூகவமார்முடியற்குப் புள்ளுரைக்கிணங்கினற்கு மங்க

கங்கைநதிநாயனுக்கு கௌஹர்மணாளனுக்கு
பங்காளவேந்தனுக்குப் பாக்கியலாலேந்த்ரனுக்கு. மங்

# லால்கௌஹர் நாடகம்.

## தோடையம்.

### கலிவிருத்தம்.

வண்டணிபொழில் சூழும்பங்காளம்வாழ்
கொண்டல்லால்நற குயின்மொழிகௌஹரைக்
கண்டணைந்த கதையெனுநாடகம்
விண்டுரைத்திடத் தோடையம்விள்ளுவாம்.

### இ-ம்-நாட்டை-ஜம்பைதாளம்.

மானிலமுற்றுமோரீனமிலாதெழின் வானெறியுற்றிடதாரைசோச்சிய
நான்மலர்ப்புயத்தானுயர்லால்கௌஹர்நாடகத்தைச்சொலவே- ஆஆ
வானிலமும்பலதானமமைத்தெழுமானவரம்பில்சீரானபராபர
மோனவருட்டுறைமுறைபரஞ்சுடர்மூதருணற்றுணையே ஜெயஜெய

ஆதவனைப்பொருநீதனெனவருமாதுலர்கட்கொருவாதநறுங்கரு
நாதனெனச்சொலுசாதகன்லால்கௌஹர்நாடகத்தைச்சொலவே ஆ
சீதமுகிற்குடைமீதிலுலாவிய சேதனவேதமறைப்பொருளாகிய
பூதவமேதகுமாநபிநாயகர்பொற்சரணந்துணையே ஜெயஜெய

மாரன்மருளெறிலாரனுயிர்களில்வாரனுலகதிகாரனுரங்கொளு
நாரணயிற்கரவீரியன்லால்கௌஹர்நாடகத்தைச்சொலவே. ஆ-ஆ
சூரியனிற்பொறிபேரர்கதிப்புனல்சோர்தலிலாதழைவீரவொளியிரு
சீரியரில்மெனுமூரதுவாயிலர்சேவடிகட்டுணையே ஜெயஜெய

வாசவனைநிகர்போசவதிவிசு வாசனுலகுளர்நேசனுறும்பகை
நாசனருள்விழித்தேசனிலால்கௌஹர்நா-கத்தைச்சொலவே-ஆ-ஆ
மாசவமீறுலகாசைதெறுந்தவவாசனைவிசொலிமார்களிறுசறு
பேசருமோசமகற்றியதேசொளிர்பேரடிகட்டுணையே ஜெயஜெய

## கட்டியக்காரன் வருதல்.

### விருத்தம்.

செய்யதாமரைத்தடாகஞ் சேர்ந்தபங்காளநாட்டில்
உய்யவேயரசுசெய்யு முயர்புகழ்சம்ருத்ஷாவின்
துய்யநல்லரமனையைத் துரிதமாக்காவல்செய்யக்
கையினிற்றடியுங்கொண்டு கட்டியக்காரன்வந்தான்

ராகம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரனும் வந்தான் சமுருத்ஷா வாயில்
கட்டியக்காரனும் வந்தான்

அநுபல்லவி.

கட்டியக்காரனும் வந்தான் கவினத் துக்கிரீடத்துடன்
பட்டினத்தையாள சமுருத்த பாத்ஷாவின் வாயில் காக்கும் கட்டியக்

சரணங்கள்.

மெய்யிற் சட்டையுமிலங்க மேல் தலைப்பாகை துலங்கக்
கையில் வெள்ளித் தடி பூண கண்டவர்கள் மெச்ச கட்டியக்

ஆட்டர்க் கொள்வடைக் குரிக்கையுமேற்று நக்கி
பட்டினத்தோர் மெச்சிக்கப் பாத்ஷா சமுருத்து வாயில் கட்டியக்

குமிழ்வெண்ணெய் பொருள் குலைக்கிடவே
வெற்றிபாத்ஷா சமுத்திரனின் விரவாயிலைக் காக்க கட்டியக்

கட்டியன் சொல் யச்சரிக்கை.

விருத்தம்.

பாரெங்கும் புகழ்பெற்றவன் வேணுபதியர் தாமருடர நிபதியோர்
மகிழ்வார் இறைவர்க்கா மன்பர் தாழுகொள்ளவர்க்கர்களாதியோர்
கரோனிக்கமாற்றார்களை பணியவிரசக்கராதிபதியாக தரும
காதலைப்பெயர்த்தியோர்க்கிசைந்திடமேலுமோங்கக்
காணுக்குப்பரிந்தவரவிக்கத்தோர்கள் புடையோங்கக்
காவலகளிற் பூருமினர்கள் கார்காவலர்க்கரசனாக (மீது
நிமேலவரும் முறையிலசென்சோக அருஷாவின் சிம்மாசனத்தின்
இக்கேட்சமுருத்ஷா வருகிறார் வெகுவிக்கசெச்சரிக்கை

சமுத்ருஷா கொலுவுக்கு வருதல்.

விருத்தம்.

சேனைகள் சூழ்ந்திடக்கற் செறிந்த பூங்கா கட்டியன்
பாமுனி அருணாஷை பொன் ஞானபதி தனக்கரசனான
சேனைனி சமுருத்ஷாவும் பொற்றிமாலையிற் கேட்டசெக்
கோலனி ... தனக் கொலுவினில் வருகின்றாரே.

## இபதை-இ-ம்-பூரிகல்யாணி மிசுரதாளம்.

### கண்ணிகள்.

சித்திகொள்வங்காளமென்னுந் தேசமாளும்ராஜராஜன்
பார்த்திவரடிபணியும் பாத்துஷசம்ரூதும்வந்தார்.

பச்சைரத்னக்கிரீடமின்ன பக்கத்தில்சாமரைதுன்ன
வச்சிரப்பதக்கம்மின்ன பாத்துஷாசம்ரூதும்வந்தார்.

மாத்தாபியங்கியும்பூண்டு மந்தரவாளுங்கையிற்கொண்டு
வாத்தியமுழங்கக்கொலு மாளிகையில்வந்தனரே.

கையில்கணையாழிபூட்டிக் காலினில்கவுசுமாட்டி
வையம்புகழுஞ்சம்ரூதுபாதுஷா கொலுவில்வந்தார்.

வெற்றிமாலைவாகணிந்து வீரகண்டாமணிபணிந்து
கொற்றமேன்மையோங்கியசெங் கோலுடன்கொலுவில்வந்தார்.

கட்டியங்கள்கூறிவரக் காவலர்கைக்கூப்பிவரச்
கூடமாமந்திரிகள்சூழச் சம்ரூதுபாத்துஷாவந்தார்.

மங்கைமார்நடனமாட நாவலர்புகழ்ந்துபாட
சங்கையாக்கொலுவின்மீது சம்ரூதுபாத்துஷாவந்தார்.

## ஷம்ரூதுஷா சொல்லுதல்.

### விருத்தம்.

பத்தியாவாயில்காக்கும் பலத்தகட்டியமேகேளாய்
சித்திரவனப்புவாய்ந்த திருமனையிடத்திற்சென்றென்
புத்திரரத்னமான புரவலன்லாலையின்று
மெத்துடனழைத்தேயென்று விளம்பியேவரச்செய்வாயே

## லாலராசன் கொலுவுக்குவருதல்.

### விருத்தம்.

திருமலர்ப்பொழிற்பங்காள தேசத்தையாளுகின்ற
மருமலர்ப்புயத்துசம்ரூத் பாத்துஷாமைந்தரான
தருமநன்னெறிதயாள சற்குணமுடையவீரம்
பெருந்தம்லால்பாத்துஷாவும் பெருமையாக்கொலுவில்வந்தார்.

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அல்லது-லலத்-ஆதிதாளம்.

பல்லவி.

ஷஹசாதாகொலுவினில்வந்தாரே பாத்து
ஷாலாலெனும்பேர் தரித்தாரே.

அநுபல்லவி.

தாதணிபுயமகுடாதிபரமிதொழ தாத்திரியாளுந்திறத்தாரே
பாத்துஷாலாலெனும் பேர்புனைந்தாரே ஷஹ

சரணங்கள்.

மணிமகுடாதிசளிலங்கஇந்தமானிலராஜர்பயந்தடங்க (ந்தாரே
பணிசெய்யாடவரிருபக்கத்திற்சூழ்ந்துவரப் பண்பாக்கொலுவினில்வ
பாத்துஷாலாலெனும் பேர்புனைந்தாரே ஷஹ

பெண்ணுச்சனனமெடுத்தோர்களிவர்பேர்சொல்லக்கேட்டவலவார்கள்
விண்ணுட்டரம்பையரும் வேண்மதன்பாணத்தால் விரகமாகிடவுதித்
தாரே, பாத்துஷாலாலெனும்பேர்தரித்தாரே ஷஹ

அழகில்மன்மதனிவரடியைக்கண்டே யமரர்கற்பகம்புகுந்திடவே
கழலாதிகேசமீதணிகைகளணிந்து கனமாக்கொலுவினில்வந்தாரே
பாத்துஷாலாலெனும்பேர்புனைந்தாரே ஷஹ

லாலரசன் போற்றிசெய்தல்.

விருத்தம்.

பவம்பொறுத்தென்னைக்காக்கும் பரம்பொருட்சுடரேபோற்றி
நவமகுடமுதுபாத நளினங்கள்போற்றிபோற்றி
அவமறுந்தோழர்மற்றை யவுலியாவடிகள்போற்றி
தவமிருந்தென்னைப்பெற்ற தந்தையேபோற்றிபோற்றி.

ஷம்ருதுஷா வினுதல்.

விருத்தம்.

தவமிருந்தின்றவென்றன் றனையனேயாசீர்வாதஞ்
சுவணகந்நபிசெய்ன்மாருச் சுநந்திபோனடக்கின்றுயா
பவமுறும்வினைகணீத்துப் பலனுறுஞ்செயல்கள்செய்து
நவமுடன்வருகின்றுயா நகர்விசாரணைசெய்தாயா.

லாலரசன் விடையும் வினவுதலும்

விருத்தம்.

தற்பரன்கிருபைபெற்ற தந்தையேசபியுல்லாஹ்ன்
சொற்படியிதுநான்மட்டும் தூய்மையாநடந்துவந்தேன்
கற்பதிநமதுதேய நகர்விசாரணையுஞ்செய்தேன்
பொற்புடன் றுயிலவேண்டும் புகழ்விடையருள்வீர்போற்றி.

சம்ருதுஷாவிடையருளுதல்.

விருத்தம்.

நயங்கொளுமகனேயுன்ற னல்லரமனையிற்சென்று
வயங்கொளுஞ்சிவப்பிரத்தின மணிசப்ரமஞ்சத்தேறிச்
சயங்கொளுமெண்ணத்தோடு தனியனைவணங்கியுங்
கயங்கொளத்துயிலவாயென்றன் கண்மணியானமைந்தா.

கவிக்கூற்று

விருத்தம்.

மதிமிகுபாத்துஷாவால்மகிழ்ச்சியாய்க்கொலுவில்வர்து
பதிவிசாரணைகள்முற்றும்பரிவுடனடத்திமுத்தின்
சுதைகொளுப்பரிகைமீது துயில்கொள்வான்வேண்டிச்செம்பொற்
கதிர்விரிசப்ரமஞ்சக்கட்டிலிலுறங்கினனே.

இதுவுமது.

கட்டிலில்பாத்துஷாலால்கண்டுயில்கொள்ளவிப்பான்
கட்டில்லாவழகுவாய்ந்த வான்பரிகௌஹரென்னும்
அட்டபாகினியசெஞ்சொலாயிழைமகிழ்விகினமீதில்
திட்டமாத்தோன்றும்வாறுஞ் செய்கையுமுரைசெய்வாமே.

கௌஹர்வருதல்.

கொச்சகம்.

காலடிகண்டோர்களெல்லாங்காமமயலால்வாட
சாலபணிக்காமதனுந்தத்தளித்துத்தள்ளாட
ஏலமணிலாலேந்தலின்பசுகங்கொண்டாட
வாலசுந்த்ரகௌஹர்பரிவந்தார்சபைமீதே.

தரு இ-ம்-பந்துவராளி-மிசுரதாளம்.

பல்லவி.

சுகிர்தவிகசிதகோகைவந்தனளே-கௌஹரெனுமா
சுகிர்தவிகசிதகோகைவந்தனளே.

அநுபல்லவி.

சுகிர்தவிகசிதசோளகவந்தான் கருணாபூஷணியாகட்டனமோ
தருர்தநுர்சகிதகதியமகரி
தனங்குதாமெனத்துளங்கவலஞ்கிர்த (சுகிர்த)

சரணங்கள்.

நுதலணிபிறைநிகரெனவென்றிடவே-முகமீதிலணிநகை
நடக்குமணிவொளியாபமென்றிடவே
பதுமமார்பணிதகுவுகென்றிட பசியகாதணிபிணுபிரெனன்றிட
சதிகொள்காலணிகலகலென்றிட
கதிப்பளாசமேகமகமென்றிட (சுகிர்த)

இக்கொசாவோருபிக்கவிடுசொளவேகணியாழிபூண்டு
செலவேவிரலாமயங்கிடவே
கைக்கடகமொடிரத்னசரிகைரவிக்கைமுலைமீதிலங்கிடவொளி
சுக்குமிருசிறுசுக்குமெதுங்க
சொக்குமெனைசொல்மிக்கவயங்கொளும் (சுகிர்த)

கொஞ்சுகிள்ளைகளஞ்சியோடிடவே மயிலினங்கள்
கூசிக்கானமீதிடலகிடவே
அஞ்சனாணைமடக்கும்விழிகளின்மிஞ்சவஞ்சனஞ்செஞ்சொல்லொடுமிஞ்சு
கொஞ்சுசரசபரஞ்சிபிடையிழை
கெஞ்சியெனைவிராஞ்சிதமுடனே. (சுகிர்த)

இதவுமது.

சரு-இ-ம்-தோடி-மிசுரதாளம்.

பல்லவி.

காணேனெகைஅமரனுமாகாயப்பெற்றேனெழில்
சானுறைங்கிதமுடனே

அநுபல்லவி.

வானயோகத்தாகபுரியுமிகு
மதிமந்த்ரவெழிலிந்த்ரன்முனைஞ்சககரமுடனின்ப
தானகடனம்புரிபரிகளுக்கரசியென
நததிக ஞுரபகர்வதழகல
இகபராதிகளறிவரேயென்றும (காணே)

சரணங்கள்.

குருவிந்தசிவப்பென திளிதழின்முன்றன்
குணமிழந்தோகதியெனயிரிசதுலகின்கீழ்
மருவியதிணுமங்கமேலோசபவரவில்லே
மற்றநவநிதமுற்றவலங்கிர்த
விற்றவெனச்சொலவுற்றடிமைகொள் (காணே)

இந்த்ரலோகத்திலுன்ன ஆணிமுத்தினம்
இலங்குமென தபல்லிரெளிமயக்கண்டேயினி
சொந்தமல்லவிவிட் நமக்கெனக்கருதியே
துவளுங்கடலினுள் கவலையுடனமிழ்க்
துவங்கபொழிந்ததென. ரெவருஞ்சொலவரும் (காணே)

வாலசந்திரனொநுதிரேகவஜ்ஜி
காத்தைதக்கண்டொருமரு வாலேமறைத்துக்கொண்டு
பூலோகபனித்யங் காலங்கடத்துவென்றன்
பொழிவினலநிதவல்குசொலித்திட
குழலணியவணிந்தெழிலுடனேவரும். (காணே)

கௌஹர் பூக்கொய்தல்.

விருத்தம்.

வந்திடுங்கௌஹர்தானு மலர்பலகொய்வாள்வேண்டிச்
சொந்ததோழிகளோடேகிச் சுனைமலர்க்காவிற்சென்று
சந்திரமுகத்தில்வேர்வை ததும்பிடத்தேடியோடிப்
பந்தெனுமுலேமாடப் பன்மலர்க்கொய்தனளே.

திபதை-இ-ம்-நாதநாமக்கிரியை-அல்லது-லலித்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

சேடியேயோடிமலர் தேடுவம்வாராய்வாராய்
கூடியின்பாரமலர்கொய்குவென பாராய்பாராய்

திங்களென்றென்முகமங்கே குவியுந்திவ்யமலர்ப்
பங்கயந்தன்னைப்பறிப்பேனிதோபாராய்பாராய்

அங்கைக்காற்றேமெனவே பங்கமுறுஞ்செங்காந்தள்
மங்கையேகண்டுபறிப்பேன்மதி பாராய்பாராய்

சொல்லக்கூடாதழகின் முல்லையைப்பார்த்தேனைதோ
பல்லைக்கண்டோடினுங் கொய்வேனதைப் பாராய்பாராய்

வல்லியேசேனென்றென்வாயைக்கண்டதோவெட்கமுறும்
அல்லியைக்கொய்திட வல்லோசரிபாராய்பாராய்

குங்குமத்தாரணி கொங்கைக்குப்பயந்தேகுழையு
நங்கையேகோங்கரும்பை நான்கொய்வேன் பாராய்பாராய்

இங்கெனுந்திக்கிலையன் றேயுயரத்தேகிமமைம்
டொங்குவாசம்மகிழம் பூக்கொய்வேன் பாராய்பாராய்

நாடிநாங்கொய்தமலர் தம்மைநற்பந்தாப் புனைந்தே,
ஆடலாந்தோழிகளே யன்புடன் வாராய்வாராய்

கௌஹர் பூம்பந்தாடல்.

விருத்தம்.

மணிமுடிமதனைப்போலும் வளரழகொருங்குபூத்த
திணிமனக்குமரரெல்லாந் தெளிக்கருபயலேகொள்ளப்
பணிபலகமந்துவிங்கும் பருஉமுலைப் பாங்கிமாரோ
டணிபெறக்கௌஹர்பூம்பந் தாடிடத்தொடங்கினளே.

திபதை-இ-ம்-பைரவி-சாப்புதாளம்

கண்ணிகள்.

மைக்குழல் வண்டிசைதா துபடிந்தமலர்கள்சொரிந்தாட-இழை
கைக்குமருங்குல்பளிச்சுமைகொண்டுகலங்கிமெலிந்தாட-வளர்;

எங்குவடிம்பொருவாதமுலைத்துணையேரோடுநின்றாடமிகு
பங்குவமாதரசாகிய கௌஹர்பொற்பந்துகொண்டாடினளே.
சங்கொலிபொங்கியபங்கயமென்கைதளர்ந்துசிவந்தாட-குளப
பங்கிலுலாங்கயல்வென்றிடுவாள்விழிபாய்ந்துபுரண்டாட-அரி
முழங்கியகாலணிபல்விதவோசைமுழங்கவிருந்தாடகொடும்
பங்கமிலாதுயர்கௌஹரெனுந்திருபந்துகொண்டாடினளே
சூரியனோடைவெருட்டியவேய்பொருதோளணிநின்றாட-தன
வாரமெதிர்ந்தவர்வீரமதோடவராண்மையைவென்றாட-பல
பாரதிபோல்வருங்கௌஹரெனுங்குயில்பந்துகொண்டாடினளே
அந்தரலோகவரம்பையமார்க்கொருந்திலகம்மெனவேவருஞ்
சுந்தரமாதரசாகியகௌஹர்துளிர்த்தபைங்காவதிலேமுழுச்
சந்திரவிம்பமுகத்துடைசேடியர்தான்மகிழ்கூர்ந்திடவேமலர்ப்
பந்தெனுமாமுலைப்பந்துகுலுங்கிடப்பந்துகொண்டாடினளே.

கவிக்கூற்று

விருத்தம.

பரிக்குலமாதுகௌஹர் பசியபூங்காவனத்தின்
மருக்கமழ்பூப்பந்தாடி வருமயர்தீர்வான்வேண்டி
அரிக்கிளர்ரத்னசப்பிரமஞ்சத்தினணையிற்சாய்ந்து
வரிக்கணினிமைகண்மூடி மகிமையாத்துயில்கின்றாளே.

இதுவுமது

தூங்கிடகௌஹரிப்பால் சொல்லருமழகுவாய்ந்தே
ஓங்கியபரிகள்சாதி யொண்டொடியநேகராக
ஆங்கொன்றுக்கூடிச்சேர்ந்தே யாகாயமார்க்கமாகத்
தீங்கிலாச்சிறைவிரித்துச் சிறப்புடன்பறந்துவந்தார்

பரிக்குழாம்வருதல்

திபதை-இ-ம-ராதநாமக்கிரியை-மிசுரதாளம்

கண்ணிகள்;

வந்தார்பரிஜாதிப்பெண்கள்வாகுடனேவாலரண்மனைசேர்
இந்தார்சிறைவிரித்தேயொளியெங்குந்துலங்கப்பாந்தழகா

கல்லார்மனம்போலுங்குழல்காணும்மூன்றாம்பிறைபோனுதலும்
வில்லார்புருவமதன்கையின்வில்போலும்வேற்கண்விளங்கிடவே
வள்ளைச்செவிகண்மின்னவென்னவாதிக்குழைக்குமணிநகையுங்
இன்னக்குயின்மொழியுந்துகிர்க்கொம்பெனக்கீழ்மேலிதழிலங்க
கன்னற்றெளித்தெடுத்தகண்ணாடியைப்போலுங்கதிர்மதிய
மென்னுமுகத்தழகுங்கமுகேய்ந்தகழுத்துமிலங்கிடவே
வேய்போற்றிகன்றோளும்யாழைவெட்கப்படுத்தியமுன்கைகளுஞ்
சேய்கரத்தாமரைக்கைவிரல்செம்பவளக்கொம்பெனத்துலங்க
மதர்கொண்டகோங்கரும்போசக்ரவாகமோவட்டோமணிச்சிமிழோ
இதுதானுவமையெனசொலற்கேலாமுலைகளிலங்கிடவே
மதன்கைக்கணையெனவேவயிற்றூர்மயிருமாலிலையகடும்
பசுவஞ்சிக்கொம்பிடையுஞ்சிறைபன்மணியுஞ்சுடர்பாய்ந்திடவே
மாரனரண்மனையாமல்குல்வாயிலினூட்டியவாழையென
ஆருஞ்சொருந்துடையுமலவன்னேர்முழந்தாளழகுபெற
தாவுமவராலினைப்போல்கணைக்காலுந்தராசின்பரடுகளும்
பூவாரும்புத்தகசேர்நறும்பொற்பதவற்புதமேபொலிய
மயிலகூட்டமேபறந்துவரும்வாறுபோலாலுப்பரிக்கையினில்
அயில்போதவளழகைக்கண்டுகந்தரமாயங்கிறங்கிடவே.

பரிகளொருவரோடொருவர்கலந்தாலோசித்தல்

விருத்தம்

வந்திம்பரிக்குழாங்கள் மன்னன்லாவழகைக்கண்டு
சுந்தரமுடனிறங்கித் துணைவிழிகுளிரநோக்கி
இந்தமன்றனக்கிணையந்த வில்லவன்கிளைவாழும்
அந்தமாகெளஹூர்தானென்றவர்களுண்மதித்தாரன்றே

இதுவுமது.

மதிக்கிருவரையுநேரில் வைத்தொருகடிகைநோங்
கதித்திடப்பார்ப்போமென்று கன்னியர்சிலபேர்சொல்ல
இதத்தொடுங்கட்டிலோடே யெடுத்திடென்றெடுத்துகௌஹூர்
கைசத்திநடன்னிலைவைக்கத் துரிதமாவாரம்பித்தார்

கவிக்கூற்று.

விருத்தம்.

கட்டிலோ டெடுத்து கௌஹர்கண்டுயில்வனத்தினிலங்
கட்டிலினருகேவைத்துக் கன்னியரயலிலேகி
எட்டவோரிடத்தினிற்ப தெவர்களுமறியாதுற்றுத்
திட்டமாவிருப்பவிப்பால் செய்தொழில்செப்புவாமே.

லாலரசன் புலம்பல்.

விருத்தம்.

ஏங்கிவைகடந்தபின்னரெழில்பெறும்பாத்துஷாலால்
தூங்கியவிழிதிறந்துசுதைமணிமாடநோக்கித்
தீங்கிவைவிளைந்ததென்னத்திகழுகம்பணையெங்கென்ன
ஏங்கியேமனங்கலங்கியிறைவன்பாற்புலம்புவானே.

திபதை-இ-ம்-காம்போதி-மிசுரதாளம்.

கண்ணிகள்.

ஆதியேயருளிறை சோதியே — யெனக்
காதாரம்வேறில்லை நீதான்கெதியருள்

நீதியேநெறிமுறை வீதியே — யென்றன்
நித்திரைசத்துருவாக லபித்ததோ

நாடெங்கேநகர்மனுதாமெங்கே — யென்
ஞைவலங்கிர்தமானவரணுறம்

வீடெங்கேவிதியர்க ளீடெங்கே — யென்றன்
வெற்றியெல்லாமெங்கையோநானறிகிலேன்

இந்தக்காவனமதில்வந்தவா — றஃ
தின்னவிதமென்றறிகிலேனென்செய்வேன்

தந்தைதாய் தமர்தேடுவார்களே — செல்லுந்
தானமீதென்றறியேனே நானென்செய்வேன்

காரணகதிபரிபூரணா — விந்தக்
காவனம்விட்டடென்றென்தாய்தந்தையாற்செல

அப்படியுரைப்பதழ கன்றெனையணைந்திடுவீர்
எப்படியுமென்றே யிரங்கிக்கரைந்துரைப்பாள்.

திபதை-இ-ம்-சங்கராபரணம்-மீசுரதாளம்.

கண்ணிகள்,

பாராளுந்துரையேயுன்றன் பத்தினியாயிருக்கச்
சீராயாசைகொண்டேனென் றனையின்றுசேர்வாயென்றுரையே

தாராரும்புயமேயென் றனமீதிலேபொருந்தக்
கூராக்கட்டியணைத்தொருமுத்தங்கொடுப்பாயென்றுரையே

சூடும்பூவாடுமுன்னே சுரிகுழல்தொங்கலுலருமுன்னே
கூடியெனையணைந்தின்றொருமுத்தங்கொடுப்பாய்சுந்தரனே

நாடகசம்பனமுங் கரணசரத்தொழின்முழுதுங்
கூடகமின்றியென்றேடுபுரிந்துநீ கூடாய்சுந்தரனே

மட்டிலாதாசை பொங்கினின்றுவாடுந்தமியாளின்
கட்டிக்கனியிதழைக்கடிப்பா யென்றன்காமசவுந்தரனே

அட்டிசெய்யாதேயினி யென்றனாசைக்களவில்லையே
கட்டியணைத்துக் கலவிசெய்வாயின்ப காமசவுந்தரனே

மஞ்சத்தின்மீதேறிக் குயில்வாரிக்களோங்கெதிர்க்கே
கொஞ்சிக்கொஞ்சியபாஞ்சியென்றெனைக்கூடிடுவாய்துரையே

வஞ்சியிடைநெளியகையில் மார்பிணையேபிதுங்க
அஞ்சாமல்கெஞ்சினபோதும் விடாமலணைவாயென்றுரையே

விருத்தம்.

கோதையாளிந்தவாறு கூறிடபாத்துஷாலால்
ஏதென்னபுதுமைசம்மே யிச்சைகொண்டதெனமோனஞ்
சாதித்துநிற்கஹெளஹர் சம்மதிக்காளென்றெண்ணி
வாதிக்குமையலாலே மறுத்துமேவமூத்துவாளே.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வனினைந்தாமசமோ

அநுபல்லவி.

ஆனனங்காட்டி யென்னருகிலழகா நிற்க
நானுனைப்பார்த்திருப்பதும் ஞாயமோசொல் ஏனினந்

சரணங்கள்.

கானலைநீரென்றெண்ணிக் கலங்குமுழையினம்போல்
நானுனையாதுபுலம்புவதென்ன ஞாயமோ. ஏனினந்

அன்னமென்னடையைக்கண்டே யருகில்வருமோபாராய்
இன்னமனமிரங்காததேனோ கண்ணாளனே. ஏனினந்

சன்னைகாட்டும்பெண்களைப்போ லென்னைநினைக்கவேண்டாம்
உன்னையல்லாலென்புருட னுண்டோகண்ணாளனே. ஏனினந்

அம்புவியிலென்னைப்போல் நீயாரையுங்கண்டதுண்டோ
நம்பியென்னைச்சேர்ந்தணை யென்னருங்கண்ணாளனே. ஏனினந்

செம்பொற்சரிகைரவிக்கைசேர்த்திறுக்குங் கும்பமுலைப்
பம்பரமதைப்பரிந்துபாராய்கண்ணாளனே. ஏனினந்

முத்துநவரத்னமணி மோகனமாலைமுலைமேல்
பத்தியாயுருளுவதைப் பாராய்கண்ணாளனே. ஏனினந்

குத்திரமல்லவெனக்குக் கொழுநனுநீயேயென்று
சத்தியமாகினுஞ்செய்து தாரேன்கண்ணாளனே. ஏனினந்

இருக்குதில்லையோவெனு மிடையில்சொலிக்குங்கலை
உருக்குதில்லையோநெஞ்சை யுரைப்பாயுத்தமனே. ஏனினந்

மருவுமலரும்போலே மணியுமொளியும்போல்நாம்
இருவருஞ்சேர்ந்தணைந் திருப்போமண்ணாளனே. ஏனினந்

மனிதர்கள்வானுலகில் வாழும்பரிஜாதியைக்
கனவினிலாகினுங் காண்பாரோகண்ணாளனே. ஏனினந்

தினமுமுனதாசையால் தியங்கித்தவிக்கிறேன்யான்
மனமுவந்துகாதலைத் தீர்ப்பாய்மண்ணாளனே. ஏனினந்

## லாலாசனுங் கௌஹாரும் மணமொத்திணங்கல்.

### விருத்தம்.

பரிக்குலமா திவ்வாறு பகர்ந்திடப்பார்த்துஷாலால்
திருக்கிலாத்தலையால்வந்த சீதேவிதனைக்காலால்
தூக்கிடல்பழுதென்றெண்ணிச் சுகமனுபவிப்பான்வேண்டி
மருக்கமழ்குழலாளோடு மருவவேதலைப்பட்டானே.

### தரு-இ-ம-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

(கௌ) வாருமென்றன்மனையில் மருணசுகங்கொண்டாட
மாமதிமன்னனே-வாரும்

அநுபல்லவி.

தாரணிந்தகுழற்சரிய தாமமணிபொடிபொடிய
சேரிழையினிடைநெளிய நீரென்னோடுதேசிக்கவாரும்-வாரும்

பல்லவி,

(லால்) மாதேமதிவதன சுகிர்தவசனவுசித
மாமயில் கௌஹாரே மாதே

அநுபல்லவி.

மாதேயென்னையணைவேனென்றே வாதிக்கிறாய்மையல் கொண்டே
ஆதலால்நாமிருவருஞ்சேர்ந்தணைவோம்வாராயன்னமே சொன்னமே
(மாதே

சரணங்கள்.

(கௌ)

மன்றல்தொடைவாடுதே மாமதியங்காயுதே
தென்றலனலாகுதேகண்ணாளனே யென்செய்குவேனே வாரும்

(லால்)

குன்றனையதனமுகட்டிலின்றெனதுபுயமழுந்த
அன்றிலைப்போலணைந்துசுகங்களநுபவிப்போமன்னமேவாராய்மாதே

(கௌ)

மன்மதனும்ரதியும்போலே நாமிருவருங்கலந்து
தன்மையாய்புன்னையின்மீதுசேர்ந்தணைவோம்நாயகாவாரும் - வாரும்

# லால்கௌஹர் நாடகம்.

(லால்)

ஜென்மமுள்ளவரையுமுன்போல் தேவியெனக்காருமுண்டோ
இன்பசுகமனுபவிக்கவிதுசமயம் ஏந்திழையேவாராய்மாதே

(கௌ)

வேளேபழநழுவிபாலில்விழுந்த கதையைப்போல்வந்தீர்
ஆளுமணவாளனீயலாதுண்டோவென் னன்னலேவாராய்

(லால்)

காளையென்பதழகோ பெண்ணே நானுன்றன் பூவலையின் கண்ணே
வேளையிதிலேகிச்சாய்ந்துவிழிகள துயில்வேன்மின்னனையாளேமா.

கவிக்கூற்று

அகவல்.

இவ்விதமாக விருவர்கள்மனமுந்
செவ்வையாயொத்துச் சிலமணித்தியாலம்
ஒருவரோடொருவருவப்புடன்கொஞ்சிச்
சரசமாய்ப்பேசித் தையலாள்லாலின்
மஞ்சத்திலேற மன்னனுங்கௌஹரின்
மஞ்சத்திலேறி மகிழ்வுடனிருக்க
மறைவினிலிருந்த வான்டரியனைத்தும்
இறையளவெனினு மினிப்பொறுத்திடுதல்
சரியலஜவாகி றுஷாவிஃதறிந்தால்
துரிதமாநம்மைத் துணித்திடுவானென
ஒற்றுமையாக வொருமுடிவியற்றி
சித்திரைபுரிய நிமிடத்தில்மந்திரஞ்
செய்தனரந்த க்ஷணத்தினில்கௌஹரா
தையல்லால்கட்டிலில் சயனித்துவிடவே
லாலுமாகௌஹர் மங்கையாள்கட்டிலின்

மேலினிற்படுத்து விழிதுயின்றிடவே
பரிக்குலமாதர்லால் படுத்திடுகட்டிலைச்
சுருக்கினிற்றூக்கித் தோண்டல்வாழ்களின்
மேலுப்பரிக்கையில் வியப்புடன்வைத்துச்
சாலியையவரவர் ஜாகைசார்ந்தனரே

கெளஹர்விழித்து லாலாசனைக்காணுமையால்

மறைவாயிருப்பானென் றெண்ணிச்சொல்லல்.

விருத்தம்.

பரி:பிணைப்பெண்கள்பாத் துஷாவரண்மனையைநீங்கித்
துரிதமாய்ஜாகைமீது சுகமுடன்சேர்ந்தாரிப்பால்
வரிவிழிக்கரியகூந்தல் மாமயில்கெளஹரென்னும்
பரிவிழிஇறந்துலாலைப் பார்த்திலாதுரைக்கலுற்றாள்.

தரு-இ-ம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

ஆசை காயகாவெனக்
கறியாதெங்கனம்பதி விருக்கிறீர் ஆசை

அநுபல்லவி.

காமினிமீதுன்போல் நேசமுள்ளனைக்
காணக்கிடைக்குமோ நாணம்விட்டேவாரும் ஆசை

சரணங்கள்.

போதும்போதுமீர்-இந்தப்
பூம்பொழின்மீதொளித்தீர் நானறியேனோ-போதும்

காதலாகுதினி காலதாமதஞ்செய்
யாதென்விரகமதைத்தணித்தாளுவாய். ஆசை

காலமல்லவே-இந்த்ர
ஜாலமெல்லாமென்பால்காட்டுகிறீரிதுகால.

கோலாகாலஞ்செய்தென் பால்மயல்மூட்டுநீர்
ஏலாதினிசகிக்க வேலாதுலாலெனும. ஆசை

பாவையா ளென்றன்-மனப்
பாங்கையறிருநீர் ரீங்கறியேனோவென்-பாவை

ஆவியுநீயுன்ற ஞசைக்கிசைந்தநல்
தேவியுநானிச்சயஞ் செம்மலேவாரும். ஆசை

கௌஹர்கனவுகண்டோமோவென்றெண்ணி புலம்பல்.

விருத்தம்.

பதிவிருக்கிறதாயெண்ணிப் பாவையாங்கௌஹர்கூவி
அதிவிதக் காரணங்க ளறைந்திமவ் வரசைக்காணு
திதுகனவதுவோவல்லதியனினைவதுவோவென்று
பதுமையாயெண்ணியெண்ணிப் புலம்பிடத்துவக்கினளே.

திபதை-இ-ம்-உசேனி-மிசுரதாளம்.

கண்ணி.

கனவோநான் கண்டதுநினைவோ
கடவுளேயென்விதியுமிதுவோ.

வஞ்சித்தாழிசை.

இதுவிதியோ வென்னரசனெங்கேயென்றன்
இருவிழிக்குள்தோற்றுகிறு னிங்கே
பதிவிருப்பானென்று நினைத்தெங்கே-தேடிப்
பார்த்துமகப்படவில்லை யங்கங்கே.

கண்ணி.

அங்கிச்சென்றெங்கே நான்தேடி
அலைகுவேனின்னமேன் மோடி.

வஞ்சித் தாழிசை.

மோடிசெய்தால்நான்சகிக்கப் போமோ-என்ற
மோகமயற்களவிடவு மாமோ

வாழ்வென்றன்மனையை போதுவாமோ-இந்த
அந்தகன்கண் மன்னேவிட்டுப்போமோ.

கண்ணி.

போதுமோ பெண்பாவங்கோடிப்
புண்ணியஞ்செய்தாலுமோடி.

வஞ்சித் தாழிசை,

புண்ணியமெல்லாம் வீணாய்ப்போச்சே-என்றன்
பூரவலனோநான் புலம்பலாச்சே
கண்ணுள்ளபோதே கண்காட்சி-என்ற
கட்டுரைக்கு மாறுதலாவாச்சே.

கண்ணிகள்.

ஆச்சதென்னாசைப்பற்காலே
ஆகுமோவண்ணலே லாலே.

வஞ்சித் தாழிசை.

லாலேலாவென்று புலம்பிடவோ-உன்றன்
காட்டமஃதாலுருகி விடவோ
தாலமதிலென்னுயிர் விட்டிடவோ-என்றன்
சற்குணகண்டது கனவென்றிடவோ.

கௌஹர் இறைவன்பால் முறையிட்டுப் புலம்பல்.

கொச்சகம்.

அன்னமனகௌஹரொரு மாயிழைலாலேக்காண
மன்னுயிரில்லாவுடல்போன் மாமயலால்வாடிநொந்து
பொன்னனையமேனியெல்லாம் பூழ்திபடவேயுருண்டே
என்னவிதியோக மெனக்கேயெனவழுதாள்.

இராகம்-உசேனி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்குவேனென்றன் ஏந்தல்லாலேக்காணுமல்
இதயஞ்சகிக்கவில்லையே.

மன்னாதிமன்னரெல்லா மலரடிதொழும்வலி
மகிழ்ச்சியோடென்றுகாண்பேனோ. விறையவனே

கண்ணிணைமூடினான் சுகிர்மதிமுகமல்லாலமன்
காண்பதும்வேறொன்றில்லையே யிறையவனே

அண்ணலிதோவந்தானென்றறிவிழித்திறந்திடில்
ஆறையுங்காண்கிலேனே. யிறையவனே

கொண்டபெண்சாதிதானே கூற்றுவனாவாளென்றுக்
கூறுவதுண்டுலகிலே. யிறையவனே

கண்டுமோகித்தினங்குன் கணவனேயென்றனுக்கு
காலனாகினனென்செய்வே. னிறையவனே

நித்திரைசத்துருவாய் நீனலகோர்சொன்னது
நிச்சயமென்றனுக்காச்சே. யிறையவனே

ஒற்றுமைடல்லபரி ஜாதிமைக்கென்றெண்ணு
யோகோவென்மறந்தானோ. விறையவனே

மைக்கண்மடமானேயுன் மணவாளனேனென்ற
வார்த்தையைநம்பியிருந்தே. னிறையவனே

கைக்கெட்டினதுவாய்க்கெட்டாதென்றகதையிந்தக்
காலமெனக்கேயாச்சுதே. யிறையவனே

வார்ந்துமுடித்தகுழன் மண்மேற்புரளவிந்த
வனத்திலனின்றுபுலம்ப. விறையவனே

வேந்தன்சுகமாயவன் வீட்டிலிருப்பதுவும்
விரதமோநானறிகிலே. னிறையவனே

கௌஹர்பட்சிகளிடத்து லாலரசனைக்கண்டீரோ வெனவினாதல்.

கண்ணிகள்-இ-ம்-பூரிகல்யாணி.

அரசன்சம்ருத்ஷாபங்காள மாளுங் காலம்
அவாசுதன்லாலென்னைக் கண்டுமணையாக் காலம
புரவலனென்மஞ்சங் கொண்டுபோன காலம்
பூபதியின்கட்டிலினான்புரளுங் காலம்
அருகிலொளித்தானென்றே நாணயருங் காலம்
அலதிறவின்கனவோவென் றாராய்ந்த காலம
விரைசேரன்னோன்தோள் தழுவாமெலியுங் காலம்
மேவுகின்றபட்சிகள் பால்வினவுங். காலம்

திபதை-இ-ம்-எதுக்குலகாம்போதி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

அம்புயத்திலிற்றிருக்கும் அன்னங்களேவாராய்
அண்ணலென்றன் லாலினைக்கண்டேனென்றுசொல்வீர.
பம்புமொழின்மயிலினங்காள் பண்புடனேவாராய்
பட்சமுள்ளலாலினைக் கண்டேனென்றுசொல்வீர
கொஞ்சுபஞ்சவர்ணக் கிளிக்கூட்டங்களேவாராய்
கோமகனென்லாலினைக் கண்டேனென்றுசொல்வீர
பஞ்சரத்துக்கேகுங்குயில் பட்சிகளேவாராய்
பார்த்திவனென் லாலினைக்கண்டேனென்றுசொல்வீர
கொண்டைகளாட்டியெனுமென் குருவிகளேவாராய்
கொழுநனென்றன் லாலினைக்கண்டேனென்றுசொல்வீர
கண்டலையின்மேய்ந்துவருந் தாராக்களேவாராய்
ஆதாரசாதாலாலினைக் கண்டேனென்றுசொல்வீர
கொத்திக்கொத்திமீன்விழுங்குங் குருவியினங்காள்வாராய்
கொண்டலென்றன் லாலினைகண்டேனென்றுசொல்வீர
நத்தியென்றன்பாலில்வரு நாரைகளேவாராய்
நாயகனென் லாலினைக்கண்டே னென்றுசொல்வீர
புயனெருங்கப்பறந்துவரும புறவினமேவாரா
பூபதியென்லாலினைக் கண்டேனென்றுசொல்வீர
வயமலரிற்றேனுகரும் வண்டினங்காள்வாராய்
வள்ளலென்றன்லாலினைக் கண்டேனென்றுசொல்வீர.

கௌஹரினஸ்திதியைப்பற்றி தர்திகளாலோசித்தல்.

விருத்தம்.

அரசனின்புதல்வியிவ்வா றலத்தல்கொண்டழவேசூழ்ந்த
விரைசெறிதாதிமார்கள் மெல்லியைப்பார்த்துப்பித்தஞ்
சிரசினிலேறிற்றென்று சீக்கிரத்தரசன்பாலில்
உரைசெயநாடிநில்லா தோடித்தலைப்பட்டாரே

## லால்கௌஹர் நாடகம்.

### ஜவாகிருஷா கொலுவுக்குவருதல்.

விருத்தம்.

இவ்விதம்கௌஹர்பட்சி யினங்கள்பால்வினவலாயின்
றெவ்வறுசெய்தியொன்றுந் தெரிந்திடாதழுகவிப்பால்
செவவிதழ்கௌஹர்தந்தை செம்மலாஞ்ஜவாகிர்ஷாதன்
மௌவலங்குழலாள்தேவி யுடன்சபைவருகின்றாரே.

தரு-இ-மதுமாது-ஆதிதாளம்.

பல்லவி.

பரிக்குலத்தரசர்வந்தார்-ஜவாகிருஷாவெனும்
பரிக்குலத்தரசர்வந்தார்

அநுபல்லவி.

பரிக்குலபதிமார்பின் மருக்கமழ்மாலைதுன்னப்
பதியெனவருபவர் மனம்பதைபதைத்திட
அதிபதியெனக்கெவ ரெதிரியெனவேசொல்லி பரிக்

சரணங்கள்.

இரத்தினமகுடம்புனைந்தே யிருசிறகின்முத்தொளிரவே
இரத்னகண்டிகைபணிந்தே
சித்ரவனற்சிகிகள் சிறைவிரித்தாடுவபோல்
திகழொளிபளப ளெனவேவிழிகூசிட
அகமகிழொடு தனதரண்மனை மீதினில் பரிக்

மனையாளருகில்வரவே மந்திரிமார்கள்பிரதானிகள்
வலமிடஞ்சூழ்ந்துவரவே
கனியிதழ்மடவார்கள் கவரிசாமரைவீசக்
கட்டியமுழங்கிட வட்ட திசையிலுள்ள
துட்டர்கணடுங்கிட விட்டமதாகவே பரிக்

அரிவைகௌஹரைப்பயந்த அருமைத்தகப்பனெனப்பரிக்
கரசாகிகிணுவில்வந்த
கிரீடாதிபதி ஜவாஹிருஷாவெனம்பெரிய
கீர்த்திபெருகும்பரி பார்த்திவனெனை
ஆர்த்திடஜெயகோஷ மார்த்தர்கணடுங்கிட பரிக்

ஜவாஹிறுஷாஹர் க்ஷேமம்விசாரித்தல்.

விருத்தம்.

என்னுரைக்கடங்கிவாழு மென்குலப்பரிகாணிக்கள்
கன்னயமுடனினிது களினிற்க்ஷேமமாகப்
பொன்னெனமனையாளீன்ற புதல்வர் தாய்தந்தைமற்ற
பன்னியகிளைஞரோடு மகிழ்ச்சியாய்வாழ்கின்றீரா

பரிகுலத்தார்கள் போற்றிசெய்தல்.

விருத்தம்.

அன்னைவேயென்றுமெங்கட் கடியடிவாழையாகத்
தன்னருள் கண்ணுற்காக்குந் தகைமையாற்குறைகளொன்று
நண்ணிடா துங்கள்பாத நளினத்தைப்போற்றிபோற்றி
எண்ணவிடர்களில்லா வின்புடன்வாழ்கின்றேமே.

கௌஹரின்தாதிகள் ஜவாஹிறுஷாவிடம்வருகுதல்.

தாழிசை

மஹர்விசாரணைசெய் துவங்கிடுங்காலம்
வார்குழலித்தாதிமார் வருகிறார்விரைவாய்

ஓரடித்தரு-இ-ம் காதகாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

தாதிவாராரே ஜவாஹிறுஷாமுகநேரே.

சரணங்கள்.

தாதிவாரார்பதி மாதுகௌஹர்லாவின்
பீதில்கொள்ளுமய வாதையினலுண
வாதிகலமறந் தேதோபுலம்பிய
பாதகமாகிய சேதியையோதிடத்

தாதிகள்கௌஹரின் ஸ்திதியைச்சொல்லல்.

விருத்தம்.

எங்குலத்தரசேயென்று மிஷ்டதேவதைபோற்காக்கும்
துங்கமேதாங்களீன்ற சுபுத்திரிகௌஹரேதோ
பொங்கியமையலாலே புலம்புறாள்புகன்றுலாவால்
அங்குவந்தறிவிக்க லையனேபோற்றிபோற்றி

ஜவாஹிருஷ கௌஹரைவந்து கண்டுபேசல்.

கொச்சகம்.

முன்னைவிரைந்தோடிவந்த மொய்குழலாந்தாதியர்கள்
மன்னனிடம்வந்துமது மாமகளுக்கின்றெதுவோ
வின்னம்வந்ததந்த விதமறியோநாங்களென்று
சொன்னவுடனேகலங்கித் தோகையுறுஞ்சோலைவந்தான்.

விருத்தம்.

வந்துதன்மகளாங்கௌஹர் மையலால்வாடிச்சிந்தை
நொந்துலால்லாலேயென்று நுவன்றழுமோசைகேட்டே
இந்தவல்வினைமகட்கா யெங்கிருந்ததுவோவென்று
புந்தியிற்கலங்கிநெஞ்சம் புழுங்கியேயிதுசொல்வானே.

கொச்சகம்.

பொன்னேயிரத்னவெழிற் புஞ்சமேகௌஹரெனு
மின்னேவிழிமணியே மேதினியையாளுமொரு
மன்னுமம்லாலென வழுத்தும்விதநானறியேன்
என்னுவிபரீத மீதெனக்குச்சொல்வாயே.

கௌஹர் சொல்லுதல்.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

என்றுகாண்பேனோ விதயங்களிக்க
என்பிராணன் லாலைநான் ஆ. என்று

அநுபல்லவி.

மன்றலார்பூமாலைமேவு மாதிரப்புயத்தழகே
இன்றெனதுகண்ணினைவிட் டேகுதில்லையென்மோகலாலே. என்

சரணங்கள்.

பூரணச்சந்த்ரமுகமும் புயலிரியப்புரிகரமும்
ஆரமாமணிமார்புமென் னுயிரைக்கொளத்தாவுதே. என்று

பூமியிலெளியோர்மிடிகள் போக்குமருகனனும்பெண்கள்
ஆவியைக்கவரழகு மாறுரைத்திடுவாரென்லாலே. என்று

அன்னைதந்தையோரேபதி னுயிரங்கண்போதுமோவென்
மன்னனெல்லாவழகைப்பார்க்க மாமதிதடுமாறுதே. என்று

வாசமார்பங்காளநாட்டின் வாழுமன்னதியர்க்கெல்லாம்
நேசமகாராஜனும்விசு வாசமனைவாளென்லாலே. என்று

ஜாநஹிறுஷா மகளைத்தேற்றல்.

விருத்தம்.

என்றுலாவரசைக்காண்பே னென்னவேபுலம்பிகௌஹர்
கன்றினைப்பிறந்தமான்போற் கலங்கிடத்தந்தைபார்த்து
மன்றலார்மகளேலோக மன்னர்மேன்மையல்கொண்டே
யின்றுரைப்பதுதகாதென நின்னுழம்புத்திசொல்வான்.

நிபாத இ-ம்-புன்னுகவராளி-மிசுரதாளம்.

பல்லவி.

பெண்ணரசேமகளே யுனக்கென்ன
பித்தம்பிடித்ததுவோ.

அநுபல்லவி.

மண்ணுலகில்வாழு மானிடர்மேலாசை
வைத்துப்புலம்புவ துத்தியோநானின்ற (பெண்)

சரணங்கள்.

கண்ணின்மணிமகளே படத்திற்கலக்காதவோவியமே
விண்ணமையாமதியே பரிக்குலமென்கிரஞ்சீவியமே
திண்ணமதாயுன் னுரையிறப்போர்க்கருள்
செல்வச்சஞ்சீவிய மல்லவோநானின்ற (பெண்)

மானிடர்க்குநமக்கு முறைவேதுமாமகளேமயிலே
நீநினைத்துப்புலம்பியழுவது நிஷ்டூரமாங்குயிலே
வானுலகத்திந்த்ரன் முன்பாடணம்புரி
பாதுகைக்கேவ்விதி யேதெங்கிருந்தது (பெண்)

பாருமுடாவிடமேலாசைகொண்டாள் பதரென்றுசொல்வார்களே
பேருமங்குலத்தோ ரெல்லாம்வகைபேசமுயல்வார்களே
ஊர்வாயைமூட வுலைமூடியாவாமோ
ஒண்டொடியேகண்டோர் மேன்மோகங்கொள்ளாதே. பெண்

சூரியகாந்தியேனைப்பிரபை சொலிக்குமழகியேசி
காரணியாவிடன்மே லாசைகொள்ளத்தகுதியோ இத்தனிதை
நேருடன்கேட்டிடிற் சிந்தியகௌஹாரை
சீக்கென்றுனைத்திடிற் பூக்கண்ணீவாழ்வையோ. பெண்

கௌஹரின் தாய்மகளைத்தேற்றல்.

விருத்தம்.

தவப்பலனிதுவோவென்று தந்தைகூறிடவேகேட்டே
புவப்புடன்பெற்றதாயு மொண்டொடியாளைநோக்கி
கவப்படவிளைக்குஞ்செய்கை தன்றமகளேவீறு
லிவப்பதுஞ்சாதிமான மேதியென்றுசொல்வாள்.

தரு-இ-ம் இந்துஸ்தானி-செஞ்சோட்டி-மிசரதாளம்.

பல்லவி.

சித்தியோடி யசன்மானக்
குதியோஜாதி யவமானம்.

அநுபல்லவி.

அதிதியாருக்கெப்பெரிமானு மகமுறுமோதாடியபிமானம். சித்தி

சரணங்கள்.

அதிதியானம்மறதியானும் சொல்லிடானமாதியானும்
மதியினீனம்முறுதியானும் மன்பதைதனேடெதலமானம். சித்தி
வாராதேயிந்தரவாதேகச்சா மாதேகமைந்தர்மேன்மோகம்
இராதேகௌஹரேயினை முறாதேபரிதேதமானம். சித்தி
ஆமாதாசொலுந்தீதா பிறலோகம்வருந்தாதா
எதார்வாழ்வாயேதேயிங் தானிதேவாதாவதாயமானம். சித்தி

மதனபாணமுனைதுயீதே கதனமாடவிதனமகி
வதனியோசோதியிலதாகி வாடுவதோகௌஹரேமானம். சித்தி

## கௌஹர் தன்கருத்துரைத்தல்.

### கொச்சகம்.

பித்தம்பிடித்ததோ பிதற்றுகிறேனென்றுரைத்த
அத்தனேயன்னையேயெ னாசைமணவாளனையான்
இத்தலத்திலேயிழந்தே யேங்குவதல்லாலெனக்குச்
சித்தபிரமையல்லவென்ன செய்குவன்தாய்தந்தையரே.

## கௌஹரின் தாய்தந்தைகளழுது புலம்பல்.

### இடதை-இ-ம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

மகளேயுன்றனைப்பெற்று வாணாளுள்ளவரைக்கும்
வாடிப்புலம்பவைத்தா யென்மகளேமகளே.

இகபரமீதிலுன்போ லேந்திழையாருமுண்டோ
எந்தயுகத்திற்காண்போ மென்மகளேமகளே.

இந்திரன்முன்னடனஞ்செய் திரும்பெற்றுயென்றே
என்றுஞ்சந்தோஷமானே னென்மகளேமகளே.

சந்திரனாகுமீண்டுந் தகைமைபோலுன்றனக்குச்
சனியனெங்கிருந்தானோ வென்மகளேமகளே.

கலைப்பார்கலைத்தாற்கருங் கல்லுங்கரையுமென்று
கலைலுவதுபோலிந்நா ளென்மகளேமகளே.

குலத்தைவெறுக்கவந்த கொலைபாதர்களிந்த
கொடுமைசெய்தாரோசொல்வா யென்மகளேமகளே.

இளங்கன்றுபயமறி யாதென்பதுபோலெண்ணி
எங்களைமறந்தாயோ வென்மகளேமகளே.

வளர்த்தெடுத்துன்றனையிவ் வயதின்மனிதனிடம்
வழங்கமணமலருமோ வென்மகளேமகளே.

சர்க்கரையுமாவதுவுஞ் சரியாகுமோவாகாதே
சம்மேயுணர்ந்திடுவா யென்மகளேமகளே.

இக்குவலயத்தோர்க்கும் பரிக்குமிணங்கிடுவ
தெந்தயுகத்திற்கேட்டோ மென்மகளேமகளே
காலம்போய்விடும் வார்த்தை போகுமோகண்மணியே
கருத்திலாராய்ந்திடுவா யென்மகளேமகளே
பூலோகருடன்பரிப் பூவைபோயினளென்னும்
புன்சொல்வழிந்திடுமோ வென்மகளேமகளே
சான்றோர்கண்முன்னுவிட்ட சாபப்பலனோவிந்தச்
சண்டாளன்செய்பலனோ வென்மகளேமகளே
ஈன்றபலனோவளர்த் தெடுத்தபலனிதுவோ
ஏதென்றறிகிலனே யென்மகளேமகளே

ஜவாஹிருஷாவுக்கும் கௌஹருக்கும் சம்வாதம்.

கொச்சகம்.

தந்தையொடுதாய்புலம்பத் தையலாள்கௌஹரெனும்
விந்தைசெறிபெண்மயிலாள் மேன்மேலுமையல்கொண்டு
சிந்தைவெந்துலவெனவே செப்புமுரைகேட்டுபிதா
புந்திநொந்துதர்க்கமிட்டுப் புத்திசிலசொல்வானே.

திபதை-இ-ம்-சகான ஆதிதாளம்.

(ஜ) ஐயோகோவுன்றனையா னனியாயமாயிழக்க
தெய்வசம்மதமாநூம் செய்வதென்னநான்மகளே

(கௌ) செய்குவதென்னலாலின் திருமுகங்காணேனாகில்
உய்குவதில்லையினி யுயிர்போய்விடும்பிதாவே

(ஜ) விடுவிடுப்புத்தியைத்தே வேந்தன்செவியிற்கேட்டால்
சுடுநெருப்பாலெரித்துத் துகள்சாம்பராக்கிடுவார்

(கௌ) சாம்பராக்கினுமென்றன் ஷஹசாதாவுயிர்கொடுப்பான்
நாம்பயப்படோமெனற னாயகனைக்காட்டுவீர்

(ஜ) காட்டுவதென்னகரு விழிமணிபோலே காத்தும்
வாட்டுகிறாய்மனதை மதிகூர்மையோமகளே

(கௌ) கூறுமேவாவந்தரத்திற் கோலெறியுந்தகன்போல்
வீழ்ந்தேமயங்கி மெலியும்வீதமறிகீர்

(ஜ) இரைக்குடப்புல்லுருவி யிழைபூனைத்தாட்போலுன்
சிரைக்குலைக்குவைத்தத் திசையால்வந்தாளேமகனே
(கௌ) அவனிமென்றெனை நியெனருமைக்காதலனே நீர்
அவமதிப்பாலுரைத்தா லடியாள்மனம்பொறுமோ
(ஜ) அடிக்கடிக்கவேவைத்து மதிவினைகொண்டெழும்போல்
தடித்துப்பேசுறாய்பின்னோ தயவுமெனக்கிராதே
(கௌ) மயலைக்காதலித்தவுன் றனையயல்லவிதாவே
ஜெயராஜன்லாவூர்க்குத் தேவிகானேபிதாவே
(ஜ) லாவென்றின்னமுமுரை கவிழ்நிலுன்கைகளுக்கும்
காலுக்கும்விலங்கிட்டுக் காவலில்வைப்பேன்கண்டாய்
(கௌ) காலில்விட்டுப்பூட்டக் கணவன்லாவேபோதுமென்
ஆவியுங்காவலையு மவனேமறக்கேனையா

கௌவூருக்கு விலங்கிட்டுத் தாதிகளிடத்தொப்பித்தல்.

விருத்தம்.

பூட்டிட்டென்றவார்த்தை மன்னவன்செவியிற்கேட்டுத்
திறந்திசழிந்தப்பின்னை திருவறவிருக்குமென்ன
இறந்திடுமென்னைதானென் றிதயத்துட்கோபமீறிப்
புறந்திகழ்கைதியாக்கப் புத்திகூர்ந்துரைப்பானன்றே

இதுவுமது.

தாதியேசொல்லக்கேளென் றனையைகால்குழந்திடுகையில்
நீதியாடலாகாதே நீள்விலங்கடித்தேதனிக்கள்
மதிதான்றமுரைத்திடாம லெனதுகாவலைத்திற்சேர்த்துப்
பாதுகாத்திடுவீரென்றும் பயபக்தியாகவாதே

கௌவூர் சிறையானதை லாவரசனுக்கு
யாருரைப்பாரெனத் தாதிகளிடத்துரைத்தல்

கொச்சகம்.

காவல்செயுமென்றவுடன் காவலத்திற்றாதியர்கள்
மேவுமெழில்கௌவூரினை மேன்மையுடன்வைக்கச்சொல்வான்
ஏவல்செய்த்தாதிகளை யின்பமனவாளனென்ற
ஆவியனைலாவரசக் காருரைப்பாரின்னிதியே.

திபதை இ-ம்-காமபோதி-மிசுரதாளம்.

கண்ணிகள்.

ஆருரைப்பரென்றனருமைக்காவலனிடந் தாதிமாரே-தந்தை
அருஞ்சிறையிருத்திய வனியாயவசனத்தை தாதியாரே

பாரிற்பெண்ணையாணுக்காப்படைத்ததென்பாரே என்மன் தாதிமாரே
அந்தப்-படிநான்செய்ததிற்கிந்தக் கொடுமைசெய்திடலாமோ தாதிமா

கண்ணுமனமுமென்றன் கணவன்லாலிடத்திலுந் தாதிமாரே-அந்தக்
கட்டைமட்டுமிவ்விடத் தும்றதுகாண்பீர்கள் தாதிமாரே

எண்ணினதுநானொன்றுதெய்வமெண்ணினதொன்றுதாதிமாரே நான்
என்னபாவஞ்செய்தேனோ யிவ்விதிக்காளானேன் தாதியாரே

திணையிற்பெருமைசொல்லித்திரியுமென்றந்தைக்குத் தாதிமாரே-இது
செய்செய்யாதேயென்று செப்பவல்லமையிலே தாதிமாரே

அணைகடந்தவெள்ளத்தையழைத்தால்திரும்பிடுமோ தாதிமாரே
சற்றும்-அறிவில்லாவென்றந்தைக் கறிவூட்டமாட்டீரோ தாதிமாரே

பிள்ளையுடன்பெண்வாழப்பேராசைகொள்வதுண்டே தாதிமாரே
யென்னைப்-பெற்றபாவிக்கிவ்வெண்ணை முற்றுமில்லாதே போச்சேதாதி

எள்ளளவுமுள்ளெண்ணை யாகச்செயுமென்லாலைத் தாதிமாரே-நான்
எந்தயுகத்திற்கண்டே யேகபோகமாய்வாழ்வேன் தாதிமாரே

தாதிமார்கௌஹாரைக் கேட்கல்.

கொச்சகம்.

செண்டணையகொங்கைபின்மேற் றேமற்குறிதோன்றவொரு
கொண்டனிகாகோனுமங் கூறிமயற்காளானாய்
ஒண்டொடியேயாவனெங்க ளோடுரைப்பையாமாகிற்
கண்டிணைக்கக்கூடிடுமேற் கண்டிணைக்கித்தருவோமே.

கௌஹார்தாதிகட்குச்சொல்லல்.

தரு-இ-ம்-பங்காளா-திசுரதாளம்.

பல்லவி.

எதால் வருந்துகிறே
னென்றுணர்ந்திடா சகியே எதால்

அநுபல்லவி.

இதாலெனச்சொல்லெழுங்கே யளிப்பையோசகியே எதால்

சரணங்கள்.

பதாதியார்தனேபாற பாவிவாடினுஞ்சகியே
சதாதியானவெள்ளாலே யுலாதியார்சகியே எதால்

கண்ணுளன்லாலேவரக் காண்கிலேனதால்சகியே
அன்னுமமுனெனன்றேயென் னுவிபோகுதேசகியே எதால்

அருகமோகமதாழ்ந்தே தயங்கிறேன்சகியே
பொருமைநீக்கியேலால்பாவிற் போதிப்பாசகியே எதால்

அன்னுயன்னுயெனவென் றுலுமாய்க்கிடாசகியே
என்னுவியேகினுமலாலே மறந்திடேனேசகியே எதால்

தாதிகள் கௌஷருக்குச் சொல்லல்.

கொச்சகம்.

மாமயிலேவாழுலக மன்னவனுவக்தவெங்கள்
கோமகனேகௌஷரேனுங் கோகிலமேலாலெனவே
நாமுறுதற்கெங்களினும் காரியங்கைக்கூடாதே
சேமமுறவுன்னருகே யுற்றேமெண்சேயிழையே.

கௌஷர் புலம்பல்.

விருத்தம்

தாதியிவ்வாறுகூறச் சகிக்கொணுமையல்மீறி
மாதர்கழலதங்கௌஷர் மாமயிலனையாளத்தத்
காதணிபொழிலிவிட்டதனையுடனிருக்கேதயின்பக்
காதலன்லாலேத்தேமுக் கதறியேபுலம்புவாளே

தரு-இ-ம்-இக்துல்தானி-சொரக்-ரூபகதாளம்.

பல்லவி.

நீத்தாயோவென மருளுக்கேயுன்னினை
வாருதேலாலேகோரியோவென்பாலே.

அநுபல்லவி.

மாத்தாப்மாமயன் மீறியேயென்னை
வாதிப்பதாலே வாராயோவோலாலே நீத்த

சரணங்கள்.

ஈன்றோர்களாற்சிறைச்சாலைமீதுவைத்
தேவிலங்காலே யிடளித்திடலாலே
வான்றேரையாகினு முன்றன்பால்தர
வாய்த்திலையாலே வராயோவோலாலே. நீத்தா

மனமுந்தயாளமு முன்றன்மேலுறு
மாமயலாலே வாதாடுவதாலே
தினமுந்தளர்ந்தய ருன்றனின்றமி
யாளென்றன்பாலே சேராயோவோலாலே நீத்தா

தேவேந்திரன்பகை யேந்தினே னுன்னைச்
சேருவதாலேதினமின்புறலாலே
மாவேந்தனே சகிப்பேனுயான்மிகு
மாமயலாலே வாராயோவோலாலே நீத்தா

தாங்காதவெவ்வினைசெய்கினுந்தவி
ரேனுன்றன்மேலே கொளுஞ்சார்வதைலாலே
ஆங்காலமெப்பொழுதோ வறிகிறேன்
ஓயோகோலாலே யாதாரமாராலே. நீத்தா

விருத்தம்.

லாவினைநினைத்துக்கௌஹர் நங்கையும்புலம்பியேயெப்
பாலினிலிருக்கின்றானோ பாவிநானறியேனென்று
கோலினையிழந்துநிற்குங் குருடனைப்போலல்லாவின்
மாலினையணிந்துதேடி வகைசொலிப்புலம்புவாளே.

திபிதை-இ-ம்-பந்துராவளி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேனிதற்கேது செல்வேனென்றன்பாலேசற்றும்
இரக்கமில்லாதேகினையே யெனைவிட்டு லாலே

அன்னமலரிலேமே னீர்த்துளிகிற்பது போலே-யானும்
அலங்கோலமாய்நின்று கலங்கலாமோமனம் லாலே

வாருதியிற்கரைகாணாத கப்பலைப் போலே-உன்றன்
மாமயலாலித்யம்வாடித் தவிக்கிறேன் லாலே

பாரினில்தாவரமில்லாவிளங்கொடி போலே-உன்றன்
பற்றுதலில்லாது முற்றிலும்வாடுகிறேன் லாலே

ஈரச்சிலைபோட்டுக் கழுத்தையறுப்பது போலே-என்னை
இக்கோலமாக்கிவிட்டெங்கேயொளித்திட்டாய்லாலே

பாரோர்கள்நாட்டாட்டிற் கைவிட்டதென்பது போலே-என்னைப்
பாதியிலேகைவிட்டீர் நீதியோசொல்லென் லாலே

இலவுகாத்தகிளிப் பிள்ளையென்பாது போலே-நீரும்
என்றுவருவீரோவென் றெண்ணியிருக்கிறேன்லாலே

நிலவில்லாமுற்றமென் றுலகுள்ளோர்சொல்வதுபோலே-இந்த
நெடியகாவனத்தினி ரில்லாததோர்குறை லாலே

சட்டமண்பச்சைமண்ணோ டொட்டாதென்பதுபோலே-நானுஞ்
சுரிகுழற்பரிஜாதியென வெண்ணிவெறுத்தீரோ லாலே

இட்டமதாச்சொல்வேன்கட்டாந்தரையட்டை போலே-என்றுந்
தேங்கிமண்ணில்விழுந் தேங்கிப்புளரவோ லாலே

கலத்திற்சோற்றையிட்டுக் கைபிடித்ததை போலே-நீரும்
கண்டுமேணைந்துசுகங் காணுமற்போனேனே லாலே

நிலத்தில்கிணறுவெட்டபூகம்புறப்பட்டது போலே-நீரும்
கிணையாமல்வந்தென்னைத் தனியாப்புலம்பவைத்தீர்லாலே

கலிக்கூற்று

அகவல்.

புலம்பியேகௌஹர் பூம்பொழின்மீது
கலங்கியேமைகிடாக் கட்டுண்டசெய்தி
குலாத்திறோர்க்கெல்லாங் குறைவறத்தெரிந்துஞ்
சொலைத்தகாவிசனச் சருகடலாழ்ந்தே

என்னசெய்குவனென் றேங்கியேயிருக்க
மன்னவன்லாலும் பங்காளநகரிக்
கண்டுயினீத்துக் கட்டிலைப்பார்த்துப்
பெண்களின்றிலதம் பெருமைசேர்கௌஹரைக்
காணாததான்மனங் கலங்கியேசற்றும்
நாணமில்லாதுநாயகிக்குரிய
மாதுநீயல்லான் மறுத்தெவருண்டெனப்
பூதலத்துருண்டு புலம்பிடலானன்

லாலரசன்விழித்து கௌஹரைக்காணாது

தேடிப்புலம்புதல்.

விருத்தம்.

அதிபதியெவரும்போற்று மண்ணஸ்சம்ருதுஷாவின்
முதிபெறுந்தவத்தாம்பூவிற் சுதனெனவருலால்தாமுங்
கதிர்விரிநீலரத்னக் கட்டிலில்விழித்துக்கௌஹர்
மதிமுகங்காணாதாலே வாடியேபுலம்புவானே.

திபதை-இந்துஸ்தானி-ஜெஞ்ஜோட்டி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

இன்றிராத்திரியிலென்னோ டிருந்திடுமானே-தேனே
யென்னைவிட்டெங்ஙனேசென் றிருக்கிறாய்மானே-தேனே

கன்றிழந்திடுபசுபோல் கல்புகலங்குதே-மானே
காதலனீயென்றதைக் கருத்திமறந்தியோ-தேனே

நவரத்னத்தொளிகதி ரானகுமஞ்சத்திலடிமானே
நான்மட்டிற்சயனிப்பது நலமோசொல்வாயடி-தேனே

தவமுத்தர்மயங்குமென்றன் றலைவியேயுன்னடி-மானே
சங்கதியீதென நானெங்கறிவேனோ-தேனே

ஏந்தல்தேவேந்த்ரன் சபைக்கேகிவிட்டாயோ-மானே
இனிவாராதிருந்தாலென துயிபோய்விடு-மானே
வேந்தன்நான்மனிதனென வெறுத்துவிட்டாயோ-மானே
மீறுமென்மையலுன்னை வெறுத்திடுமோடி-மானே

கண்டதெல்லாங்கனவோ காண்கிலன்கௌஹரே-மானே
காமக்கூட்டெவிட்டாக் கனியேகற்கண்டே-தேனே

தொண்டனுவிருமெனலும் தோகையேமானே-தேனே
சொல்லொண்ணமகிழ்வுடனன்சுகித்திருப்பேனே-தேனே
ஏவுமுன்பணிவிடைக் காவாயிருப்போர்க்கே-மானே
என்றுமோர்குறைகளுண்டோவிதையறியேனே-தேனே
ஆவிபோய்விடினுமுன்ற னனங்கண்டான்-மானே
அதுவேசஞ்சீவியமென் றறிந்திருக்கின்றேன்-தேனே
தருமமாகௌஹரேயுன் சாஸ்திரம்பாராய்-மானே
தையலேமையல் சகிக்கேனடிமானே தேனே
வருமம்வேண்டாமடி பெண்மாம்யில்மாதே-மானே
வஞ்சகஞ்செய்திடியே வெஞ்னெஞ்சொறுக்காதே-மானே

லாலரசன்கௌஹரை நினைத்துப்புலம்பல்.

கொச்சகம்.

பஞ்சவர்ணக்கிளியைப் பழிக்குமொழியாலெனுடன்
கொஞ்சிச்சரம்பேசுங் கோதைகௌஹரின்றிரவில்
வஞ்சகஞ்செய்தென்னை விட்டவாறறியேனென்றுசப்ர
மஞ்சமிழிக்தேலாலுமனமுருகிவாடுவனே.

தரு-இ-ம்-ஆகரி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

காமக்களையாறுதற்குக் காவனமதானகுழல்
வாமமலராலேவீசும் வாசமென்றுணர்வேன்மானே
மதிமுகத்தினொளிஜொலிப்பை மதிதலத்திலென்றுகாண்பேன்
அதிவிதமாவெனைமிரட்டி யழைக்குங்கண்களினைக்காட்டாயோ
மூகத்தின்முகம்வைத்துமுத்தும் மூக்கையென்றுபார்க்கப்போறேன்
மிகுத்தவின்பவுரையாலென்னை மேவுதிருவாயைக்காட்டாய்
பாகிலைச்சுருள்கொடுக்கும் பைந்தொடிக்கையென்றுகாண்பேன்
மோககையானயானைதன்னை ரவிக்கையான்மறைத்திருந்தாய்
காளுள்பட்டயானைதன்னை ரவிக்கையான்மறைத்திருந்தாய்
ஆனமட்டுங்காட்டென்றேனே யதையுங்காட்டதொளித்திட்டாயே
நீதியென்செங்கோனடாத்து நிதம்பமென்னும்மரண்மனைக்கும்
பாகில்யுனக்குமென்ன பாத்தியங்களுண்டுசொல்வாய்

ஏதெல்லாங்கவர்ந்துகொண்டே யெங்கையோமறைந்துவிட்டால்
வேதனைப்பட்டாகிலும்லால் விடமாட்டானென்றறிந்திலையோ
போதும்போதுமுன்றன்ஜாலம் பூவையேயெனருகில்வாராய்
ஏதுசெய்தாலினிசகிக்க வழிகளில்லைமாமயிலே.

லாலரசன்வருந்துவதை யவர்தந்தைதாய் கேட்டுவந்துலாலைவினாதல்

விருத்தம்.

மையலால்லாலிவ்வாறு மதிமயங்கியேவாய்விட்டுத்
தையலேகௌஹரேயென் சஞ்சீவிமருந்தேயென்று
நையவேயேவலோர்க ணடத்திடுங்கருமந்தன்னை
ஐயனுஞ்சம்ருத்ஷாவி னடிமுடிதாழ்ந்துசொன்ன.

இதுவுமது.

ஏவலோர்சொல்லக்கேட்டே யெந்தல்சம்ருதுஷாவுந்
தேவியும்புதுமைகொண்டு செம்மலாலிடத்தில்வந்து
மேவியதவத்தாலீன்ற வேந்திளவரசேயெங்கள்
ஆவியேயுனக்குத்துன்ப மடுத்தகாரணமென்சொல்வாய்.

திபதை-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

தவமிருந்தீன்றவெங்கள் தனையனேதாரையாகத்
தாளம்போற்கண்ணீர்சிந்துவானேன்- ஆ மகனே

கவனமுனக்கேயெங்கள் காயமுள்ளவரையிற்
கண்ணேகல்புக்கினியகனியே- ஆ மகனே

சுவரிற்றீட்டியசித்ர சுரூபமெனப்பிரமித்து
சும்மாமயங்கிநிற்கிறாயே- ஆ மகனே

தவறேதுமுண்டேலந்த சங்கதிகளையெம்பாற்
சற்றேவிஸ்தாரமாய்ச் சொல்வாயே ஆ மகனே

பொன்னானமேனியெல்லாம் புழுதியாகிடமனம்
புழுங்கியழக்காரியமென்னா- ஆ மகனே

சொன்னாலுன்னிட்டப்படிக்கென்னென்ன காரியமோ
துரிதமுடன்டிப்போமின்னுன்- ஆ மகனே

உன துசப்ரபஞ்சம்போய் மற்றோர்சம்ரமஞ்சமிங்
குற்றவகையுமறியோமே- ஆ மகனே

மனதிவ்வளவில்வந்த வகையுமறிகிலமே
மகிழ்வாய்யுரைத்தாற் கலங்கிடோமே- ஆ மகனே

லாலரசன்விடைகொடாது

கௌஹரையே நினைத்தழுதல்

விருத்தம்.

தந்தைதாயிவ்வாறு தயங்கியேமகன்பாற்கேட்க
விந்தைசேர்முகத்தைநோக்கிவிடையொன்றுஞ் சொல்லாதென்றன்
புந்தியின்கனியேகௌஹர் கௌஹரேயெனப்புழுங்கிச்
சிந்தையிறபிரிவாற்றுமற் றியங்கியேபுலம்புவானே.

திபதை-இ-ம்-முகாரி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

மௌவலங்குழல்பௌவநேர்விழிக் கௌஹரேயிங்குவாராய்
கொவ்வைநேருன்றன்செவ்விதழ்க்கொழிற் றவ்வவேவிடைதாராய்

லாலேகானிமேலேயுன்மனே யானேயென்றதைமறந்தாய்
சாலவேதுன்பக்காலகோலஞ்செய் தோலமிட்டழத்துறந்தாய்

வஞ்சியேசபாமஞ்சமீதப ரஞ்சியென்றடிபெண்ணே
கொஞ்சிமாமயனமிஞ்சிநின்றதை கிஞ்சித்தும்நினைகண்ணே

பொன்னின்மாமயிலென்னுஞ்சாயலு மன்னமென்னடைமானும்
மின்னுதேவிழிதன்முன்னேயிதற்கென்னசெய்குவேனானும்

சித்தமாறிவசுத்திடப்பெருந் தத்திலாகினேன்மானே
முத்தணிந்தமுகத்தைநீட்டியோர் முத்தந்தந்தருள்தேனே

செம்பொற்குப்பமோடம்புயம்பொரும் பம்பரத்தனமீது
கம்பனஞ்செயாம்பிணிவில் வம்பனானேனிப்போது

கானின்மான்கலைமானினைப்பிரிந்தானபோலுனைப்பிரிந்தே
நானுறங்கிடநீசகிப்பதுதானோநன்முறைமையிருந்தே
இத்தனைச்சொலுஞ்சற்றுமுன்காவிக்கெத்தவில்லையேமதியே
பித்தங்கொண்டுநான்செத்திடத்தினங்கத்தவோதொழில்ரதியே

சம்ருதுஷாலாலரசனுக்குப்பித்தமேயென்று
வயித்தியஞ்செய்தல்.

விருத்தம்.

வேந்தினவரசனிந்த விதம்புலம்பிடவேதந்தை
மாந்தர்களெதுவோபித்த மயக்கமோவெனதுமைந்தன்
சாந்தசற்குணபேதத்தாற் றயங்கிறனிஃதைநீக்க
ஆந்தகுமரந்தம்ஹக்கீம்களையிவணழைத்துப்பார்ப்பீர்

இதுவுமது.

சொன்னசொற்செவியிற்சாரத் துரிதமாயேவலோர்கள்
பொன்மனைவிடுத்துக்கால்கள் பிடரியிலடிக்கவேபோய்
மன்னனும்சம்ருதுஷாவின் மைந்தற்குப்பார்க்கத்தேர்ந்த
நன்மனஹக்கீமைக்கூட்டி நலமுடன்வருகின்றாரே

ஹக்கீம்வருதல்.

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

ஹக்கீமும்வந்தாரே யூநானி
ஹக்கீமும்வந்து தோன்றினாரே

அநுபல்லவி.

திக்குத்திசைகளி லுள்ளபூற்பூண்டெல்லாந்
தேடியெடுத்து மூட்டையாக்கிக்கொண்டு
பக்குவஞ்செயவே னென்றுயூநானிப்
பண்டையஹக்கீமும் வந்துதோன்றினாரே ஹக்கீமு

சரணங்கள்.

கல்லொடுகாய்கிழங் காமருந்துவகைக்
கஞ்சாவபினுங் கடைச்சரக்குகளும்

வல்லமையுடன்சேர்த்தேயூநாகி
வைத்தியர்வந்து தோன்றினாரே. ஹக்கீமு
கண்டிடும்பிணிக ளெல்லாமென்றுன்
கதிரவனைக்கண்ட பனிப்போல
விண்டிடுமவிழுதத்தி னலெனசொவி
விரகூரபண்டிதர் தோன்றினாரே, ஹக்கீமு
வேந்தன்லாலரசனுக்கு பிடித்திடும்
வெறிபினைமாற்றவேனொடியிலென்றே
மாந்தர்கண்மயங் கிடவேசந்தோஷமா
வயித்தியர்வந்து தோன்றினாரே ஹக்கீமு

ஆரியா.

தந்தைபோற்காக்கும் விந்தைசேரரசே
எத்தனையமுத்த சிந்தையையறியேன்,

சம்ரூதுஷாவயித்தியஞ்செய்யச்சொல்லல்.

விருத்தம்.

வந்திடும்வயித்தியசிந்தா மணியேநம்மைந்தனுக்குப்
புந்திபேதலித்தலாலே புலம்பிடுவியாதியேதோ
இந்தகாருற்றதத்தை யெவ்விதத்தினுநீக்கத்
தந்த்ரபக்குவங்கள்செய்வீர் சாஸ்த்ரப்பண்டிதரோஜயா.

ஹக்கீம்வயித்தியஞ்செய்தல்

விருத்தம்.

நல்லதெம்மிறையேயென்று லால்குமுகக்குறிப்புஞ்
சொல்லருங்காக்குறைநி குணங்களுந்தொகுத்துப்பார்த்தே
இல்லையேவியாதிதானென் றேந்தலின்சிறுநீர்நோக்கி
வல்லவன்னீர்நெருப்பின்வண்ணமாயிருக்கக்கண்டார்

இதுவுமது.

கண்டவனரம்புதோறுங் கதிக்கவேயிரத்தங்குத்தித்
தண்டிக்கவியாதிதீராக் காரணமெதுவோவென்று
பண்டிதர்மயங்கிவேறு பக்குவமேதன்றங்நன்
அண்டையிலிருந்தோர்பாலி லறையவேலாலுஞ்சொல்வான்

## லாலரசன் அச்சபையிலிருந்த குலத்தோரைப் பார்த்து சொல்லல்.

### விருத்தம்.

என்னுடனிருக்கின்றோரே யென்றனுக்கிப்போதுற்ற
வின்னநோய்க்காமருந்து வீணிலேன்செய்கின்றீர்காண்
துன்னுகாமத்தின்றீக்குத் துணைமந்த்ரமருந்துமுண்டோ
என்னவேயும்மாலேன்ற மட்டின்னும்பாருமென்றான்.

## குலத்தோர் சம்ஸ்தாவுக்கு லாலின்கருத்துரைத்தல்

### ஆரியா.

சொன்னசொல்லதனை வின்னமில்லாமன்
மன்னன்பாலுரைக்க வுன்னினர்மாதோ.

### திபதை-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

### கண்ணிகள்.

நன்னகராயிந்தபங்காளமாளெங்க ளரசே - உங்கள்
நற்றவத்தால்வரும்புத்திரன்லாலுக்கே அரசே
வின்னமெலாமொருபெண்மயலேயெங்க ளரசே - அல்லால்
வேறுநோயென்றுரைக்கறவகையில்லை அரசே
காமித்ததைத்தீர்பபோமென்மேவயித்தியானைக்கொண்டரசே - எந்த
கற்பகருவஞ்செய்துந்துற்குணந்தீருதோ அரசே
காமத்தின்றீக்குக்கருமருந்துண்டோசொல் அரசே - அந்தக்
கன்னியைக்கண்ணினிற்காட்டிலலலோதீரும் அரசே
பட்டங்கட்டியாளப்பாலன்வேண்டுமென்று லரசே - அந்தப்
பைங்கொடியாளெங்கெனத்தேடவேண்டுமெம் அரசே.
பெட்டல்செய்யாதிருமென்றுறுதல்சொன்ன லரசே - தான்
பிடித்தமுயலுக்குமூன்றேகாலென்கிறார் அரசே
இந்தக்ஷணத்திலிதற்கோருபாயமெம் மரசே - செய்யா
திருந்தால்லாலையிழந்திடுவதுநிச்சயம் அரசே
மைந்தனுய்யவகைசொல்குவஙகேளெங்க ளரசே - அந்த
மயிலாளைக்கண்டாலல்லோதுயில்வான்லாலெம் மரசே.

## பாலகௌஹரின்தாய் நல்லறிவுரைத்தல்.

### விருத்தம்.

குடிகளில்வாறுமைந்தன் குணங்களைக்கூறக்கேட்டுக்
கொடிபெறுஞ்சந்திரன்றன்னைக் கண்டதாமரைபோல்வாடிப்
பிடிநடைபாலனைத்தேடிப் பெட்புடன்றருவோமென்று
சடுதியிற்கிலனையேவித் தாயறிவுறுத்திச்சொல்வாள்.

இராகம்-இ-ம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

### கண்ணிகள்.

| | |
|---|---|
| எம்முறையுனக்கிவ் வின்மதி | மகனே |
| இக்காலம்வந்த தறியேன் | மகனே |
| வாறுரும்பெண்ணின்மேன்மையல் | மகனே |
| வைத்தாலாகுமோசொல்வாயடா | மகனே |
| மாவேந்தராகினுமடா | மகனே |
| வன்சேனையாகினுமடா | மகனே |
| தேவேந்திரனுக்கிணைபோடா | மகனே |
| சிந்தையிலாய்ந்துபாரடா | மகனே |
| சகன்றுநல்லொழுங்கடா | மகனே |
| இன்றேவிட்டொழியடா | மகனே |
| வாதென்றனேறுசெய்யவே | மகனே |
| வைத்தாலகத்திலுய்திடேன் | மகனே |
| பேரோங்குமாறனையின்றேனும் | மகனே |
| பெற்றோர்சொல்பேணல்நன்றடா | மகனே |
| சீரோங்கவேமணக்கோலம் | மகனே |
| செய்தேகண்ணாரப்பார்த்தேனே | மகனே |
| பாரிந்தக்காலமீதிலே | மகனே |
| பாராளப்பாலன்வேறுண்டோ | மகனே |
| ஊரந்துமாதஞ்சுமக்கே | மகனே |
| ஈன்றதற்கீதுதானோடா | மகனே |

---

## சப்துருஷா மகனைத்தேற்றல்.

### கொச்சகம்.

வந்துநின்றமைந்தன்முக மாமதியைநோக்கியந்தப்
பைந்தொடியைப்பெந்தப் படியுங்கொண்டுதான்வருவேன்

விந்தைசெறிமைந்தா விசனமுறவேண்டாம்நீ
சந்தோஷமாக்கொலுவிற் சாந்துவிம்மிருப்பாயே.

## லாலரசன் கௌறோரையழைத்துவாரேனென்றல்.

### கொச்சகம்.

சங்கைபெறுந்தந்தாய் தமியேனிதுவரைக்கும்
பொங்குமயன்மோகம் பொறுத்திருப்பேனாகையினால்
உங்களினாலேலாதவ் வொண்டொடியைக்கண்டழைக்க
மங்களவிடைநீர்வழங்கிடினான்போய்வருவேன்.

—()—

## கௌறோரை வரவழைக்கிறேனென்று லாலரசன் தந்தையுந்தாயுமழுது சொல்லல்.

இராகம்-இ-ம்-முகாரி- ஆதிதாளம்

### கண்ணிகள்.

மங்களவிடைகேட்க கருணைசேர்
மைந்தனேயுன்றன் மனம்
எங்களின்பால்வந்ததோ மகனே
யிதற்கென்னசெய்வோமே,
பங்காளகராள் உனையல்லால்
பாலனும்வேறில்லையே
எங்களைநீபிரிந்தாலுயி ரோ
டிருக்கவகையில்லையே.
பெரியோரைப்பேசினேமோ வரும் பிச்சைக்
காரரையேசினேமோ
குருவினைத்தூஷித்தோமோ பரப்பிசெய்
கோளைநேசித்தோமோ.
அடுத்தாரைக்கெடுத்தோமோ ஈன்றதந்தை
அன்னையைக்கடுத்தோமோ
கொடுப்போரைத்தடுத்தோமோ பாதகத்தின்
கொலைத்தொழிலெடுத்தோமோ.
எதென்றறிகிலமே வருந்தத்
பாதகவசனமதே
காதினிற்கேட்டுமனங் கருகிடக்
கலங்கவிதித்தானோ.

கண்ணின்மணியேயுன்றன் மனமெனும்
காவனமீதுலவும்

பெண்ணுங்கிளியிருக்கு மிடமதைப்
பேசுவையேயல்மகனே.

எந்தவிதமுமவள் தனைக்கொண்டு
வந்துன்மனங்குளிர

அந்தமுடனேமணை முடிக்கிறேன்
சந்தோஷமாயிருப்பாய்.

—()—

## லாலரசன் கருத்தையுங்கௌஹாரின் வரலாற்றையும் தாய்தந்தைகட்குரைத்தல்.

### கொச்சகம்.

சந்தோஷமாயிரென்று தந்தைதாய்சொன்னமொழி
மைந்தன்செவிசென்றிடவே வண்மையுடனேநகைத்தே
இந்தவெடுப்புங்களினு லேதுமேயோவேலாதென்
றந்தமுறுங்கௌஹார்வர லாறனைத்துஞ்சொல்வானே.

### திபதை-இ-ம்-காமபோதி-ஆதிதாளம்.

கண்ணிகள்-

தந்தைதாயேசற்றே செவிகொடுத்தே யந்தச்
சரித்திரத்தைக்கேட்பீர் சாற்றுவேனே

அந்நாளிற் சப்ரமஞ்சமீதில் படுத்
தயர்ந்துறங்கிவிழியரையிரவில்

விழித்துப்பார்த்தேனொருவனத்தின்மீதே அதி
மேன்மையானசெம்பொன்னுலும்ரத்னம்

அழுத்துமாளிகையொன்றிருந்ததங்கே அதின்
அழகுரைக்கநாவாயிரம்போதாதே

மாளிகையில்நீலரத்னம்வைத்த சப்ர
மஞ்சமீதுமிருந்ததஞ்சிடாமல்

சேனுந்தந்தைதாயேமரகதத்தால் ஒளி
கெழுமுமென்றனை சபரமஞ்சமதின்

நேரிருக்கக்கண்டேன்மனங்கலங்கி அங்கே
நின்றிறைபாமபுலமபிககொண்டிருந்தேன்

பூரணத்தின்மதியெழுதல்போலும் குமரைப்
புட்பமதுமலர்ந்திடுதல்போலும்

தாரகைகவெண்ணவொளி ஜொலிக்க ஒரு
தையல்கல்லாள் திரைத்தனைத்திறந்தே

காரிருளை மின்னல்கீற்றுமாபோல் என்றன்
கண்ணொளியைக்கவர்ந்தனளையாரே
அன்னம்போலேவெளியில்வந்துநின்றாள் அவள்
அழகையென்னாலவிட்டற்கரிதே
என்னையீன்றோய்கேண்மினெக்களூர்நீர் யாவன்
ஈன்றெடுத்தமகளென்னக்கேட்டேன்
பெண்ணுரைப்பாள்நிகிளுத்தேசமாளும் பெருமைப்
பெறுஞ்ஜலாஹீர்ஷாவெனும்பரிபிராஜன்
கண்மணியாய்வந்தபுதல்வியாகும் என்பேர்
கௌஹரென்பாரிந்திரன் சபையின்மீது
நாட்டியமேசெய்வதெனதுதொழில் என்று
நவின்றென்செய்திமுழுதுங்கேட்டுக்கொண்டே
போட்டிபண்ணுதன்மீமற்காமமையல் என்றன்
புரவலனேயெனைப்புணர்ந்திடென்றாள்
காந்தங்கண்டவூசிபோலுமென்றன் கரும்பின்
கட்டைக்கண்டஎறும்புபோலுமென்றும்
மாந்தர்களிற்சொல்லக்கேட்டிருப்பீர் உங்கள்
மைந்தனுக்குமந்தவிதமேயாகி
இருமனமுமொருமனமதாகி இன்பச்
சுகங்கொண்டாடயானுமிணங்கியோடி
அருமையானஅவள்கட்டின்மீது நானும்
அவளுமோடியெனதுகட்டின்மீதும்
படுத்துல்லாசசரசவார்த்தைபேசி ஆடிப்
பாடிக்கொண்டேயிருந்தகறிவேனையா
எழுந்தேயென்னென்றுரைப்பேனென்விதியை விழித்
தெழுந்துபார்த்தேனம்சுரமனையில்
தனித்தவனானான்மட்டிருக்கவந்த இன்பத்
தையலாளைக்காண்கிலேன்தந்தைதாயே
இனித்தடைகள்செய்யாதவிடய்நான்போய் அவளை
எடுத்துவரவிடைகொடுத்தருள்வீர்

—)⌣(—

## சம்ருதுஷா லாலரசனைப் போகவேண்டாவெனல்.

### விருத்தம்.

விடைகொடுத்தருள்வீரென்ற வேந்திளவரசேயந்தத்
தொடியிடையாளைநான்போய்த் துரிதமாக்கொண்டுவாரேன்

கடிபெறுமதுதேயக் காவலனுயுனக்கு
முடிதரித்திடுவேனிந்த முதுங்காளவாய்மைமந்தா.

—※—

## வாலராசன் தானேபோகவேண்டுமென்று வற்புறுத்தல்.

திபதை-இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

கண்ணிகள்.

தந்தையேசௌஹர்கனைக்கொண்டேவாரேன் என்று
சாற்றுமுரைதவிர்க்கவேண்டுமே
வெந்தணல்முனம்பஞ்சுவேகுமோ பெரும்
வேங்கைமுனம்மானும்போகுமோ
மலைமேலிருப்போரைப்பன்றிகள் பாய
வல்லுவில்லையேயதுபோல்தந்தையே
நவமேவியசௌஹர்தனைக்கொண்டே வர
நடவாதுங்களாலெனதந்தையே
மாதிரங்கொளுஞ்சுமையின்யாரத்தைச் சிறு
மண்ணுங்கட்டிசுமக்குமோஐயா
போதகந்தலைச்சுமையைப்பூனையின் சிரம்
பொறுக்காதெனவுரைப்பர்பூவிலே
மாதுவார்ந்நகரெல்லையிதுவெனச் செலும்
வழியாகிலுமறிவீரோ ஐயா
ஆதலாற்சென்று முடித்துவருவதற் துங்க
காலாகுமோசொல்வீர் ஐயா
அடியேனென்னை நலிதியாகிலும் பட்டல்
பரிவைதனையழைத்துவருகிறேன்*
படைசெய்திடாவிடைதந்தருள்குவீர் பெருந்
தவஞ்செய்தென்னையீன்றதந்தையே.

---

## சந்த்ருதத்தா வாலராசனை வினவுதல்.

விருத்தம்.

சாலவேநகர்முந்தாய் தான்முஞ்செய்தேபூவிற்
பாலகாவுன்னையீன்று பலன்பெற்றேமெனநினைந்தோம்
ஞாலமஞ்சந்தானாலே நீயிங்கிடமுயன்றெங்
கோலமாப்போதுவாயோ கூறுவேயுரைசெய்வாயே.

## லாலராசன் விடையருளல்.

கொச்சகம்.

சீராருந்தந்தையெனுந் தேவிதையான்கொண்டுவரப்
பாராச்சஞ்சாரம் பண்ணும்பரதேசியைப்போல்
ஏராரும்வேடமெடுத் தேகிவிகினைதகர்க்குச்
சேரவிடைதாருந்தவஞ் செய்தின்றதந்தையரே.

## சந்துருதஷாவுக்கும் லாலராசனுக்கும் சம்வாதம்.

திபதை-இ-ம்-காபி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

(சம்) விடைதந்தருள்வாயென்று விளம்பும்பாலகாவுன்னைத்
தடைசெய்யாதேகேளென்று சாற்றுவதழகோ

(லால்) அழகோவென்னுயிரான அரிவையின்மயலென்னும்
நிழலாலுழலுவதும் நெறியோதந்தையாரே

(சம்) நெறியரசுபுரிய நீயிருக்கிறாயென்று
விறலாயிருந்தேன்விட்டுப் பிரியவோமகனே

(லால்) பிரிந்தாலுநான் அந்தப் பெண்ணைக்கொண்டுவந்து
வருந்தாதரசிருப்பேன் மாதாபிதாவே

(சம்) பேயாகிலும்பெற்ற தாய்வார்த்தைதள்ளாதே
நீயாராய்ந்திடவில்லையோ வேதாய்மகனே

(லால்) ஓதவோகாமுகர்க் குறுங்குணந்தெரியாமல்
ஏதேதோசொல்வதேன் றிடுமோதந்தையரே

(சம்) தந்தையென்றாய்வெண்ணெய் திரண்டுவரச்சேதாழி
கந்தவுடைந்ததென்னுங் கதையாச்சேமகனே

(லால்) கதையிற்கேட்டதில்லையோ காமுகர்படுந்துன்பம்
அண்டக்கிள்ளைக்கிரையென் றறைவாரோவரசே

(சம்) ஆருக்குமண்பிள்ளை யானாலுந்தன்பிள்ளை
பாருக்குள்பெரிதென்று பகர்வாரேமகனே

(லால்) பகர்வதென்னதிரட்டிப் பாலதுகுமட்டுமோ
செகமீதிளைஞர்குணஞ் சிந்திப்பீர் அரசே

(சம்) அரசெனும்பெயரொன்றே டற்றுப்போகலுந்த
உரைசொல்லத்தலைப்பட்டா யுத்திமோமகனே

(லால்) உத்திமோயுத்தியோ வென்றுந்தெரியவில்லை
சித்தமிரங்கிட்டேபோகச் செய்வீர்தந்தையரே.

## லாலரசன் தன்பிரயாணத்தைப்பற்றி வற்புறுத்தல்.

### கொச்சகம்.

மாதுரபலாற்பெருகும் வாஞ்சையினுல்லாலரசன்
தந்தையினைநோக்கியிடை தாராதிருப்பீரெனில்
வாதைசெய்தேயென்னுயிரை வாளுக்கிரையாக்கிடுவேன்
போதவருள்வீரேயென பூவைதனைக்கொண்டேவருவேன்.

## சப்ருத்ஷா சொல்லல்.

### விருத்தம்.

சந்ததியிந்தவாறு சாற்றிடச்சப்ருத்ஷாவும்
உந்தனைப்பிரிந்தாலென்ற னுயிர்பிரிந்திடுமென்றேங்கி
சிந்தையில்வருத்தமுற்றுச் செல்வனேவிண்ணிலாவி
கந்திடாதுணையென்றும் நாயனேகாப்பானுக,

## லாலரசன் பிரயாணவாரம்பம்.

### கொச்சகம்.

தந்தைசொன்னவார்த்தைசெவி சாரவிடையீதெனவே
மைந்தன்லாலிளவேந்து மாமகுடமோடணிந்த
அந்தமணிராஜவுடை யாவமுரிந்தேபகிரின்
சொந்தமுறுங்காவியுடை பூண்டான்றுரிதமதாய்.

## லாலரசன் பிரயாணங்கண்டு தந்தைதாய்புலம்பல்.

### கொச்சகம்.

காவியுடைபூண்டிடபங் காளநகராளுஞ்சப்ருத்
ஷாவுமவர்தேவியுந்தஞ் சந்ததிலாலைப்பார்த்தே
ஆவிகர்மைந்தாவெம்மருவிழிமுன்னிவ்வுடையை
மேவிடவேயாங்கள்செய்தவ மென்றவமோவென்றழுதார்.

### தியல-த-இ-ம்-ஆகிரி-ஆதிதாளம்.

### கண்ணிகள்.

நருமணிமுடிசூடிச் செகமதையாள்வாயென்று
நாமெண்ணியிருந்தோமடா — அடமகனே
மகனேகாவிக்குல்லாவை தலைமீதிலேதரிக்க
மனதுதுணிந்திடுமோ — அடமகனே
மத்தாபியுடைதரித் தித்தால்மீதுலவ
மகிழ்ச்சியாய்ப்பார்த்திருந்தோம் — அடமகனே

இத்தருணத்திற்காவி வத்ரவுடைதரிக்க
எவ்விதஞ்சகிப்போமடா ஆடமகனே
நரபதியோரெல்லாமுன் னடிபணிவாரென்றெண்ணி
நன்மகிழ்வடைந்திருந்தோம் அடமகனே
பரதேசியுடைதன்னைத் துரிதமுடனணிந்தால்
பார்க்கமனதுவருமோ அடமகனே
எங்களிருவருக்கு மிருப்பாய்துணையாயென்ற
என்ணம்வீணாச்சுதடா அடமகனே
சிங்காசனமுமெங்கள் பொங்குஞ்செல்வங்களெல்லாஞ்
சேர்வதாரைநீ சொல்லடா அடமகனே
கிளியைவளர்த்துப்பூனைக் கிரைகொடுத்தகதைபோற்
கிருபையா யுனைவளர்த்தும் அடமகனே
பழிகாரனெனைப்பெயர் படைக்கநீசெய்தபெரும்
பாக்கியமிதுதானோ அடமகனே
பெற்றோரும்பலனடைந்தோம் பிரியோமினிநாமென்னப்
பேராசைகொண்டோமடா அடமகனே
சற்றுமிரக்கமின்றித் தாய்தந்தையைவெறுத்துத்
தனியேகமனம்வந்ததோ அடமகனே

## கவிகூற்று.

### விருத்தம்.

வேந்திளவரசன்லாலு மீறியமையலாலே
ஏந்திழையானகௌஹ ரெங்கெனத்தேடநாடிச்
சாந்தணிமார்பில்அல்பா ஸைலியுமாட்டியேதே
சாந்திரம்போகவேண்டி தக்கவாரம்பஞ்செய்தான்.

### லாலரசனின் தாய் புலம்பல்.

திபதை-இ-ம்-காம்போதி ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஐயோகோ என்றன்சுதனே யாசைமகனே ஆபுதல்வனே-மிகும்
அந்தமானமடந்தையாசைதொடர்ந்ததால் இந்த
அன்னைதந்தைசொல்லும் வின்னமாக ஐயோகோ
பர்தாபமீதில்சோபம் பெரியபாப மல்லவோடா-வயிறு
பற்றுதேயிதுபுத்தியோசொலும்புத்திரா படு
பாதகம்பெரியபாதகமென் ஐயோகோ

அந்தகதேமனதுமிஞ்சகதேதுயருந் துஞ்சவோசொல்வா என்செய்வே
(னுன்னை

அல்லாதோர்பிள்ளையில்லையே யென்னதொல்லையே இதை
அறிந்தும்பிரியமன மிருந்ததென்ன ஐயோகோ

எதெல்லாந்தருமமல்லடா அரசிலிரடா என்துயர்தீரடா-கொஞ்சம
என்றன்மீதிரக்கந்தாருமென்சுந்தரா உன்னை
என்றபலனிதுவோதோன்றலேசொல் ஐயோகோ

விட்டாஇவ்வளவோடா வுன்மதியடா சொன்மதியடா-காட்டில்
வெள்ளமாய்வருங்கள்ளர் தாமுயிர்கொள்வரே இதை
வெறுக்குமோமனது பொறுக்குமோசொல் ஐயோகோ

வனமீதினைதுபாதம் பொறுத்ிடாதே யென்செய்குவாய்-துட்ட
வல்விலங்கினை வெல்லவையோ வுன்னைக்கொல்லுமே எந்த
வகையிலுன்னைப்பிரிந்துவகைகொள்வேன் ஐயோகோ

லாலரசன் பிரயாணத்தைப்பற்றி ஊரார்புலம்பல்.

விருத்தம்.

இவ்வுரையூரார்காதி லேறவேயொருங்குகூடிப்
பௌவமேர்திரண்டுவந்து பார்த்திவன்லாலைநோக்கிக்
கவ்வணிலாலேமெரங் கனைவிட்டுப்பிரிவீராகில்
எவ்வகையுய்வோமென்றே யேங்கியேபுலம்புவாரே.

திபதை-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

எங்கள்குடிக்கெல்லாமெங்கலெனவேவரும் லாலரசே-உம்மை
எவ்விதம்பிரிந்திந்தவூரில்வசித்திருப்போம் லாலரசே
சிங்காசனத்தரசு செய்வாயென்றிருந்தோமே லாலரசே-நாங்கள்
சீர்கெடவேபகிரவேடமெடுத்தாயே லாலரசே
மழையில்லாப்பயிரைப்போல்வாடவைக்காதேயும் லாலரசே-உந்தன்
மகத்துவமல்லாது மறுத்தொருகதியில்லை லாலரசே
இளைத்தகுடிகளான எங்கள்முகத்தைப்பாரும் லாலரசே-என்றால்
ஏழைசொல்லம்பலமேறுமோ யென்செய்வோம் லாலரசே
கன்னினந்தனைக்காக்கும் வெளிபயிரைக்காக்கும் லாலரசே-என்று
தருமநூல்சொன்னதைச் சத்தியமறிந்திரே லாலரசே

உம்மினந்தமைக்காக்க யாருண்டிசொல்லுங்கள் லாலரசே-நீரும்
உறவுபோலிருந்திப்போ குளவிபோல்கொட்டுறீர் லாலரசே
பெருமரஞ்சுற்றிய வல்லியென்றிருந்தோமே லாலரசே-எங்கள்
பெருமைகுலேயப்பெரும் வனமேறகாடுநீர் லாலரசே
தருமமல்லவிதெல்லாந் தயங்காதெங்களைக்காத்து லாலரசே-உந்தன்
தவசிறிக்குடையிற்குள் ளமைதராவேவண்டுங்காணலாலரசே

லாலரசன் ஊராரைத்தேற்றல்.

விருத்தம்.

புலம்பிட ஊாரெல்லாம் புரவலன்லாலும்பார்த்துக்
கலங்கிடவேண்டாஞ்சொற்ப காலத்திற்றிரும்புகின்றேன்
நலமுறுந்தாயார்தந்தை நகர்மூதல்பாதுகாத்துப்
பலமுடன்வாழ்வீரென்பால் பண்புடனவிடையுந்தாரீர்.

லாலரசன் பிரிதலைப்பற்றித் தாய்தந்தையர் புலம்பல்.

கொச்சகம்.

தாரீர்விடையெனுஞ்சொல் தந்தைதாய்கேட்டவுடன்
பாரில்விழுந்தேயுருண்டிப் பாலகனையாங்கள்பெற்ற
நேரப்பலனிவ்வளவோ நிற்பரன்செய்விதியோ
ஆரைநொந்துகொள்வதென்றே யந்தோவெனவழுதார்.

தரு-இ-ம்- ஆனந்தபைரவி ரூபகதாளம்.

பல்லவி.

அந்தோ சுதனே
யாரைப்பாலனென்றழைப்போ மகனே

அநுபல்லவி.

உந்தனையிழந் திருந்துபுலம்ப
உனக்குமனம்வந்ததற்கென்செய்குவோம் அந்தோ

சரணங்கள்.

கண்ணுள்பாலா காணபதெந்தநாள் கவனுவாய்சீலா
பெண்ணாலேலாப் பெரியபாடெடுத் தாயடாலோலா
அண்ணலேகேளாய் பங்கல்லரப்பங்கை
அடைவதுமொரு மடமையல்லவோ அந்தோ

ஐயோவிதியோ அரசையிழக்க விதவுந்ததியோ
பொய்யோசதியோ போகத்துணிவதென்னமதியோ
வையகத்தோர்சொல்வார் போகாதவூர்க்கு
வழிதேடாதேயென் றெழில்பெறும்பாலா அந்தோ

சிந்தாமணியே செல்வமேயென தின்பக்கனியே
கந்தாவணியே நகரிழப்பது நலமோபிணியே
சுந்தராவே சூந்தரஞ்செலத்
துணியவில்லையே மனதுமகனே அந்தோ

லாலரசன் கௌஹரைத்தேடிப்புறப்படுதல்.

விருத்தம்.

தந்தைதாயுறவின்முறை யூராரெல்லாந்
தனதுசிம்மாசனமிழந்துதனியேகானில்
கந்தமலரணிகுழலாள் கௌஹர்மீது
காதலினாலேகுவது கருமமல்ல
இந்தவெழிற்றேயமதை யாளவேண்டு
மென்னவேலாலரசன் செவிவாங்காது
கந்தைவஸ்த்ரமதையணிந்து மனையைவிட்டுக்
கடந்திட்டான்வனமேற நடந்திட்டானே.

திபதை-இ-ம்-பூரிகல்யாணி மிசுரதாளம்.

கண்ணிகள்.

திசைபுகழ்பங்காளநகர் செழிக்கவாழ்சம்ஷுதுஷாவின்
வசையகன்றபாதுஷாலால் வனத்தைநாடியேகினரே
தந்தைதாயுறமுறையோர் சஞ்சலித்தழுதுநிற்க
அந்தமார்கௌஹரைநாடி யாசையாநடந்தனரே
அரசுமணிமுடிபடைக ளானைசேனைமுதலகற்றி
விரசுடன்கௌஹரைத்தேடி மேன்மையாநடந்தனரே
குடிபடைகள்வாய்விட்டைய கோவெனப்புலம்பிநிற்கப்
பிடிநடைகௌஹரைத்தேடிப் பிரியமாநடந்தனரே
காலிற்கல்லுமுள்ளுந்தைக்கக் கதிரவன்முகத்தைவாட்ட
மேலில்வேர்வைதாரையோட வீறுடனடந்தனரே
தையல்கௌஹர்மீதிற்கொண்ட மையலால்துன்பங்களெல்லாந்
தூய்யலாலரசனுக்குத் தோற்றிடாமலேகினரே.

லாலரசனின் பிரிவாற்றாமையால்

தாய்தந்தையர் புலம்பல்.

விருத்தம்.

காவலன்லாலுமந்தக் கன்னிகைகௌஹர்மீதில்
தாவியமையலாலே தன்னரசிழந்து காட்டில்
மேவவேதந்தைதாயார் மெலிந்துதம்மகனையெண்ணி
ஆவியேசுதனேயென்றே யலறியேபுலம்புவாரே.

திபதை-இ-ம்-ஆனந்தபைரவி மிசரதாளம்.

கண்ணிகள்.

கண்ணின்மணியாகிய காதலனே காதலனே-காட்டில்
கன்னியின்மயலாலே யேகினனே யேகினனே
எண்ணியபோதெல்லா மனமுருகி மனமுருகிப்போகு
தென்செய்வோமீர லெல்லாங்கருகி யெலாங்கருகி
பர்தக்குறடில்லாம னடந்திடானே நடந்திடானே இந்தப்
பாதகவெங்களை மறந்திடானே மறந்திடானே
காதலியாசையால் மறக்கலாச்சே மறக்கலாச்சே அவன்
காவலத்தன்மையை யிழக்கலாச்சே யிழக்கலாச்சே
நாடுநகரமெல்லாம் பாழிலாச்சே பாழிலாச்சே எங்கள்
நலங்களதவங்களெல்லாம் வீணிற்போச்சே வீணிற்போச்சே
காடுவனங்கள்மீது நடக்கலாச்சே நடக்கலாச்சே காலில்
கல்லுமுள்ளுங்குத்தப் பொறுக்கலாச்சே பொறுக்கலாச்சே
கள்ளக்குடிகளுண்டே யென்செய்வானோ வென்செய்வானோ வருங்
கரடிபுலிக்குமகன் முன்செல்வானோ முன்செல்வானோ
பிள்ளையிருக்குதென்ற பெருமைபோச்சே பெருமைபோச்சேநாங்கள்
பித்தம்பிடித்தவர்போ லழவுமாச்சே யழவுமாச்சே.

லாலரசனின் தாய்தந்தையர் ஆண்டவனிடத்துப்

பரஞ்சாட்டல்

விருத்தம்.

சாவப்போகிறவனுக்குச் சமுத்திரங்கணைக்காற்றண்ணீர்
ஆவதுபோலேலாலு மரிவையால்வனத்திற்சென்றான்
பாவியெங்களினலொன்றும் பயனில்லைபரனேயன்னோன்
ஆவியைக்காப்பாயென்றே யழுதுசஞ்சலிக்கலுற்றார்

இயைந-இ-ம்-தேசிகதோடி ரூபகதாளம்.

கண்ணிகள்.

தற்பரப்பொருளே தகுதிசேர் சச்சிதானந்தமே உன்றன்
கற்பனைக்கடங்கு மெங்களுக்கு கருணைபுரிகுவாய்
சொற்கேளாப்பிள்ளையாற் குலத்திற்குத் துன்பமேயலது பெறும்
நற்பயனில்லையென்றறிஞோர்கள் நவிலக்கேட்டிருந்தோம்
இந்தநாளினினாங்க ளீன்றிடும்பாலகன் அந்த
அந்தமார்கௌஹர்மீதி லாசையாகியே
தந்தைதாய்தடுத்துங் கேளாமலேதனியேகானகத்தில் அவன்
உத்துமயிலிறற்சென்றா னெங்களுடையவா அபயம்
காட்டிற்கரடிகள்முதல் மிருகங்களடருமேஅது
வாட்டிடாதுன்றனடைக்கலம் மகனைக்காத்திடுவாய்
ஆட்டிறக்கள்ளராற்சுதனுக் கபாயம்வந்திடாமல் பெரும்
ஏட்டிலடங்கிடாவிறையவா யென்றுங்காத்திடுவாய்
இன்றுகொடுத்தெங்கள்சுத னந்தவேந்திறையிடத்தில் நன்றாய்ச்
சென்றுமீளுமட்டுமக னுக்கோர் சிந்தனைவந்திடா
தென்றுமுன்னிடத்திலடைக் கலமேகபெரியவா நாங்கள்
கன்றிடாதெங்கள்மைந்தனையுங் கண்ணிற்காட்டுவாய்.

லாலரசன் காட்டினின்று கௌஹறை நினைத்துப்
புலம்பல்.

விருத்தம்.

அன்னைதந்தையிவ்வாறு புலம்பியேங்க
  யலறியடைக்கலமிறையே யுன்பாலென்று
பின்னமறவுரைத்திவரிங் கிருக்கக்காட்டில்
  மேவியலாலிளவரசன் கௌஹர்மீதில்
மன்னுமயலாலல்லும் பகலுமந்த
  வனமதிலேநடந்திடுங்கால் மாதையெண்ணிக்
கன்னன்மொழிமானையென்று காண்பேனென்று
  கலங்கினனமதியிழந்து மலங்கினனே.

௬௩-இ-ம்-இந்துஸ்தானி பியாகு தீப்சந்திதாளம்.

பல்லவி.

மாதைசந்தியாருண்டோசொல்வாய் கௌஹர்பரி

அநுபல்லவி.

ஓசைக்கேன்காதுழல்வதுகாணேசரிபரீ — ஆசை

சரணங்கள்.

உன்னாலென்னன்னைதந்தையூராரோடிழந்துநான்
சின்னாபின்னமடைவதோ சொல்வாய்சரிபரீ — ஆசை

நாடாளநான்பிறந்தும் நடந்தேயுன்னால்பெருங்
காடாளனாயமோசொல்வாய் கௌஹர்பரிபரி — ஆசை

பாலையின்வேதனைசற்றும் பாராமற்றேடியே
ஆலையின்கன்னலாவதோ சொல்வாய்சரிபரீ — ஆசை

அநியாயமாயிப்பாழ்வனத்தே யாயுள்நாளெல்லாந்
தனியாயலைவதோசரி கௌஹர்பரிபரீ — ஆசை

விருத்தம்

கானகமீதில்வந்து காவலன்லாலுங்கௌஹர்
மானவிழிமாதுமேற்கொண் மாமயற்களவில்லாமல்
நானுன்றன்மாரியென்று நவின்றின்பமளித்ததெல்லாம்
ஈனமின்மனதிலெண்ணி யெண்ணியேபுலம்புவானே

திபதை-இ-ம்-காபிரூபகதாளம்

கண்ணிகள்.

பெண்ணேயுன்னையா னெண்ணியெண்ணியேபேதலிக்குதே
மனங்காதலிக்குதே
நீயேயென்மணவாள னென்றுதானினைக்கவில்லையோ
கட்டியணைக்கவில்லையோ
அன்னைதந்தையறியா தே றனையணைவனென்றையே
என்னையிணைவேனென்றையே
சும்பனஞ்செயக்கும்பமுலையைத் துறக்கேனென்றையே
என்னைமறக்கேனென்றையே
புருஷனியலால்வேறுண்டோவெனப் புகழ்ந்துநின்றையே
இப்போதிகழ்ந்துநின்றையே
நவரத்தினசப்பிரமஞ்சத்திலேசஞ் செய்தாயே
இப்போமோசஞ்செய்தாயே

காதலாயுன்னைத்தேடியே காட்டிற்கலங்குதேபெண்ணே
மனம்மலங்குதேகண்ணே
கௌஹரேயுன்னைக்காண வெத்தனைகாலமலைவனே
வீணிலேலாதுலைவனே
ஆதியேயெனக்கருள்செய்வாருனையன்றிவேருண்டோ
செயுமன்றிவேருண்டோ
ஆகலாலெனைக்காப்ப தின்புரமபயமபயமே
யிருமபயமபயமே.

---

விருத்தம்.

லாலிளவரசனாறு விதஞ்சொல்லிப்புலம்பிக்காட்டில்
ஓலமிட்டலைந்துகௌஹரொண்டொடிதனைக்காணாமல்
வாலிருசுடர்களென்ன வயங்கியமாதேயெந்தப்
பாலினிற்காண்பேனென்று பதறுவான்கதறுவானே

தருஇ-ம்-இந்துஸ்தானி-ஜெஞ்ஜோட்டி-ஆதிதாளம்

பல்லவி.

மதியையநிகர்வதனமாதுகௌஹரையிந்த
வனமெங்குந்தேடிநான்வாடுவனே

அநுபல்லவி.

கதியேகிளியேகௌஹரேயென்று
காலமெல்லாமுழன்றேகுவனே மதியை

சரணங்கள்.

காடோசெடியோகானமதோஎந்தக்
கடலோ அறிகிலன்மடமயிலே. மதியை

கனலுகும்பாலையில்கௌஹர்கௌஹரேயென்ற
அனலின்மெழுகதுபோலாகுவனே மதியை

பஞ்சினுமெல்லடிபதறுதேமுள்ளினால்
அஞ்சுதேவழிநடைக்காற்றுவனே மதியை

வடக்குறிகாணவேவழிநடக்கினும்வயி
றடுக்குமபசிதாகத்துக்காற்றுவனே மதியை

வனவிலங்கினமெனைவாதுசெய்வதைக்காண்கில்
மனஞ்சகிக்காதேயந்தமனமகட்கே மதியை

இனியென்னசெய்குவேனிறையவனேகௌஹர்
ரெங்கனத்தேடிநானேகுவனே மதியை

லாலரசன் வனவிலங்குகளைக்கண்டு பயந்து புலம்பல்.

விருத்தம்.

தோன்றலிந்தவிதம்புலம்பி கானகத்திற்
றுரிதமுடன்விசனமெனும் போர்வைபோர்த்துக்
கான்றவழுங்கூந்தலினு ளாசைசந்தாது
கடுகமுனஞ்செலமோக யானையேறித்
தோன்றுமனவருத்தமெனுஞ் சேனைசூழத்
தொலைந்துவழியேகிநெடுங் காட்டிலாகச்
சான்றவரெல்லாமயங்கும் பலவிதாதி
சயங்கண்டான்கண்டவுடன் பயங்கொண்டானே.

திபதை-இ-ம்-முகாரி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

சோதியேயிவ்வடியான்றனைக்காத்திடுவாய் என்னாதிபெரியவா
துன்பமொன்றும்மணுகா திந்தக்காவனத்தே
ஓதிமப்பெடையுறையுந்தடாகங்களும் என்னாதிபெரியவா
ஒண்பொழிலுங்கடந்தேனுன்கிருபையினால்
சாலமருதங்குறிஞ்சியுநெய்தலுமே என்னாதிபெரியவா
தந்திரமாய்க்கடந்தரங்கானலுறும்
பாலைவனங்களிற்பாதங்கருகிடவே என்னாதிபெரியவா
பையநடந்துகடந்திவ்வனத்தில்வந்தேன்
காரானையோசையென்காதினில்கேட்கிறதே என்னாதிபெரியவா
கண்டாலுயிர்வதைகொண்டிடுங்காத்திடுவாய்
கோரமதாய்ச்சிங்கம்யாளிவருகுதிதோ என்னாதிபெரியவா
கோறல்செய்யாதெனைக்காத்தருள்கோமானே
மந்தியும்பன்றியுமிந்தாவருகுதையோ என்னாதிபெரியவா
வாதுசெய்யாதெனைப்பாதுகாப்பாயிறையே
விந்தையாய்க்காண்டாமிருகமதோவருகுதே என்னாதிபெரியவா
மேவுமென்னீரல்பதறுதேகாத்திடுவாய்
எட்டீரடிவேங்கைக்கிட்டவருகுதையோ என்னாதிபெரியவா
என்னுயிர்காப்பதுமேகனேயுன்புறமே
துட்டமிருகம்விதவிதமாய்வருதே என்னாதிபெரியவா
தூரத்திலேகத்தொலைப்பதுன்பாரமதே

நீண்டகருமலைபோலொத்ததேவுகளும் என்றுதிபெரியவா
நிட்டூரஞ்செய்கின்றதுட்டக்கணத்திரளும்
தீண்டவாராதெனைக்காப்பதுநுங்கடமை என்றுதிபெரியவா
சிறியஞவியடைக்கலமுன்னிடத்தே
கல்லுமுள்ளுங்குத்திக்கொப்புளங்கொண்டதனால் என்றுதிபெரியவா
காலடிவைத்திடவேலவுங்கூடுதில்லை
கொல்லுதேதாகங்கொடும்பசியோர்புறத்தே என்றுதிபெரியவா
கொற்றவாயென்னிடம்வெற்றியேதந்தருள்வாய்

## லாலரசன் கௌஹரைக்கண்டீரோவென விலங்கினிடத்துவினுதல்.

### விருத்தம்.

பலவிதமாவரு பெரியமிருகவார
பாரமதைலாலரசன் பார்த்துநாமு
மலைவதனல்காடிவந்த கருமங்கைக்கு
வந்திடுமோவெனமனதின் மதித்துப்பார
மலையதுவும்விழுந்தாலுந் தலையேதாங்கும்
வாறென்பார்போனுமு மயங்கலென்றே
இளகியபெண்கௌஹர்தனைக் கண்டீரோவென்
றெடுத்திட்டான்வினவுமொழி தொடுத்திட்டானே.

### இபதை-இ-ம்-ஜெங்கலா-ரூபகதாளம்.

#### கண்ணிகள்.

கானகத்தில்வாழும்புள்ளிமானினங்களா-என்றன்
காதலிகௌஹரைக்கண்டேனென்றுசொல்வீரா
வானரக்குலங்களேயென்மாமயற்கிசைந்த-அந்த
வஞ்சியாள்கௌஹரைக்கண்டீனென்றுசொல்வீரா
பொங்கியமிருகராஜசிங்கராசிகாள்-என்றன்
பூவையாள்கௌஹரைக்கண்டேனென்றுசொல்வீரா
துங்கமுறும்வேங்கைப்புலியின்குலங்களா-என்றன்
தோகையாள்கௌஹரைக்கண்டேனென்றுசொல்வீரா

மாணிடர்கலங்கவரும் யானையின்குலமே-அந்த
மாதுகௌஹர் தன்னைக்கண்டேனென்றுசொல்வீரா
சானுவிலுலாவிவருந் தேனுவின்குலமே-என்றன்
னைபல்கௌஹர்தன்னைக் கண்டேனென்றுசொல்வீரா
காதிருளையோட்டும்பெருங் கரடியின்குலமே-அந்தக்
கரிகைகௌஹரைக் கண்டேனென்றுசொல்வீரா
பாரினிலுவக்கும் பசுவின்குழாங்களா-அந்த
பாவையாள்கௌஹரைக் கண்டேனென்றுசொல்வீரா
கண்டஜெந்திடத்திலெல்லாம் விண்டுகேட்டேனே-கௌஹர்
கன்னியைக்கண்டதா யொன்றுஞ்சொல்லவில்லையே
எண்டிசைக்கும்வல்லபெரி யோனேயென்செய்வேன்-அந்த
வந்திழையிடத்தில்நான்போய்ச் சேர்ந்திடற்கருள்வாய்

## லாலரசன் இருள்வனம்புகுதல்.

### விருத்தம்.

இத்தகையா லாவிரண்டு வருடமட்டு
மேந்திழையாள் கௌஹரெங்கே யென்றுதேடிச்
சித்தபிரமை கொண்டவன்போல் விலங்கினோடென்
தேவியைக் கண்டீராறு செப்புமென்னச்
சந்துருவாமவைகளொன்றுஞ் சாற்றாதாலே
தலைவிதியோ வெனவழுது நடக்கும்போது
யுத்தியதா யிருள்வனமொன் றெதிரேகண்டான்
பார்த்திட்டான் செலவழியைப் பேர்த்திட்டானே.

### தரு-இ-ம்-காம்போதி-ரூபகதாளம்.

### பல்லவி.

வள்ளல்லாலினவரசனு மிருள்வனம்புகுந்தனனே
மங்கைகௌஹரின்மயலரைமிஷமுமறந்திலனே

### அநுபல்லவி.

எள்ளளவுநீங்காவுள்ளமதின்மோக
வெள்ளமதனுலேவிதிதள்ளிடத்தள்ளாடியே வள்ளல்

சூரணங்கள்.

அக்கியின்ஜொளிமழுங்குமிருளிலறியாதேகிடவும்
அடிக்கடிமனந்திடுக்குற்றுடலமயர்தலாகிடவும்
அஞ்சிடக்கச்செம்மிஞ்சடியின்முட்கள்
குஞ்சிடக்குத்தக்குத்தவஞ்சிமயலால்வாடி — வள்ளல்

கரியமலைபோற்பெரியகாகமுங்கரடிபுலிகளுங்
காட்டானைசிங்கமிருகராசிகள்கணக்கிலாததுவுங்
கத்துமொலிகாதுமெலத்துதேயிப்போதிற்
சித்தமயங்காதென்னைநித்தனேகாப்பாயென்றே — வள்ளல்

இந்தப்பெரியவிருண்டவனத்திலெப்படிநடப்பேன்
ஈட்டிபோல்முள்ளு மாட்டுதேகாலிலெவ்விதங்கடப்பேன்
எப்பொருளுக்கும்பரப்பொருளே என்மேல்
தப்பிதம்வாராதுகாத்திப்பொழுதாள்வாயென்றே — வள்ளல்

தையல்கௌரையெடுப்பேனென்றசொல்சபதநாள்முடிவோ
தமியேனுயிரையிழக்கிடவருஞ்சாவுநாள்முடிவோ
தக்கநருமானேமிக்கபெரியோனே
இக்கதியிலானேனெனக்குத்துணைநீயென்றே — வள்ளல்

கவிக்கூற்று.

அகவல்.

இவ்விதம்புலம்பி யேநல்லாலரசன்
மெனவலங்குழலாள் மாமயலாலே
இவணீரில்லாச் செறியிருள்வனத்தில்
கவனமாய்ப்புகுந்து கத்தனின்பரமா
வருத்தமேயன்றி மகிழ்ச்சியற்றவனாய்க்
கருத்தினின்மவுத்தே ஹக்கெனக்கருதி
கலைதனைமுட்டித் தரையினிர்புரண்டு
மெலிந்துடலிளைத்து மெலமெலநடந்தும்
தாகத்தினாலே தணலில்வாடிலைபோல்
ஆகமுமொடுங்கி யசதியாய்விடவும்
கண்ணீர்தனையே தண்ணீராக
எண்ணியேகொண்டே யெவற்றையுமறந்தே
அழுத்தசேவலைப்போ லடிக்கடி துடித்தும்

வெறுக்கிடாக்கௌஹரின் விருப்பத்தினாலே
தயிரியமானது தன்மனவலிமையை
அயர்விலாதருள வாங்காரத்தோடு
வருந்துயர்க்கஞ்சா வழிநடைகொண்டே
இருண்டிடும்வனம்விட் டேகவேயிப்பால்
பேராதகீர்த்தி பெறும்பரிககாசி
ஹீராவின்செய்தி யினத்துவங்காண்க.

## ஹீராப்பரிவருதல்.

கொச்சகம்.

சீர்த்திபெறுங்காமுகர்கள் சேவடிக்குந்திவ்யமுகம்
பார்த்திசைக்குமேவல் பணிவிடைக்குமாளாகப்
பார்த்திவரெல்லாமயங்கப் பாங்கியர்கள்சூழ்ந்துவரக்
கீர்த்திபெறும்ராஜபரி ஹீராவும்வந்தனளே.

தரு-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

சுந்தரமா சுகுணபரி ஹீராவந்தாள் சுந்தரமா

அநுபல்லவி.

நந்தனமாளிகைமீதி ஜகரீகமாயுலவு
அந்தமணியாபரண மேயணிந்தெழுந்து சுந்தரமா

சரணங்கள்.

| | |
|---|---|
| வச்ரரத்னத்தாலெலவரு | மெச்சுமகுடம்தரித்துப் |
| பச்சைமாத்தாபியாலுடை | யேயரிந்துடுத்தி-சுந்தரமர் |
| நெற்றிச்சுடிகையும்பூட்டி | நீலத்திலதமுந்தீட்டி |
| நற்றவரெல்லாமயங்க | வேநடைநடந்து-சுந்தரமா |
| காதிற்குண்டலமிலங்கக் | காமுகர்மனங்கலங்க |
| வாதுவினைசெய்விழியி | லேமையுமெழுதி-சுந்தரமா |
| மூக்கினில்புலாக்குநத்து | மோகனமூக்குத்தியிட்டு |
| வாக்கினியவசனத் | தோடசைந்தொசிந்து-சுந்தரமு |
| கண்டசரப்பளியுந் | திரண்டசவடிசரமும் |
| அண்டர்கண்மயங்கப்பல | வாகலனணிந்து-சுந்தரமா |

முத்துநிலைப்பச்சைவைர மோகனமாலையுநவ
ரத்னகண்டிகையால்நிரை யாயுலங்கரித்து-சுந்தரமா

புற்புதக்கொங்கையின்மீது பொற்சரிகைவாரணிந்தே
அம்புகமணிவடகை ளாடிடவேவொயிலா-சுந்தரமா

தெய்வலோகமெல்லாம்விலை செய்யுநவரத்னமிட்ட
கையில்கடகமுங்கணை யாழியுமணிந்து-சுந்தரமா

கொங்கைமதயானையல்குல் குழியில்விழாதிடையில்
சங்கையுடனேரத்ன வொட்டியாணமேதரித்து-சுந்தரமா

தழலடிசிலம்புகள் கலிக்கத்தனதெழில்சேர்
பொழிலில்பரியிராஜ பூவையும்வந்தனளே-சுந்தரமா

## ஹீராப்பரி பூக்கொய்தல்.

### விருத்தம்.

பரிக்குலமாதுஹீரா பைம்பொழின்மீதுவந்தே
அரிக்கிளர்வனமுந்தூங்கு மரமனையனைத்தும்பார்த்துத்
தருக்கொடுபூம்பந்தாடிச் சந்தோஷமணிவான்வேண்டித்
திருக்கிலாத்தோழியோடு செழுமலர்கொய்குவாளே.

### திபதை-இ-ம்-காம்போதி மிசுரதாளம்.

### கண்ணிகள்.

தண்டடப்பொழிலில்பலவிதது காதலாவதைப்பாரென் தோழி
வண்டுமொய்த்திடுமுன்பறித்து மலர்ப்பந்தாக்கிடுவோமென் தோழி
கொன்றைதும்பைமலரிதோகொஞ்சங்கொய்திட்டேனிதைப்பாரென்
மன்றலாருமிதாலோர்பந்தும் வனைந்துகொண்டிடுவாயென் தோழி
அல்லியாம்பலினிவிதோகொஞ்சமரிந்துகொண்டேனினியென்தோழி
மெல்லியேயுனக்கோர்பந்துமீதில் விரைந்துசெய்திடுவாயென் தோழி
கொங்குடன்வுலைமலரிதோ கொஞ்சங்கொய்துவந்தேனென் தோழி
மங்கையேயுனக்கோர்பந்துமீதில் வனைந்துதந்திடுவேனென் தோழி
வில்வமோடிருவாட்சியுங்கொஞ்சம்விரைந்துகொய்தேனினியென்தோ
செல்வியேயுமோர்பந்தாயுதைச் செய்துகொண்டிடுவாயென் தோழி
புன்னைசண்பகமாமெனுநறைப்பூவிற்கொஞ்சங்கொய்தேனென்தோழி
அன்னமேயுனக்காமிதாலோர்பந் தாக்கிக்கொண்டிடுவாயென் தோழி
மல்லிகைமுல்லையிவிதோகொஞ்சமகிழ்ந்துகொய்தேனினிஎன் தோழி
மெல்லிகாணதுனைலொருபந்து வேய்ந்துகொண்டேனடியென் தோழி

பூமலர்கள்கொய்துபந்துப்புனைந்தோமினி சொல்வன்கேளென்தோழி
நாமந்தயெறிந்தாடுவோம்வாராய் நங்குலப்பரிகாளென் தோழி

ஹீராப்பரி பூப்பந்தாடல்.

கொச்சகம்.

சேடியருமராஹீராவுந் தேம்பொழிலிற்பூப்பரித்து
வாடுமுனம்பந்தாக்கி மாமகிழ்வினோடுபெதம்
பாடிவிதராகமொடு பாங்கியருந்தானும்விளை
யாடிடவேய்யாரம்பித்தா ளன்னநடைப்பொன்னணங்கே

தரு-இ-ய-முகாரி ஆதிதாளம்

பல்லவி.

வாராய்பூப்பந்தாடுவோம் பாங்கிகளே வாராய்.

அநுபல்லவி.

வாராய்பலவித மாமலரால்வனைந்த
மகிமைசெறியும்பந்தையகங்கையிலெடுத்தே வாராய்

சரணங்கள்.

கூராக்குழகாருன்கொங்கையிற்படநேராய்
பாராயிதோபந்தெறிகிறேனென்றாய்ப்பாராய்
சீராயுன்முலைக்கெதி ரேராகவருகுது
தாரிற்படாமல்தட்டு வாயடிசகியே வாராய்

தடுத்தேயுன்பந்தேயெனறனத்தினத்தினில்வந்தடுத்தே
முடித்தேயிருக்கிடு ரவிக்கையறுக்கவெடுத்தே
தொடுத்தமலர்ப்பந்தினு லடித்திடவேமனங்
கடுத்திடேனாங்களிப் படைவேண்டிசகியே வாராய்

பெண்டேமலர்பந்தை பெறிந்துவிட்டேனென்றே
கண்டேமனங்களிக்க வேண்டாமடியின்றே
செண்டைநிகருமுலை பந்திரண்டிருக்குது
கொண்டைகுதியுமத்தோ டுண்டடிசகியே வாராய்

# லால்கௌஹர் நாடகம்.

## ஹீராப்பரி துயிலுதல்.

விருத்தம்.

சிந்தையின்மகிழ்வடைந்து சேடியருடனேசெம்பூம்
பந்தினாலாடிமேனிப் படுகளைதீர்ப்பான்வேண்டி
அந்தமார்தனதுமாடத் தழகியசப்ரமஞ்சத்
துந்தியேபடுத்துக்கண்க ளுறங்கினாளுறங்கினாளே.

## லாலரசன் கௌஹரைக்காணாதுபுலம்பிக் கடவுளிடத்திரங்கிக்கேட்டல்.

விருத்தம்.

மாதுபரிஹீராவுமலர்விழிகள் துயிலவிப்பான்மன்னன்லாலும்
ஏதமடர்வனங்களெல்லாமான்போலத் திரிந்துகௌஹரெங்கேயென்
சீதமதிமுகக்கருகவலைந்தலைந்துங் காணாதுதியங்கியேங்கி (று
ஆதியிறையேயென்பா லிரக்கமிலையோவெனவேயலறலுற்றான்.

த்விபதை-இ-ம் நாட்டைகுறிஞ்சி ரூபகதாளம்.

கண்ணிகள்.

ஆதிபெரியோனேயென்னை யாளுமிறையோனேபரஞ்
சோதிரகுமானேயென்றன் துணையன்றிவேறிலையே
மாதுகௌஹர்மீதில்கொளு மாமயலால்மனமுருகி
ஏதமடர்வனங்களெல்லா மேகியுங்காண்கிலனே
பண்ணியபயிரிலல்லோபுண்ணியந்தெரியுமென்னுந்
திண்ணமொருபழமொழியுஞ் சிறியேனென்பாலிலையோ
கொம்புத்தேனுக் காசைப்பட்டுக்கொண்டமுடவனைப்போலென்னை
வம்பிலகப்படச்செய்வதுன் வழியோவறிகிலனே
கானிற்பெய்யுமழைபோலவுங் காட்டிலொளிர்மதிபோலவும்
நானலைந்தாச்சேயென்றன் நாயனேயென்னசெய்குவேன்
இன்னமென்மேலிறையேயுன்றனிரக்கம்வரவிலையோ அந்த
அன்னநடைமயிலை யணைந்திடவும்விதியிலையோ
இனிமேலென்மேற்கிருபைசெய்யாதிருந்தாலடியேனென்செய்வேன்
மனமுருகிவாடுதையோ மன்னாவுன்றனபயம்
மடவாளந்தக்கௌஹர்தமைம ணமுடித்துமகிழ்வடைய
அடியேனுக்குக்கிருபைசெய்வா யாதிரகுமானே

## கானகத்தில் மாளிகையொன்றை லாலரசன்கண்டுரைத்தல்.

கொச்சகம்.

தையல்கௌஹாரைசயினாற் சற்றுமனந் தளாமன்
மையறலைக்கேறியிறை வாவெனைக்காவென்றுசொல்லிப்
பையநடந்தேகுமந்தப் பாதையிலோர்கோசளவில் *
துய்யரத்னமாடமொன்று தோன்றிடக்கண்டேயுரைப்பான்.

இன்னிசைத்தாழிசை.

ஆனைவரியாளிமிருகாதியடர்ந்தோங்குபெருங்
கானகமாமீதிலதேகாணுவதுமாளிகையோ-உயர்

கண்ணி-இ-ம்-பைரவி-திசுரதாளம்.

வானுரவளர்ந்திடுமாடத்தில் வைத்திடுரத்னங்களின்-ஒளி
நானாவிதமாகஜொலிக்குதே நாயனேயாரகமோ.

இன்னிசைத்தாழிசை.

சித்ரவன்னச்சாளரத்துந் தெருமுகப்புநிலையனைத்தும்
உத்ரமுதற்றூண்களினு மொண்பிரவைக்கண்கூச-ஆணி

கண்ணி.

முத்தோபுட்பராகமோநீலம் வைடூரியமரகதமோ-வச்ரக்
கொத்தோவைத்தழுத்திச் சிறந்ததுகோனேயிதாரகமோ.

இன்னிசைத்தாழிசை.

செம்பொற்படிக்கட்டுக் கங்கச்சிறுவின்கட்டிகளில்
பம்புரத்னப்பூஞ்செடியும் பட்சிகளுநின்றுலவும்-இது

கண்ணி.

உம்பருலகுள்ளதென்றாலோ விங்குற்றிடக் காரணமென் - அல்லால்
வம்பார்பரிஜாதிகள்வாழ்கின்ற மாமனையோவுறியேன்.

இன்னிசைத்தாழிசை,

சீரார்குளோப்புலஸ்தர் சேட்டுகளுஞ்சித்ரமணி
ஏரார்படங்களிட்டிலங்க வலங்காரமுறவும்-இருள்

கண்ணி.

காரார்மனைக்காவலர்க்காகிலிக் காட்டிலிருப்பதென்ன-கனல்
சேரார்கணப்பூதங்கள் வாழ்கின்றதிவ்வரண்மனையோ.

---

* கோசு-இருகாதம்.

இன்னிசைத்தாழிசை.

சீதபொழின்மீதுமைந்த திவ்யவொளிமாடமதுந்
தாதலர்ந்தகேந்திகளுஞ் சார்றமனுவாலாமோ-தெய்வ

கண்ணி.

மாதாரகமோராட்சதர்வாழு மாமனையோதெரியேம்-இதை
யேதென்றறிவேமெனவா வினவேந்துனுமேகினனே.

லாலாசன் தாகக்களையால் ஹீராவின் தோட்டத்தில்
துயிலல்.

விருத்தம்.

ஏகுமந்த லாலரசன் தாகத்தாலே
யெய்த்தடதம் பேர்த்திடவு மேலாதந்த
வாகணியும் பொழிலடுத்தம் மனையோரத்தோர்
மரத்திலிழங் மீதுமெள்ள மயங்கிவீழ்ந்தே
ஏகபெரி யோனையொரு துன்னிநீரா
ரெனக்கருள்வா ரென்றிரண்டு விழியுமூடி
ஆகமெலாம்வாடிடவே யயிரிலான்போ
லடங்கிட்டான் துயிலினிலை யொடுங்கிட்டானே.

ஹீராப்பரிவிழித்து லாலரசனைக்கண்டவுடன் சொல்லல்.

கொச்சகம்.

தூங்கிவேலாலரசன் தோகைபரிஹீராவும்
பாங்குடனேகண்விழித்துப் பலகணிவாய்நோக்கிடவே
ஆங்குறங்கும்வேந்தனைக்கண் டாசைமணவாளனிவன்
நங்குறுதனம்மதிஷ்ட லென்றேபுகழ்ந்துசொலவான்.

திபதை-இ-ம-ஆகிரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வாலசந்திரசூரியவொளிபோ லந்தமாமரத்தின்னிழலிற்
பால்பனொருவனதோதுயில்வது பாதகம்பாதகமே.
இந்திரலோகத்தினிலுமிவ்வுலகிலு மிவனைப்போல்யாருமுண்டோ
அந்தமுடனிவனையின்றெடுத்தோ ரினனாரென்றறிகிலனே.
பசிதாகத்தாலமெலிந்தேசவருமிவழிப் பாலையினிலுயர்ந்தோ
சசிபோன்றமுகம்வாடிச்சன்யாசிபோல் சயனிக்குமிதமறியேன்

எத்தனையோகாலம்நான்செய்தவமின் றென்பானிறைவேறக்
சுத்தனென்னிடஞ்சேர்த்தான்மதனேவுன் கண்டிறங்கெனைப்பாராய்
அடக்கமுடியுதில்லையே யுன்மேன்மீறுமாசைக்குயளவில்லையே
மடக்கொடிமயலாலேயுருமாறி வந்ததுபோற்றோனுதே
விணிற்கண்டுயில்வானே னுனக்கிசைந்த மெல்லியென் றனையனையா
வாணுளேவாட்டுகிறீரிதுநல்ல மதியோசொல்வீர்மதனே
ஆரிவையெனைப்பாராமல் கண்ணுறங்குமென்னாசைமணவாளனே
பிரியமில்லையோவென்மீதில் தெரியவில்லைப்பேசிடுவாய்மதனே
இலங்கும்புருவவில்வினில்விழியம்பினுலெய்யுமுன் றுயிலொழித்துக்
கலங்காதேகாரிகையே யென்றனைக்கட்டியணையாயோ.

## ஹீராப்பரிக்கும் லாலரசனுக்கும் சம்வாதம்.

### விருத்தம்.

தூங்கியலாலைப்பார்த்துச் சுரிகுழற்பரிஹீராவும்
ஓங்கியமையறன்னை யெடுக்கிடக்கூடாதாலே
தாங்கியவாசாபாசத் தாலிழுத்தரசைநோக்கி
ஆங்கவன்றுகந்தீர்த்தே யவன்வரலாறுகேட்பாள்.

இராகம்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

### கண்ணிகள்.

(ஹீ) மன்மதவடிவாயென்றன் மாளிகையில்வந்தநீயார்
நன்மனமனுவோஜின்னோ ராக்ஷதப்பிறப்போசொல்வாய்
(லால்) ராக்ஷதப்பிறப்போவென்று நானறியச்சொன்னபெண்ணே
தாக்ஷண்யமுடையமனு தன்னிற்பரதேசிநானே
(ஹீ) பரதேசிநீயேயென்றால் பாவையென்மனையினுள்ளே
வரமனம்வந்ததென்ன வந்தவகைசொல்வாய்மன்ன
(லால்) வந்தவகைசொல்வாயென்ற மயிலேநான்மோகங்கொண்ட
அந்தமுள்ளபெண்ணைவிட்டே யழுதுநானிங்குவந்தேன்
(ஹீ) இங்குவந்தேனென்றுசொன்னாயிப்போதுன்வரலாறெல்லாம்
மங்கையாமெனக்குமுன்னே வஞ்சயுடனுரைப்பாய்மன்னே
(லால்) உரையுமென்றமாமயிலே யுன்னைநானறியும்படி (னே
தரையினிலுரைத்தான்முன்னே சற்றுமேவனைநான்பின்

(ஹீ) பின்னேநானுரைப்பேனென்றாய் பேதைநானிந்திரன்சபை
முன்னேநாட்டியங்கள்செய்யும் மோகனஹீராவாநானே
(லால்) ஹீராவென்றுரைத்துநின்ற கிளிமொழியாளேயென்றன்
ஊருடன்பெயருமிப்போ துனக்குநான்சொல்வேன்கேளாய்

## லாலரசன் தன்வரலாறு சொல்லல்.

### கொச்சகம்.

விண்ணுலகினிற்சிறி மேவுவரசாட்சிபுரி
அண்ணலிந்திரன்முன்னடன மாடுபரிஜாதியினைப்
பெண்ணரசேஹீராவே பேதையென்சரித்திரத்தைத்
திண்ணமுடனேயுரைப்பேன் செவ்வையாய்க்கேட்பாயே.

### இராகம்-காம்போதி-திசுரதாளம்.

### கண்ணிகள்.

மங்கைமாமயிலேயென்னுடைய வர்த்தமானங்கள்கேள் - அழகுள்ள
பங்காளநகரந்தன்னையாளும் பாத்துஷாமகனென
என்றன்தந்தையினைசஃருதுஷாவெனப்பெரியுள்ளோர்என்றன்பெயர்
சந்தலாலெனவேசொல்வா ரிந்தத்தாரணிதனிலே
சீர்பெறுங்கிஞவெனுமந்தத் தேசராஜனென வருமொரு
பேர்பெறுமரசன்ஜவாஹிர்ஷா பெற்றமாமகளாம்
அன்னமோகுயிலோமயிலோ வென்றருயிரதுவோ எனவரும்
மின்னின்மேல்மயலாலாற்புலம்பி யூர்விட்டுவந்தனன்யான்
கண்ணுமென்மனமுந்தினமந்தக் கன்னிமேலுளதால் அழிந்திடப்
பிணிநான்வருந்திமயங்கிறேன் பேதைநானிதமே
ஆகையால்மயிலேமோகங்கொண்ட அந்தமங்கைநகரதற்கு நான்
போகவேண்டுமெனதையறிவித்தாற் புண்ணியமுனக்கே.

## ஹீராப்பரி தன்கருத்துரைத்தல்.

### கொச்சகம்.

பங்குஞ்சேர்வாவிசெறி பங்காளநாயகமே
அங்குசெல்லநீர்நினைத்த தந்தனையும்விட்டொழியின்
சங்கைபடச்சென்றக்கால் சஞ்சலமாமாதலினால்
இங்கிருக்கையென்றேடே யின்புறுகர்வீரே.

## திபதை-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

### கண்ணிகள்.

மன்னவரேநல்லதிப்போ சொல்லுவேன்கேளீர் — மன்னா
மங்கைகௌஹர்வாழுமுறை வகுக்கிறேன்கேளீர்.
அங்கர்தானைத்தனையோ காததூரங்காண் — மன்னா
அநியாயமாயாவிபோக அலையவேண்டாங்காண்.
இங்கேநீரிருந்துவிட்டா லின்பமாகுங்காண் — மன்னா
இனிமேலங்கேபோகுமெண்ண மெண்ணவேண்டாங்காண்.
மங்கைகௌஹராசைதன்னை மறந்துபோடுங்காண் — மன்னா
மனதில்வைத்தால்துன்பமெத்த வந்துசேருங்காண்.
தோகையந்தகௌஹர்தந்த துக்கநியினை — மன்னா
சொந்தவென்றனின்பநீரால் தொலைத்துடபோடுங்காண்.
என்னுடையகண்குளிர இருக்கவேண்டுங்காண் — மன்னா
எதுநீர்நினைத்தபோதும் ஏலும்நான்செய்வேன்.
நன்னயமுநாட்டாமெல்லா நானேசெய்வேன்காண் — மன்னா
நாயகருமக்கிசைந்த நாயகிநான்காண்.
மேதைகௌஹர்தன்னில்ஹீரா மேன்மையாகுங்காண் — மன்னா
வேண்டியென்சொல்கேட்டுநம்ப வேண்டுங்காண்மன்னா.

## ஹீராப்பரிக்கும் லாலரசனுக்கும் சம்வாதம்.

### விருத்தம்.

என்றுரைகேட்கவேண்டி மென்னவேஹீராசொல்ல
மன்னவன்லாலுமந்த வகைக்கிணங்கிலதாவாடிப்
பொன்னிகர்மாதுமென்றன புரவலாய்ப்புணர்திமென்றே
சொன்னதற்கெதிர்வாதிக்கத் தொடங்கினான்மடங்கலானே.

## திபதை-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

### கண்ணிகள்.

(ஹீ) மன்னுவுமைக்கூடவு மனதுமகிழாடவும்
என்னுவலதோடவும் இறையேஇறையேயணைந்திடுவீர்
(லா) இறையேயென்றுமயக்காதே யின்பஞ்சொலிநயக்காதே (சும்
துரையேயென்றுமயக்காதே தோஷம் தோஷம்தோஷமதுபிறக்
(ஹீ) தோஷமென்றுசொல்லவந்தீர் தோகையென்னைவெல்லவந்தீர்
ஆசையினைக்கொல்லவந்தீர் அரசே அரசே அரசேயணையவாரீர்

## லால்ராசனுக்கும் ஹீராப்பரிக்கும் சம்வாதம்.

கலிவிருத்தம்.

கண்ணாளனென்றே கவல்போதினிலே
எண்ணாதெல்லாமெண்ணியலாலரசன்
பெண்ணாண்முகம்பார்த்தென்றன்பேச்சில்லா
வொண்ணாதெனக்கேபமோடோதினனே.

இராகம்-ஆரபி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

...ளைகொள்ளத்தகுமோ
...ஹோர் ...பவிருக்கச்சிச்சி
ஹீரா ...என்னு நமியாளன்மீதிற்சற்றும்
...ன்லாதேபோனல் மாபாதகந்தானேயே
லால் பாதகிநீபோமென்றன் பத்தினியாகிறது
சூதானவார்த்தையென்முன் சொல்லாதோடிப்போசிச்சீ
ஹீரா ஓடிப்போய்விடென்றென்முன் னுரைப்பதுநீதியல்ல
மோடிசெய்யாதெனது மோகவிரகந்தீர்ப்பீர்
லால் தீர்க்கவோபுருடனைத் திருடென்றுனையெடுத்த
மார்க்கமுனக்கழகோ பாபாதகிபோசிச்சீ
ஹீரா மாபாதகம்புரிய வரவில்லையையாவின்
தாபாதிதீர்க்கவேண்டுஞ் சரணஞ்சரணமாகும்
லால் சரணமென்றுருக்கிந்த ஜாலஞ்செய்கிறாய்நீலி
மரணம்வருகாதுமுனை மருவவினைக்கேன்போடி
ஹீரா மருவவாராதிருந்தால் மந்த்ரதந்த்ரங்கள்செய்துன்
உருவமாற்றியேகாட்டி லோட்டிவிடுவேன்கண்டாய்
லால் ஓட்டிவிட்டாலுமெனக் குடையசௌஹரலாலோப்
பாட்டியுன்னையணையபட மாட்டாதடிபோபோ
ஹீரா போபோவென்றென்னையோ வற்புறுத்துகிறாய்பயலே
போமென்மந்த்ரமதை யிப்படித்திலெசெய்கிறேனை

கலிகூற்று.

விருத்தம்.

வையல்பரிஹீராவு மரசன்லாலைத்
தனதுவசப்படுத்தி யணைந்திடலாமென்று

செய்யும்வகை தந்த்ரமெல்லா பெருங்காயத்தைத்
திரைகடலிற் கரைத்ததென்பர் போலுஞ்செய்ய
வெய்யவினை வசமாக்கப் பஞ்சுபோன
விதம்போலும் விறுதாவாய் விட்டதென்று
மையறவிர்த் திடவிணங்கா னென்றுமந்த்ர
வாக்கினாள் மானுருவ மாக்கினாளே.

---

## லாலரசன் மானுருவெடுத்து வருதல்.

### விருத்தம்.

கொடியபரிஹீராவாம் பங்காளவரசனிளங் குமரனும்
பிடிநடையாள்கௌஹரதி னாசைமல் பிரியமணவாளனும்
படியில்வரும்லாலரசன் றனக்கிருந்தபழயவுரு விழந்துவைம்புற்
கடியியல்புபெறுமானி னுருவெடுத்துக் காடடையவருகின்றனே.

### தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

### பல்லவி.

மானுருவெடுத்துவந்தானே லாளிளவேந்தன். மானுரு

### அநுபல்லவி.

மானுருவெடுத்துவந்தான் கானமர்குழலாள்ஹீரா
சூனியத்தினால்லாலெனுங் கோனுருவிழந்துமந்த்ர. மானுரு

### சரணங்கள்.

எத்தனைத்துன்பம்வந்தாலுஞ் சத்தியந்தவறாதாலே
எத்தியவெத்திலடங்காப் புத்திமான்லாலரசனும்-மானுரு
பன்னுகௌஹராசையினால் கன்னிஹீரா சொன்னசொல்லை
வின்னமாகினைக்கவவ ஞன்னிய டியேலாலும்-மானுரு
கோதைபாள் ஹீராவினாசைகோவிந்தம்போட்டோடிப்போக
ஏதேதுவந்தாலுநானே யேற்றுக்கொள்வேனென்றுலாலும்-மானுரு

---

## கவிகூற்று.

### விருத்தம்.

மானுருவெடுத்தபின்பு மன்னவன்லாலுமந்தக்
கானகஞ்செல்லப்பாதை கண்டிடக்கூடாதாலே
ஈனஞ்செய்தவளின்சொந்த வெல்லைக்குட்டிரிந்துசென்றான்
கோனுதவியினாற்காட்டின் குறிதெரிந்தேகினானே.

## மானுருவெடுத்தவாலூசன் புலம்பல்.

### கொச்சகம்.

இழையிடையாள் கௌழரின்மே லிச்சைவைத்திருப்பதனால்
உழையுருவெடுத்துமந்த வொண்டொடியைக்கண்டேனைப்
பழியெனக்குவந்திடினும் பாரேனென்றேகிவருங்
கழியதியாலானுமந்தக் காட்டிற்புலம்பிடுவானோ.

இராகம்-இம்-காம்போதி-மிசுரதாளம்.

### கண்ணிகள்.

பசிதாகந்தானெனக் கிசைவற்றுன்மனையில்
    படுத்துறங்கினதால்
வசையகன்றிடுமென்றன் மனைவியைக்காட்டாமல்
    மாறாக்கிவிட்டானேயோ.

தேடிவெவ்விபமுமென் தேவியைக்காண்போமென்று
    சிந்தையினினைந்திருந்தேன்.
வாடிமனங்கசங்க மாதுயரிலீராவும்
    மாறாக்கிவிட்டானேயோ.

மானிடவுருவோடிவ் வனமெல்லாந்திரிந்துமென்
    மனையாளைக்காணாமல்
ஈனமுறமானுரு வாலேலந்தலைந்துநான்
    எந்நாள்காண்பேனே.

தேனேமனோலயமே தெவிட்டாரசக்கியமே
    திருமேனிசெம்மைமலரே
வானுலகணிமாதர் மகுடமேயுனையென்று
    மகிழ்வுடன் காண்பேனே.

பஞ்சவர்ணக்கிளியும பசியமயிலன்னமும்
    படியிலுனக்குநிகராய்
அஞ்சாதுரைப்பேனென்றால் நாவெழுந்திடுமோவென்
    னுருயிர்த்தேவியரே.

செஞ்சொன்மொழியெனது செவிக்கமுதமென்றுன்றனை
    சிந்தையிற்பெரிந்திருக்கும்

வஞ்சகமனமில்லா மாதேவிநிவசந்தரல்
வாட்டலாச்சுதையோ.
கனவிலுன்னுருவதிற் கலவிசெய்வதொழியக்
காண்பதும்வேறிலேயே
மனுவுருமாறியு மனவெளிதனிலுன்றன்
மயலுருமாறிலேயே.
இனமெவ்விதமுந்தேடி யுனைக்காண்போமெனவெண்ணி
லிவ்வுருமாறிலனே
கனபுகழ்பெறுநல்ல மனுவுருவெடுத்தெங்கோன்
காண்பேனென்றறிகிலனே.

---

கொச்சகம்.

ஆசைகொண்டகெளஹரிநு லாயிழைதமீராவியற்றும்
மோசமதங்களாகி முன்னுருவமாறியுறை
வேசமெடுத்தேபுலம்பி மென்மேலுமேயயர்ந்து
காசகன்றநாயகனே சதியருள்கையென்றழுவாள்.

வண்ணத்தரு-இ-ம்-புந்நாகவராளி-மிசுரதாளம்.

நாயகனேயபயம்நலமேயருளபயம் என்றனுட்டைவிட்
டருங் காட்டினின்மயல் கோட்டியாலெங்கக்கேட்டிலலேகிறேன்
தூயபரம்பொருளே துணைநீவருந்தெருளே மிக்கத்தோற்றமாறுரு
மாற்றியாவரும் போற்றமுன்னுரு வாற்றியருள்புரி.
தேவியுந்தேடுவளே யெனைத்தேடிவாடுவளே யொருசெயதியாகிலு
மெய்தவில்லையே ஐயையோவென வைவளேயென்னை
கூவியழுகுவளோ குலைவாய்விழுகுவளோ அநுகூலசத்துரு
வாலெனக்கிதெல்லாம் லபித்ததென்றுவலைப்பளோ.
தாய்தந்தைமார்தெரிந்தே கொடுந்தண்டனைபுரிந்தே சிறைச்சாலை
மீதுவைத் தாலேவாய்க்கன்னல் போலவாக்கிய தாலுமுந்துயர்
ஓய்வறச்செய்தனரோ வெளியோட்டவைத்தனரோ அவனேரிலோ
எந்தப்பாரிலோமய னேரிலோவுயிர் நீரிலோபழி.
பாதகியாலே ஐயோ இந்தப்பாதகங்கள்பொய்யோ என்றன்பாலில்
வந்தலங் கோலமாகினன் சாலவே யநுகூலஞ்செய்தாள்துவை
ஆதியேயுன்னிலேயே யெனக்காதரவிலேயே எந்தனுவிபோகிலும்
பாவைகெளஹரை மேவிடேனெனில் பூவருந்தாதையோ.

---

## கவிக்கூற்று.

### கொச்சகம்.

லாவிளவேந்திவ்வகையா னாணுவிதம்புலம்பிக்
கால்கைகளர்ந்தேநடக்கக் கஷ்டமாய்ச்சக்தியற்று
வேல்விழிதன்னாசை விறுதாவோவென்றயர்ந்து
மாலையினில்வந்தோர் மரத்தடியிற்றங்கினனே.

### விருத்தம்.

தங்கினன்றனதுதேகத் தளர்வதைத்தீர்ப்பான்வேண்டிச்
செங்கதிரோனுமேற்குத் திசைகடந்சேர்ந்தானிப்பால்
பொன்கிடைபுகழிரண்டு பூம்பறவைகள்பறந்தே
அங்கந்தமரத்திற்றங்க வருமையாவந்ததம்மா.

---

## பட்சிகள் வருதல்.

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

### பல்லவி.

வந்தனபாராய் பறவைகள்
வந்தனபாராய்.

### அநுபல்லவி.

வந்தனபாரிரு வன்னப்பறவைகள்
சந்தோஷமாய்லாலுந் சிந்தைமகிழ்ந்திட. வந்தன.

### சரணங்கள்.

நாடுநகரா சனதெல்லாமவிட்டு
காடுவழிகளி லேயவதிப்பட்டுக்
கேடுறுஹீராவின் மந்திரத்துட்பட்டு
வாடியேமானுரு வோடுநிகவிட்டுத்
தேடித்திரிகின்ற லாவிளவேந்துக்குச்
சேதிஜெயமென வோதிடவேயிதோ. வந்தன.

---

## பட்சிகள் பேசிக்கொள்ளுதல்.

### அகவல்.

வந்திடும்பறவைகள் மரக்கிளைமீது
பிந்திடாதிருந்தாண் பெண்ணினைநோக்கி
வையகத்தன்னில் வளரும்புதுமைகள்
மெய்புதுங்கதைகள் வேண்டியதுரைத்துப்

பெண்மணியெனது பிரியமேயொளிவின்
கண்மணியின்று கவலும்வார்த்தையைப்
பொய்யென்னுமலென் புறஞ்செவிகொடுத்து
மெய்யெனக்கேளென்று விளம்பிடப்பெண்ணும்
பிரியமேவிளையென் பிராணநாயகனே
யரியவுன்சொல்லை யசட்டைபண்ணேன்யான்
ஆகையாலொன்று மறையாதிராமல்
ஓகையாக்கூறென் றோதவாண்கூறும்
இதமுடனுமின் றிருக்குமிம்மாத்தின்
புதுமையொன்றுண்டும பூமியிற்பெண்களால்
மந்திரசூனியம் மாயம்விதவிதத்
தந்திரமாகிய ஜாலமிவைகளால்
தன்னுருமாறித் தவிக்கிறவெவனு
மன்னுருவாக வந்திங்கிருக்கும்
இந்தமரத்தி னிலங்கியவேரில்
சிந்தையாய்சிரசினைத் தேயத்தெடுப்பானேல்
மாறியமிருக வடிவநீங்கித்
தேறியேதன்னுரு சிறந்திடப்பெறுவான்
அன்றியுமிலையினை யறுத்துத்தன்மடிமிசை
வன்றிறமாக வைத்துக்கொண்டால்
பார்ப்பவர்கண்ணின் பார்வைக்கெட்டா
தார்க்குமறைவா யாகுவனின்னும்
மலறினைப்பறித்து மார்மிசைவைத்தால்
செலகினைந்திட்ட திசையெலாநொடிக்குள்
போவானின்னும் பொலிமரக்கிளையைக்
காவலிலொடித்துக் கையிற்பிடித்தால்
நினைத்தவைபலவுநி மிடநேரத்தில்
கனத்ததாகக் கைக்கூடும்மே.

---

## லாலரசன் மாறுருவநீங்கி சுயரூபமெடுத்தல்.

### விருத்தம்.

என்னவருமாண்பறவை பெண்ணைநோக்கி
யிசைத்தமொழி யனைத்தையுமொன் றிடைவிடாமல்

மன்னவனும் லாலென்போன் மகிழ்ச்சியாயம்
மரத்தின்கீ ழிருந்துசெவி கொடுத்துக்கேட்டு
வின்னமறப்பொழுதென்றோ விடியுமென்று
விழித்திருந்து விடிந்தவுடன் மரத்தின்வேரில்
வன்னமுடி தேய்த்தெடுத்தான் சுயரூபத்தை
வாங்கினான் மானுருவ நீங்கினானே.

தரு-இ-ம்-கலியாணி-மிசுரதாளம்.

பல்லவி.

மானிடவுருவெடுத்தான் லாலரசனும் மானிட

அநுபல்லவி.

மானிடவுருவெடுத் தானருங்காடெல்லாம்
மானுருவோடலைந்த மன்னன்லாலரசனும் மானிட

சரணங்கள்.

வஞ்சிகௌஹரைத்தேடியே மானுருவோடு
வனம்வனாந்தரமோடியே
கொஞ்சும்பட்சிமொழியால் குலைந்துமானுருமாறி
அஞ்சலத்திறைவனை யடிக்கடியேபுகழ்ந்து. மானிட

ஈராறுமதிகாலே பரிஹீராவா
லெடுத்தமானுநவாலே
யாரார்துணையுமின்றி யலைந்தேவனங்களெல்லாம்
ஏராளமாக்கடந்தே யெழிற்பறவைகள்சொற்போல் மானிட

பட்சிசொன்னதுபோலே யிலைமலர்ப்
படருங்கொம்புங்கைமேலே
பட்சமுடனெடுத்துப் பதனப்படுத்திக்கொண்டு
கட்சிசெய்யும்பரியைக் சிட்சைசெய்குவனென்று. மானிட

---

## லாலரசன் கடவுளைத் துதித்தல்.

கண்ணிகள்-இ-ம் சங்கராபரணம்-ரூபகதாளம்.

கானமருங்குழலாள் என்றன் கௌஹரைக்காண்கவென்று
காடோ நாடோ மேடோ கோடோகானமெல்லாந்திரிந்தேன்
மானினுருவெடுத்தேன் மந்த்ர வாதத்துக்குள்ளமைந்தே
வாதோ திதோ சூதோ ஏதோ வந்ததெல்லாந்தீர்த்தாய்

தானகூனேழுதலே தமியேனினைத்ததெல்லாந்
தாராய் சீராய் நேராய் கூராய் சத்தேதயாபரனே.
போனதெல்லாம்போக அந்தப் பூவையுடனாகப்
பூவே தேவே காவே கோவே போற்றிசெய்தேனருள்வாய்.

---

லாலரசன் நிகேனவிற்சென்று கௌஹறரைத் தேடல்.

விருத்தம்.

இவ்விதமாய் லாலரச னுண்மையாக
இறையவனைப் புகழ்ந்துமலர் தனையெடுத்து
நவ்விவிழி கௌஹர்வாழ் நிகேனவென்னு
நகர்போகவேணடுமென நினைத்துமாற்பில்
ஒவ்வவைத்த வுடனந்த நகரங்கண்முன்
னொருநொடிக்குள் ளேதெரிய மகிழ்ச்சிபொங்கிப்
பவ்வமறமறுபடியு மிறையைப்போற்றி
பணிந்திட்டா னுட்புகுதத் துணிந்திட்டானே.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

என்நன்மனைவி வாழிடந்தெரிகிலனே
எதுவோ வின்னமு மறிகிலனே.

அநுபல்லவி.

மன்றலுலவுமிந்த வளர்நகர் தன்னிலந்தத்
துன்றுமலர்க்குழலென் துணைவியிருக்குமிடம்.
எதுவோவின்னமுமறிகிலனே.

சரணங்கள்.

தேவியவளைநாடித் தெருக்கண்முழுதுமோடி
ஆவிவருந்தினேனென் னன்பாளிருக்குமிடம்
எதுவோவின்னமுமறிகிலனே.

மானினுருவநீங்கி மானிடரூபம்வாங்கி
கானிலலேந்துவந்தேன் கண்ணாளிருக்குமிடம்
எதுவோவின்னமுமறிகிலனே.

பறவைமொழியதுபோல படருமிலைமலரால்
திறமாய்கருள்வந்துந் தேவிபிருக்குமிடம்
எதுவோவின்னமுமறிகிலனே.

ஆதியரும்பொருளே யடங்காதெழுந்தெருளே
வாதனையானே யென்றன் மனையாளிருக்குமிடம்
எதுவோவின்னமு மறிகிலனே.

---

## கௌஹர் லாலரசனை நினைத்துபுலம்பல்.

### விருத்தம்.

மணிமுடிலாலேன்றோது மன்னவனிவ்வாறாகப்
பணிகர்தெறுக்கடோறும் பகர்மனையாளைத்தேடித்
திணியுறும்புயங்கள்வாடத் திரிகின்றசமயந்தன்னில்
அணியிழைகௌஹருள்ள மலம்புவாள்புலம்புவாளே

### தரு-இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

### பல்லவி.

மோகலாகிரியாகியேயுடல் வேகிறதாலே நான்சாகிறேன்லாலே
நான்சாகிறேன்லாலே நான்சாகிறேன்லாலே

### அநுபல்லவி.

போகமேவிய வாகநாயக மேமணவாளா
யோகமாயெனையே கலவிசெய் யோககண்ணாளா-லவாகினைதோளா.

### சரணங்கள்.

வஞ்சிமார்வசை மிஞ்சியென்மன மஞ்சினன் பாராய் [ளைன்பாராய்
கொஞ்சியென்னொடு தஞ்சமாய்சர சஞ்செயப்பாராய் - நான்கெஞ்சி
இன்பமென்பதுந் துன்பமாய்நித மேங்கினேன் தேடி
அன்பனேயெனை யணியவாவென வழுதனன்வாடி-நான்தொழுதனனு
செவ்வியாலுயிர் வவ்விவாதனை செய்கிறாய் காமா [டி
கௌஹர்நான்மிக வுங்கலங்கினன் கைவிடலாமா - நீ யுய்த்திடலாமா.

### கொச்சகம்.

காமம்பெருகிக் கரைபுரண்டுதானோடிச்
சாமமுழுதுந்தலைச் சுழற்சிக்கொள்ளுதையோ
நாமலாலென்றுரைக்கு நாயகனுமென்னரிய
வாமமுடையமணவாளன்வரக்காணேனே.

தரு-இ-ம்-வராளி-ஆதிதாளம்.

பல்லவி.

வாளனேவரக் காணனே மண

அநுபல்லவி.

நாளைநாளையென்றிந்த நாள்வரையிலுமடி
யாளின்தலையொடிக்க வேளையல்லவோமண வாளனே

சரணங்கள்.

தேடுதே மனம் வாடுதே
கூடிக் குலாவிவிளையாடி விரகபதம்
பாடி யணையகிந்த நாடுதென் செய்வேன்மண வாளனே.

வஞ்சியே யபரஞ்சியே
அஞ்சாதே யென்றொருடன் கொஞ்சிச் சரசமொடு
ரஞ்சித மேயென்றதை கெஞ்சின் மறந்துமண வாளனே.

வாசனே மஹா ராசனே
காசணி யாசரச நேசப்ர காசனே
மோசஞ்செய் யாமலேரில் லாசமுடனேமண வாளனே.

---

லாலரசன் கௌஹரின் மாளிகையில் ஒருவருமறியாது சென்று அவளின் துயரத்தைக் கண்டுசொல்லல்.

விருத்தம்.

இப்படியே சவள்புலம்ப லாலிராஜன்
இலங்குதெருப் பலநோக்கி வருகும்போதில்
தப்பறவே மகிழ்ச்சியுண்டாய்த் தனக்குத்தானே
தனித்தவிந்தய் பரதேசிக் கரியநாயன்
ஒப்பில்லாக் கிருபையுண்டு மென்றுகௌஹ
குருவதனைக் கண்காண வேண்டுமென்று
செப்புமலர் மாரனைக்கக் கௌஹர்மாடஞ்
சேர்ந்திட்டான் கண்டுதுய ரோர்ந்திட்டானே,

திபதை-இ-ம்-பூரிகல்யாணி-திசுரதாளம்.

கண்ணிகள்.

சிவிக்கறுத்துமணந் தாவிக்கிடக்குங்கருங்கூந்தலைச் சிக்கு
திழவிப்புழுதியுடன் பாவிக்கமையவின்று காணவோ.

மையிட்டரியவுள்ளங் கையத்தனையிருக்குங் கண்களை இன்று
நையமன்மழுதுபெய்யுமழையுடனே காணவோ.

கொஞ்சிமுத்தங்கொடுக்குமின்சொற்கொவ்வை யனையவா யினைமனம்
அஞ்சிப்புலம்பித்துயர் மிஞ்சிப்புகலவின்று காணவோ.

முத்துமாலையிட்டுக் குத்தவெனவெழுந்த கொங்கையை இன்று
மெத்தவழும்விழிநீர் தத்திப்புரளும்படி காணவோ.

விருப்பிரத்னக்கடகந் தரித்தமலரனைய கைகளெம் பெரும்
இருப்புவிலங்கினொடு தரிக்கநிதமுமின்று காணவோ.

கட்டழகுடனேசெம் பட்டுத்தரித்திடுஞ் சிற்றிடையினைக் செயுந்
துட்டத்தனத்துடனே ரெட்டுத்தரித்திருக்கக் காணவோ.

இலங்குஞ்செம்பஞ்சிட்டுத் துலங்குந்தண்டையிட்டகால்களை இனக்
விலங்குபூண்டி-ருக்கக் கலங்கும்படிமனது காணவோ. (னே-மனம்

அணியிற்பொலிந்துகண்ணின்மணிபொத்திருந்த வென்றன்பெண்ணி
பிணியிகிடந்துதிறந் தணியத்திறமுமின்று காணவோ.

---

## தாதிமார் கௌஹரைத்தேற்றல்.

### விருத்தம்.

புயம்வாடி லாலரசன் மறைவதாகப்
புலம்பியவ னங்குநிற்கக் கௌஹர் தானுங்
பயமாக வழும்விழிநீர் மார்பிலோடப்
பலவாறு புலம்புமதை யருகிற்சூழ்ந்து
நயமாக விருக்குமந்தத் தாதிமார்கள
நன்மொழியும் புன்மொழியு மெடுத்துக்காட்டித்
தயவாக வெவ்விதமு மையனீங்கச்
சாற்றுவார் புத்திசொல்லித் தேற்றுவாரே.

### திபதை-இ-ம்-காம்போதி-ரூபகதாளம்.

### கண்ணிகள்.

காரிகையேயெங்கள்குல நாரியர்கள்
கௌஹரேயென்னாலையெண்ணிக்கலங்குகிறாய்
தாரையெனவிழிசொரியம் பாரிலுள்ளோர்
தயங்குறாய் லாலரசால் வயங்குமயி

கண்ணே
யெண்ணே
பழிக்கத்
ரழிக்க

பெண்ணரசேயுன்மனதி லெண்ணினதைச் சொல்வாய்
பேதையறிவாதையைப் போதழித்தால் வெல்வாய்
கண்மணியேயுன்னுடைய பெண்மதியோ வீணாய்க்
கத்துகிறாய்நீங்கள்சொல்லும் புத்தியைநீ பேணாய்
கூங்குயிலுந்தென்றலும்வா னேங்கினனும் நேராய்
கோகிலமேயுனக்குப்பகை யாகினவே பாராய்
பாங்கிகளாநாங்களெல்லா மீங்கிருக்கும் போது
பதறுகிறாய்லாலேலினைப பதுபெரிய தீது
பருவவயதுனைப்புலம்பி யுருகிடச்செய் விதியோ
பாதகலால்மோகமதா லேகுமுயிர் மதியோ
இருவனாயாய் பழையகதை யொருவருமுன் பாலே
செப்பிலேயோவுனதுயிர்தான் தப்புவதா தாலே

---

## கௌஹர்புலம்பல்.

திபதை-இ-ம்-எதுகுலகாம்போதி மிசாதாளம்.

கண்ணிகள்.

பாதகம்பாதகம் பாங்கிகளாயிருந்தும்
வாதனைக்காளாக்கினீர் தாதியரே

இந்தமதியிலெல்லா மென்மனந்தேறுதே
யெந்தவிதமுமினியே தாதியரே

ஆறுந்துயரந்தீர லாராலென்னுரைத்தீர்
தீரும்லாலரசாலே தாதியரே

மன்னன்லாலவனது வர்த்தமானறிந்தால்
என்னிடஞ்சொல்வீரே தாதியரே

அந்தலாலரசன்வந் தனைந்தாலுடனே தீரும்
இந்தவெவ்வினைநிசமே தாதியரே
ஆயிரமாச்சொலினு மடியாள்மனந்தேறுதே
ஆவியுநிலைத்திடாதே தாதியரே
இப்போதோவினுஞ்சற்றெப் போதோவென்னுயிர்மீதி
மெனறேநீ ரறிகிலேயோ தாதியரே
பிரிந்தகணவன்வர வருந்தியும்வாராதாலே
பிழைப்பதினிநானிலேயே தாதியரே

---

## லாலரசனால் கௌஹரின் விலங்குகளொடியவே

## கௌஹர்கடவுளைத்துதித்தல்.

### விருத்தம்.

என்னவேயிவ்விதமாய்க் கௌஹருள்ள
மிரங்கியேபுலம்பியங்ஙனிருக்கும்போது
மன்னனாம்லாலரச னினிமேலேது
மனமடியாய்த்தாமதித்தா லாகாதென்று
வின்னமறமரக்கிளையைக் கையிற்கொண்டு
மின்னவளின்விலங்குகளின் மேலேதட்ட
வன்னமயில்விலங்குபொடி யாகவினபின்
மதிசெய்வாள்கடவுளைத் துதிசெய்வாளே.

திபதை-இம்-ஜெங்கலா ரூபகதாளம்

### கண்ணிகள்.

இறையேநீபெரியாயிறையானவாவரியாய்
மறைவாய்வாலைவரக்கருணைசெய்த — இறையே
நெடியாய்நீவலியாய் நிறைவானவாகடியாய்
அடியாள்லாலோ டணையக்கருணைசெய் — நெடியா
ஆதியேயபயம் அரிதானவாவபயம்
சோதிலாலைத் துணையாகவாக்கிவை — ஆதியே
தன்னுமெய்ப்பொருளே துணையானவுட்பொருளே
மன்னன்லாலை வரவருள்செய்குவாய் — தன்னு
கடவுளேபுகழோய்கண் காணொணாத்திகழோய்
திடனார்லாலுடன் சேர்த்தெனைவைத்தருள் — கடவுளே
வல்லவாசரணம் வளர்வாகையாய்சரணம்
நல்லலாலினை நானகாணச்செய்தருள் — வல்லவா
நீதநாயகனே நிறைவானதாயகனே
கோதைலாலொடுங் கூடத்துணையருள் — நீத
தன்னைநேர்பொருளே தயவானவாருளே
என்னைலாலுட னின்புறக்கூட்டுவாய் — தன்னை

---

## காதியர் கௌஹரை வினாதல்.

### விருத்தம்.

ஜாதிச் ஜெங்கௌஹர்பாலிற் றுணைகளாப்பாதுகாக்கும்
மதித்திடற்கரியவாதி யார்கள்சென்றன்புகூர்ந்து

கதித்தமேப்புகழார்பெண்ணே கைத்தளேமுதலாகீத்தே
இதத்தொடுமிருப்பதென்ன வியம்புவாயியம்புவாயே.

திபதை-இ-ம்-கமாசு-ஆதிதாளம்.

கண்ணிகள்.

மாதேபரிமார் குலமா மணியே
ஏதென்றறியோ மிதென பணியே
பணியாமுடியேன் பணிவான தம்மா
பிணியார்தளே போனதுபேசுஞ் சும்மா
சும்மாயிருந்தே சுகமான தென
இம்மாசனமீ தினிற்சேர்ந்த தென
என்னவிதியோ வெங்கள்பால் தெரியோங்
துன்னூற்புரியுஞ் சூதோ வறியோம்
அறியோமரை யானமாகியதும்
வெறிநீங்கியே மாமணம்வீசி யதும்
வீசங்கணிநீர் விலக் கானதென
வாசங்களின்மேன் மயக் கானதென
மயலான்மன மேலியும்வாடி னதே
ஓயிலாசவிப்போ வொளிவாகி னதே
ஆகும்விளையை துனக்கான வம்மா
வாகாய்முடிப்போ மகிழ்வாய்சொல் லம்மா

கௌஹர் விடையருளல்.

கொச்சகம்.

காவலனுரைக்கிரங்கிக் காவல்புரிந்தேயிலவின்
மேவுகிள்ளேயொப்பவின்று வீறிழந்ததாதியரே
தாவகன்றுசந்தோஷ சாகரத்திலாழ்ந்தேனென்
ஆழியெனும்லாவிளவேந் தால்கேளிவ்வார்வனத்தே

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

தாதியரேசொலுஞ் சேதிதனைக்கேட்டீர்-என்றன்
தனைப்பிரியாமலேயெத் தினமுமருகிலுறுந் தாதியரே

அநுபல்லவி.

ஜாதுவிளைசெய்தநீங்க ளேதெனவினவவாரு
போதுவருமாவென்றென்னும் பாதகிற்றாலமிது தாதியரே

சரணங்கள்

வேதனையாயென்னையீன்ற தாதையன்னையோர்களென்றன்
மேலுறுஞ்சினங்களெல்லாஞ் சாலவறிவீர்-படு
பாதகமிதென்றுசற்றுஞ் சாதகஞ்செய்துமுற்றும்
பாழில்சிறையாக்கவரும் பீழையறிவீர்
சாதனையோவித்தனையும் வாதனையோவெத்தனையும்
பேதகமில்லாதவென்பால் தோதகம்வந்ததறியேன் தாதியரே

ஏவியபடியேவந்த நீவிர்களெல்லாமுவந்தே
என்னைவதைசெய்துசரி யன்னந்தந்தவீர்-என்றன்
ஆவியைமிகர்த்தலாலும் பாவிகாள்பிரித்தலாலே
ஆசைமீறுதென்றற்கு மொத்தாசைசெய்திலீர்
மேவியமதிமயக்கோ தாவியசினத்தியக்கோ
யாவையோவருகிலுறும் பாவையர்நீரறிகுவீர் தாதியரே

இத்தனைத்துன்பந்திலும்லால் பத்தினியல்லாதெவரால்
கத்தரிக்கக்கூடுமென் றுரைத்தறிவீர்-ஒரு
ஒத்தநிலையானேனென்பக் கத்திருந்தாலென்னின்பத்
துத்தியானமீதினில்வந் துற்றதறிவீர்
சத்தியமனுளனல்லா லித்தகைத்தளையொடிக்க
இத்தரை இல்லையென்றே சித்தமகிழ்ந்தேனடியேன் தாதியரே

ஆகையாலெனதுமன மோகையானதடிதின்ம்
அஞ்சிடேனவற்கும்மினித் துஞ்சிடேன்பாராய்-மிகு
வாகையேயெனக்குமதின் மாற்றம்பிதிர்மாதுருக்கும்
வல்லவனளித்தானதைச் சொல்வதோநேராய்
தோகையேயென்நாயன்றன்னை வாகுடன்வணங்கினேனென்
மோகலாலையுங்காணப்பா னுகவுமருகிலுறுங் தாதியரே

## மறைவாய்நிற்கும் லாலாசனை கௌஹர்

### ஆணையிட்டழைத்தல்

கொச்சகம்.

மின்னையான் கௌஹரிவ் விதமுரைத்துத் தாதிகள்பால்
மன்னவன்லாலல்லாலிவ் வாரியத்துவாரிலையென்
றன்னவனேயெண்ணிந்திட் டன்பின்மிகவேபுலம்பத்
தென்னமழிங்கிள்ளையைப்போற் சிலமொழியைவிளம்புவாளே

## திபதை-இ-ம்-முகாரி-மிசுரதாளம்.

### கண்ணிகள்.

எனைமறக்காதகண் ணாளனே யுன்றன்
எழின்முகங்காட்டாய் மணாளனே
அனைதந்தைசிறைவைத்த வாதையே யுன்றன்
ஆனனம்பார்த்திடி லேதையே
இனிதாமதஞ்செய்ப லாகுமோ வுயி
ரிஷப்பதஞ்சரதமி தாகுமோ
கனிவாயுரைமருந் தல்லவோ கண்முன்
காணாததும்பாவ மல்லவோ
உமதழகின்போரி லாணையா யும
துத்தமியென்பேரி லாணைடாய்
தமதுசெங்கோல்பேரி லாணையர் யுந்தந்
தாய்தந்தைபேரிலு மாணையாய்
நமதுகவலையெல்லாந் தீரவே யுந்த
ணாயகியெனனுடன் சேரவே
எமதுமுன்வாராதாலே சொன்னமே ஆணை
யிடுவேன்பிகள்பேரி லின்னமே

### விருத்தம்.

தலைவிகௌஹற் கடவுளையிவ் விதமாய்ப்போற்றிச்
சத்தியஞ்செய் வேனெனவே சாற்றக்கேட்டு
மலைவடைய வினிப்புரிற் றகாதென்றெண்ணி
மரக்கிளையை யெறிந்தவுடன் மன்னன்றோற்றக்
கலையினைக்கண் டிடுயானைப் போலுந்தாயைக்
கண்டிடுகான் றுளைபோலுங் கனகவான்கண்ட
விலைமகள்போ லுங்கௌஹர் லாலைக்கட்டி
மேவினாள் பிரியாத வாவினாளே

## திபதை-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

### கண்ணி

(கௌ) என்னுயிர்நாயகனே யிந்நாள்வரையிலுநீர்
எங்கேபோயிருந்தீரா என்கண்ணாளா
இங்கெனக்குச்சொல்வீரே.

கண்ணி-இ ம்-காம்போதி-ரூபகதாளம்.

(லால்) கன்னன்மொழியயில் கௌஹரேகானன்று உன்னைப்பிரிந்த
வகையேதாம் இன்னமும்நானறியேன் விழித்தேனென்
னிலக்குங்கொலு மண்டபத்திருந்தேன்.

(கௌ) இருந்திடும்லாலராசெ யென்மீதுமோகங்கொண்டு
வருந்தினதைமுன் சொல்லுவீர்
மயிலாளென்சேதிசொல்கிறேன்.

(லால்) சொல்லுதென்னவிழித்தேனுன் அருவத்தினதோற்றமல்லா
தொருவேற்றுருவும் நல்விழிமுன்கண்டிடாததனாலுன்றன்
காட்டம்பிரமைகொண்டாடினதே

(கௌ) ஆட்டியபிரமையினை அன்னைதந்தையோரறிந்தே
வாட்டினாரோமனதை — என்கண்ணாளா
வகையொன்றுந்தெரிகிலேனே. — என்கண்ணாளா

(லால்) ஒன்றிரண்டல்லப் பலவிதமாயெனைக் குற்றதிந்நோயென்று
சற்றுணரா, தன்றுவைத்தியஞ்செய்யவந்தாரிது
வல்லவென்றுன்மயலென்றுரைத்தேனே.

( கௌ) என்மீதில்மையல்கொண்டேன் என்பதுந்தருமமல்ல
என்பதைநினைத்திலீரோ — என்கண்ணாளா
என்னையென்னசொன்னார்களோ.

(லால்) சொன்னதெல்லாங் கௌஹர்மின்னேத்தருவித் துன்முன்னே
தருகிறேன் வின்னமில்லா, மன்னேவிசனப்படாதே யென்று
ரதுவான்கதிர்முனபனிபோலாச்சே.

(கௌ) வான்கதிர்முன்பனியோன் மதிந்திரேயானால
ஈன்றிடுந்தாய்தந்தைமார் — என்கண்ணாளா
எப்படிக்கேட்டிருப்பார்.

(லால்) கேட்டருள்வீர்விடை போட்டிசெயுமென் பிராட்டிதனையிவ
ணை கூட்டிவரக், காட்டையுங்கன்மலைநாட்டையுமோர்
கடுகாயுமதிக்கிலன் தாயேயென்றேன்

(கௌ) தாய்தந்தையூரவருந் தனியாயும்மைவிடவும்
ஆயுமனமொருத்தேதன் — என்கண்ணாளா
அதையெனக்கெடுத்துரைப்பீர்

(லால்) எடுத்துரைப்பதென்னமயிலேயென்னையெத்தனையோவிதத்
தால்தடுத்தே, கடுத்துரைத்துக்கலங்கியழுதது
காட்டுக்கெறித்தநிலவாச்சே

(கௌ) நிலவாச்சுதென்றுரைத்த நேசமனோகரனே
நல்விடைவாங்காமலே என்கண்ணாளா
நாடிநீரோயாத்திரையை

(லால்) நாடியநாட்டம்நிறைவேறவிடைநல்கினளுன்சமுகஞ்சேர
காடுமலைகளினூடேயுனையென்றுந்
தேடிவந்தேன்கௌஹர்கண்மணியே

(கௌ) வந்தவழியில்கள்ளர்வனவிலங்கிவைகளால்
சிந்தைகலங்கினீரோ என்கண்ணாளா
தினமென்னையெண்ணினீரோ

(லால்) எண்ணுமுன்னெண்ணமுன்னணத்திருடருமகண்ணும்விலங்
குமென்கண்ணெதிரே, திண்ணங்கெடப்பய முண்ணச்செய்
தாலுந் தெரியுமோசொல்லென்சுரிகுழலே

(கௌ) தெரியாதென்றீர்சரியே தேவரீர்வழிமீதில்
பரிஜாதியநேகருண்டே என்கண்ணாளா
பார்த்திருப்பீரோசொல்வீர்

(லால்) ஓகோமறந்துவிட்டேன்வரும்பாதையிலோர் பரிஹூராவெனும்
பெயராள், வாகாரண்மனைக்குட்புகுந்தேன்
மிகுதாகந்தவிர்த்திளைப்பாறிடவே

(கௌ) இளைப்பாறப்போனனென்றஎன்பிராணநாயகரே
களைக்காளேவசப்படுத்த என்கண்ணாளா,
கண்டிருந்தால்விடுவாளோ

(லால்) கண்டவளென்னைக்கலவிக்கிழுக்கவென்காதலிகௌஹரைச்
சேர்வதல்லால், வண்டமையுங்குழன்மாதேமறுத்தோர்
மடந்தையுடன்சேரமாட்டேனென்றேன்

(கௌ) சேரவேமாட்டேனென்றால்செய்யுமந்திரத்தாலே
கோரஞ்செய்திடுவாளோ என்கண்ணாளா
கொல்லாதகாரணமேன்

(லால்) கொல்லாமலென்னுடன்புல்லெனச்சொன்னவை யெல்லாம்வி
லக்கியவல்லினால், வெல்வதரிதென்று மந்திரத்தால் மானின்
வேடமெடுத்திடச்செய்தாளே

(கௌ) செய்யுமந்திரத்தாலேதிரியுமானுகினீரோ
ஐயோவிதென்னடாதகம் என்கண்ணாளா
அதற்குப்பின்சேதிசொல்வீர்

(லால்) பின்னிட்டொருவருடம்வரையும்வந்தவின்னமுறும்பிணையீங்
இருவால், மன்னியகாடுமலைகள்வனுந்தர
மாமிருகாதியோடேதிரிந்தேன்

(கௌ) திரிந்தீரோமானுருவாய்ச் சேயிழையென்பால்வரவே
வாநுந்திமுன்னுருவெடுத்த என்கண்ணாளா
வகையொளிக்காதுரைப்பீர்

(லால்) வகையொருநாளிலோர்மரத்திற்றங்கவந்தவிரண்டு பறவைகளா
ல், தகைபெறச்சொல்லுஞ்சொன்முறைபோல்
செய்துதான்சுயரூபமெடுத்தேன்

(கௌ) வந்தவகையும்பட்சிகுருத்தவிபரங்களுஞ்
சிந்தைநான்மகிழ்ந்திடவே என்கண்ணாளா
செப்பிடவேண்டுகிறேன்

(லால்) வேண்டுவதைசொல்லத்தூண்ட வேண்டாமிது வேளையல்லவ
டநாளைசொல்வேன், ஈண்டுரைப்பாயுன் சரித்திரத்தைப்பெ
ண்ணே யென்மனமென்றுங்குளிர்ந்திடவே

(கௌ) என்மனமுன்மயலின்எரியாற்கருகிடவே
ஜென்மமுள்ளவுமிந்த என்கண்ணாளா
சிறையினிலிருத்தினரே

(லால்) சிறையைமீட்டியென்தேவியதாக்கவுஞ் சேரும்விபத்தைத்தவி
ர்த்திடவும், அறையும்லாலரசிங்கிருக்கவுனக்
கையமுண்டோவில்லைமொய்குழலே

கௌஹரின் தாதிகள் ஜவாஹிருஷாவிடத்துவருதல்.

விருத்தம்.

மங்கையாங்கௌஹர்லாலின் மலர்ப்புயந்தழுவும்போதே
அங்குகாவலுக்கிருந்த வழகியதாதிமார்கள்
இங்கிதென்புதுமையென்றே யிறைஜவாஹிருஷாபாவில்
சங்கையாயுரைப்பான்வேண்டிச் சடுதியிலேகினரே.

ஓரடித்தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

எதிலுமையா சேர்ந்தார்களும் அதிலுமையா

### சரணம்.

ஏகினுரேவிரைவாய் வாகுபெருகுங்கௌஹர்
மோகலாலுடனேசை யோகஞ்செய்சேதிசொல்ல. (ஏகி)

### தாதிமார்க்கும் ஜவாஹிருஷாவுக்கும் சம்வாதம்.

### கொச்சகம்.

சேதிசொல்லவோடிவந்த சேடியர்கள்வேந்தன்முனைஞ்
சூதுடனேலாலரசன் தோகைகௌஹர்மாளிகையில்
ஏதுவிதத்தாலோவங் கிட்டதனைக்கட்டவிழ்த்தம்
யாதுடனேசேர்ந்த வகையனைத்துஞ்சொல்வாரே.

இந்துஸ்தானி-நவுஹா-தரு-இ-ம-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

(தா) ஓமஹாராஜசதா கௌஹர்பிதாவேபாராய ஆகைசேதம்நோாய்.

(ஜ) சேதமேதோ ஓ பரீ
(தா) யாதோதீகான சரி
(ஜ) தீதுக்கேதோ ஓ பரீ
(தா) சாதிப்பேருது சரி [ட்போதே

(ஜ) ஏடரிமாதே விரைந்தோதுவாய்கைசேதமதே ஓதெல்கொல்வேனி

(தா) போதுலாம்பூ வனத்தே
(ஜ) ஏதுசொல்வா வினத்தே
(தா) மாதுகௌஹ ரிடத்தே
(ஜ) வாய்த்ததென்னு வியத்தே [யதும்

(தா) யாதுசொல்வோங்கௌஹர்பாலருந்தனை நாடியேசிம்மாசனமேறி

(ஜ) யாவராலாய பரீ
(தா) கோவலாலாய சரி
(ஜ) நீவிர்பார்த்திரோ பரீ
(தா) கேளில்பார்த்தோமே சரி [வான்

(ஜ) காவலாய்நீவிரெல்லாங்காவதிலேவீற்றிருக்கக்கள்ள னெவ்வாறு

(தா) வந்தவாறேதோ விறை
(ஜ) சொந்தமானேயமெய் யறை
(தா) புந்திமீறேது கறை
(ஜ) சிந்திப்பீராக குறை [னமன்

(தா) ஆயவெம்மோர்க்கியலாதாகவினுமமானனூன். அஞ்சிவந்தோ தி

(ஜ) ஒதியாங்காரண மில்
(தா) ஏதுசொல்வோம்பதி சொல்
(ஜ) நீதுலாமேதுவ தில்
(தா) பேதைக்காமோவிச செயல்[தொடால்
(ஜ) தாதிகாள்கௌஹர் மாதாரமிழந்தேதிலர்பால்சார்ந்தனைந்தாளோ
(தா) சார்வதற்கோசந் தேகம்
(ஜ) போவாலோராலசெய் சோகம்
(தா) ஈர்தலெம்மோர்க்கோ பாகம்
(ஜ) நேர்தல்தேவர்க்கே யாகும [ஞை
(தா) ஆதலால்தேவுகளாலேயடக்கியாளுமறை ஆஞ்சொலெம்மாலேயே

லாலரசனைவதைக்க ஜவாஹிறுஷாவனுப்பிய

## தேவகணம் வருதல்.

### விருத்தம்.

சேடிகளுரைத்தமாற்றஞ் செவிப்புகுந்திடவேமன்னன்
வாடிடச்செய்வாயென்று மதிபதிலாலைச்சுட்டிக்
கூடிடும்பகையாந்தேவின் குழாங்களைநோக்கிக்கூற
ஆடியேலாலைத்தேடி யடர்படைதோன்றிற்றம்மா.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

### பல்லவி.

வந்தாரேதேவகணங்கள் லாலைவதைக்க. வந்தா.

### அநுபல்லவி.

வந்தாரேதேவகண முந்தாதுகௌஹர்மணம்
நொந்தாடமாதினெணஞ் சிந்தாகுலத்தையுண. வந்தா.

### சரணம்.

காசினியிலுள்ளவோ ரிராஜனெனப்பேர்படைத்ததெந்
தேசமதில்வந்தகொடு மோசனையிக்கணம ரூபில்
காட்டிடுமென்போர்கள்சிலபேர் உருப்படாமல்
வாட்டிடுவோமென்போர்சிலபேர் லாலினுடைய

கண்ணழிப்போமென்பாரும் புண்ணளிப்போமென்பாரும்
மண்ணில்வைப்போமென்பாரும் விண்ணில்வைப்போமென்பாரும்
கட்டுவோமென்போர்களொருபால் துண்டுதுண்டாக
வெட்டுவோமென்போர்களொருபால் ஆயுதமுறுங்

கையாலநேகரையும் மெய்யாலநேகரையும்
மொய்யாலநேகரையும் எய்யாலநேகரையுங்
கண்டந்துண்டமாகப் பண்ணுவோம் எதிர்த்தவரை
முண்டம்பிண்டமாகப்பண்ணுவோம் என்பாரொருபால்
காற்றுடிபோலச்சுற்றி மாற்றார்கள்பாலில்வெற்றி
தூற்றுதணியப்பற்றிக் கூற்றாய்வருவம்நெற்றிக்
கம்முடன்பிளப்போமென்பாரும் அழுதுவிம்மி
விம்மிடத்துளைப்போமென்பாருங் கணடோர்களெல்லாங்
காலொருபுறநடுங்க மேலொருபுறநடுங்கப்
பாலொருபுறநடுங்க வேலொருபுறநடுங்கக்
கத்தரிப்போமென்பரொருசார் கொலைத்தொழிலை
உத்தரிப்போமென்பரொருசார் அலைகடலோர்
கைக்கோமலைகளோர் மிதிக்கோவுலகமொரு
தைக்கோமாருதமோரா விக்கோவென்பார்கள்சிலர்
கல்லெறிருவோர்களொருசார் அம்பையிணக்கி
வில்லெறிகுவோர்களொருசார் கேடகமொடு
சுத்திசக்கரந்தோமரஞ் சத்திரமுடன்சாமரம்
பத்திரகீள்வாகைசரம் அத்திரமணிந்தேயுரக்
காண்சூரனென்பரொருபால் எங்கேயெதிர்க்கும்
ஆண்வீரனென்பரொருபால் இத்தாதிபல
காரணங்களேநிறைந்த தீரராய்தேவகணங்கள்
எருறும்லாலினைக்கொல்லப் போருடன்சீறியெழுந்தேவந்தாரே

தேவகணங்களைக்கண்ட கௌஹர் புலம்பல்.

தே வா ர ம்.

போராடத்தேவகண மொருமுகமாயாக்ரமித்துப்புழுங்கிநெஞ்சம்
பாராடவெக்கிரியுங் கிடுகிடெனநடுநடுங்கிப் பாந்தாள்வாடச்
சீராடும்லாலரசன் சிரந்துணிப்பான்வேண்டிவருந் தீமைநோக்கிக்
காராடுமலர்க்குழலாள் கௌஹர்மனஞ்சலிக்காது கதறுவாளே.

தரு-௩௰-இந்துஸ்தானி-தஞ்சரி-ரூபகதாளம்.

பல்லவி.

ஐயோகோலாலிளவேந்தே யினியாராலாயோ
அடர்பகை தான்போமோ.

அநுபல்லவி.

வையகமீதினிலுன்னோடு வாழ்வோமென்றிருந்தேன்
வந்ததோ துன்பமின்றேன் ஐயோகோ

சரணங்கள்.

வாரிகாலேழுளைத்து வந்ததும்போலேகத்தி
மலர்ப்பொழிலேசுற்றி
வீரசூரர்களாக மேலடர்கிருரேசத்தி
வேந்தேவின்வாயோர்புத்தி ஐயோகோ

சோரிசெய்மாமுகச்சந்த்ரோதயத்தைத்தோகைதினந்
தோன்றக்கண்டாலோமனம்
பீதியெல்லாமகன்று பேர்க்தொழியுமேயினம்
பேதையெற்காமேகனம் ஐயோகோ

ஒருவனெல்லாம்பரியுந் தேவுகளுமாதலாலே
மனம்பதறுதேலாலே
குருரந்செய்தேநமைக் கொன்றுதலுதவிக்கோநம்பாலே
கூடுவாரார்லாலே ஐயோகோ

பூவில்வாழ்வேமெனநான் பூரணமாநம்பினதோ
போச்சுதின்றோடிதோ
தேவர்தேவேயுன்னைமானப் பொருளெல்லாதேதோ
செய்லைநன்றோதிதோ ஐயோகோ

இபதை-இ-ம-காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஏதுசெய்வேன்படைமடியாதோ என்றன்
என்னைப்படியாதொன்றுமுடியாதோ லாலே
நீதிவிதஞ்செயவானென் றறியேனே தந்தை
செய்வினைக்குப்பிரதி குறியேனே லாலே
காரிகையென் தாய்மனக்கல்லாச்சோ லாலே
கருணைக்கண்பகைவாழ மில்லாச்சோ லாலே
வாரிகாலேழுளைத்து வந்திமாம் போலே
மாபடைநம்மைவந்து வளையலாமா லாலே
பொறுக்குதில்லையென்மனம் புழுங்கிடாதோ லாலே
பொல்லாப்படையைப்பூமி விழுங்கிடாதோ லாலே
மறுக்கொள்மனாந்தன்தந்தை மடியாதோ லாலே

மறலியவனுயிர்க்குடியாளோ லாலே
தாயென்னும்பாவியின்னுமிருக்கிறாளே என்றன்
சஞ்சலம்பார்த்தும்மனம்பொறுக்கிறாளே லாலே
ஆதாரம்யொருளேதின்னபயம் என்றன்
தோன்றலுயிர்காத்தருள்தின்னபயம் விதம்

தேவகணங்களை வெல்வேனே கெளஹரிடத்து.

லாலரசன் விடைகேட்குதல்.

விருத்தம்.

இவ்விதமாககெளஹ ரிரங்கியேபுலம்புங்காலை
செவ்வியலாலுமந்தத் திருவனையாளைநோக்கி
பௌவநேர்விழியாய்சற்றும் பயப்படவேண்டாமுந்தத்
தெவர்போற்கோடியின்னுஞ் சேர்கினுஞ்செகுப்பேன்காணே.

தரு-இ-ம்-ஜெங்கலா-மிசுரதாளம்.

பல்லவி.

கண்ணே விடையருள்மானே தேவ
கணமெலாம்பிணமாய்க் கணம்புரிவேன் கண்ணே

அநுபல்லவி.

விண்ணேறுமானே விசனமேன்தேனே
எண்ணுதெலலாமெண்ணி யேங்கிடுவானே கண்ணே

சரணங்கள்.

கொறியினங்திரண்டுகூடினுமோர் புலிக்
குட்டிக்காற்றுமோவிந்தமட்டிகளுயிரை
பறிபோகநொடியிற் பண்ணவோவடிமை
முறிவாங்கவோயாரென் முனைத்திறமின்னே கண்ணே

கடல்போலவருந்தேவகணத்தை யேவெண்
கலககடைதனில்மதகரியடர்வதுபோல்
அடலேறிமுடிவா யழிக்கவோகசக்கி
வடித்திடவோசித்திர வதையுரிந்திடவோ கண்ணே

பஞ்சிதங்கோடிகூடினுமோர் பூர்வ
பூசுஷப்பூரணப்பசுங்கதிர்மதியாமோ
வஞ்சியேமனதையஞ்சவிடாதே
கெஞ்சியுன்பாதமே தஞ்சமென்பார்கள் கண்ணே

கௌஹர்சொல்லல்.

கலிவிருத்தம்.

யுவராஜனுரைத்தவையோர்ந்துபரி
நவமாதுமயங்கிநவிந்துவகும்
பவநேர்படையற்பமதன்றுவெல்ல்
அவமேயெனவங்கண் கலுழ்ந்தனளே.

லாலரசன் மரக்கிளையின் மகிமையால்
தேவகணங்களை வெல்லுதல்.

கொச்சகம்.

ஓலமிடுங்கௌஹ லுளத்தேற்றுவானியற்றுஞ்
சாலபரிகாரமெல்லாஞ் சாகரத்திலிட்டபுளி
போலவவமாகக்கொண்டு வந்தபுதுமைத்தருவின்
கோலதனையேகரத்திற் கொண்டாடிக்கொண்டானே.

விருத்தம்.

கொண்டமரக்கிளையதனைநோக்கிராஜன்
கூர்படைகொண்டெதிர்தேவின்கூட்டமெல்லாம்
மண்டலத்தினுண்முழங்கால்பதிந்துநாடி
வந்துபணிமுடியாதமார்க்கத்தோடு
கண்டமிகுகரங்களிலேதனையும்பூண்டு
கனவருத்தமதின்மூழ்கிக்கவலைகொள்ளத்
திண்டிறமாமுனதுபெருமகிமைதோன்றத்
திரென்றுன்தீர்ந்திடுமிப்போரென்றுனே.

ஜவாஹிருஷா கௌஹரை
லாலரசனுக்கு விவாகஞ்செய்துகொடுக்கிறதாக
யுறுதிவாக்களித்துத் தேவகணங்களை மீட்டல்.

விருத்தம்.

சொன்னபடிமரக்கிளையின்மகிமையாலே
சூழ்ந்தனிதேவுகட்கவ்விதமேயாக
மன்னவனும்ஜவாஹிருஷாகலங்கிவேறு
வழிவகைகளறியாமல்லாலைநோக்கி
வன்னமுறுதேவுகளைக்காப்பாயாகின்
பின்னிடையாழ்கௌஹர்தனைவிவாகஞ்செய்தே
உனனிடத்திலளித்திடுவேனுண்மைகொள்ளென்
றேதினன்சினமதனையூதினனே.

விருத்தம்.

பரிக்கதிபதியிவ்வாறு பகர்ந்திடலாலுமந்த
மரக்கிளை தன்னைநோக்கி மன்னன்வேண்டுவதால்முன்போல்
வருத்தஞ்செய்யாதுகாப்பா யென்னவேவருத்தம்நீங்கிக்
கருத்தினின்மகிழ்வாய்தேவ கணமெலாமீண்டதன்றே

லாலரசனுக்கும் கௌஹருக்கும் மணம்புரிதல்

விருத்தம்.

தேவகணமீண்டிடவேபரியிராஜன்
திருவனையகௌஹரையுஞ்சிறப்பின்மிக்க
ஆவியெனும்லாலரசன்றனையுங்கட்டி
யவாவுடனேதழுவியபினமைச்சைநோக்கிக்
காவலர்களனைவரையும்வரவேசெய்திக்
கடிநகரமுழுதுமலங்கரிக்கவேண்டுங்
கோவையிதழ்ப்புதல்விமணக்கோலமென்று
கூறினன்சந்தோஷமீறினனே.

கூறுபதியோடுதெருவாதிபதியாவுமிருகோலமதுசெய்
தாறுசுவையோடுகனியோதுசுவைசாதநனியாகவருளி
வீறுபதிலால்பவனிவீதிவதியாகவரவேபரிகள்வா
கூறுபதிகௌஹர்நிதியாதிபதிவோடருகினுற்றனரரோ.
வந்தணிநிறைந்தவெழிலிக்குமுகசுந்தரியுமாரனனைய
தந்தணிநிறைந்தமனமுந்தகுதியுந்தருதயாளவரசும்
அந்தரணியுந்தணரியுந்தவிசிருந்தெனவிருந்தனரெழின்
மந்தரமதுந்தரணியும்புகழ்மணந்தனைவனைந்தனரரோ,
இத்தகைமணத்தினைமுடித்திருவரைத்தனியிருத்தியிளைஞன்
அத்தமதனிற்சிறுமியத்தமதனைத்தரியிருக்குமளவும்
உத்தியொடிருப்பிரெனதத்தமிடவத்தனவனுற்றனர்களால்
மொத்தமுபயத்தினிருபத்திதினமத்தியெனமுத்தமுறவே.

லாலரசன்தன்னூருக்குப்போக ஜவாஹிறுஷாவிடத்தில் விடைகேட்கல்.

விருத்தம்.

மண்டலகாளக்கிருந்துமணமகள்சம்மதமறிந்துமன்னன்லாலும்
வண்டலம்பும்புயராஜமாதுலன்பாலடுத்துமுகவாட்டத்தோடு

முண்டகத்தாள்வணங்கிஎம்மூர்விட்டுவெகுநாளானமுறைபாலெற்கு
விண்டருள்வீர்போகவிடைமின்னிடையாள்சகிதமெனவிளம்பினனே

ஜவாஹிறுஷா தன்மனைவியுடன்யோசித்து விடையருளல்.

கலிவிருத்தம்.

மருமான்சொல்செவித்துமன்னிடவே
பெருமானகம்பேதுறவேவருந்தித்
திருமானையாகியதேவியெனும்
ஒருமானையழைத்தவனோதினனால்

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொல்லுஜவாஹிறுஷாவுந்தேவியுமாலோசித்துத்துயரால்வாடி
கல்லென்றாலுங்கணவன்புல்லென்றாலும்பு ஷன்சாண்பிறென்று
தொல்லுலகர்வசனமுளதெனத்தோகைதடுப்பதனால்சுகமில்லென்று
வல்லிகௌஹறுடன்லாலும்போகமனஞ்சம்மதித்துவழுத்துவாரே.

ஆரமதுபொக்கிஷதாரிவர்களுக்காமிரத்தினங்களினைத்தும்பூணும்
ஆரமுடன்வேண்டுதிரவியம்மாதிப்பட்டுடைகளளவில்லதும்
வீரமுறுந்தேவகணங்கள்கூடப்பணிவிடைக்காய்மேவுமென்னத்
தீரமுறுமரசுசொலியாகாயவிமானமொன்றுஞ்சிறப்பினீந்தான்.

லாலரசனுங்கௌஹறும்பிரயாணமாகுதல்.

விருத்தம்.

இத்தனையும்பெற்றமணமகன்மகளாமிருவர்களுமெழுந்துபோற்றி
பத்தியுடன்வணங்கிவிடைவாங்கிவிமானத்தேறிப்பதியைவிட்டுச்
சத்துகடலெனதேவகணஞ்சூழயாத்திரையாய்க்கடிதிற்சென்றார்
நத்துமிருபங்காளநாட்டினைச்சேரஹு ஷாமைநாடியம்மா.

லாலரசன்ஹீராப்பரியிடத்துவருதல்

விருத்தம்.

வந்திடும்வழியில்ஹீரா வாழ்பதியமித்ததாலே
முந்திமானுருவாச்செய்த மோகினிமோசமான
மந்திரமெல்லாமிந்த மரக்கினைமகிமையாலே
நந்திடச்செய்வேனென்று நாடியேயிறங்கினனே.

லாலரசனுக்கும் ஹீராப்பரிக்கும் சம்வாதம்.

விருத்தம்.

நாடிவந்தஹீராவைவிரித்துகௌஹர்
நங்கைபுறும்பதிகச்சேகவுங்ஞலாகா

நாடிவரும்பரிகளிருன்முதன்மையென்றே
டமைந்துசுகமனுபவியென்றறைந்தகாலைப்
போடியினைக்கென்னைமான்வேட்டமாக்கிப்
போவனத்திலென்றுவிட்ட புலைச்சியேநான்
தேடிவந்தபரிக்கரசியிதோபாரென்று
சிறிதுன்மொழிக்குமொழிகூறினேனே.

இபதை-இ-ம்-இந்துஸ்தானிஜெஞ்சோட்டி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

| | | |
|---|---|---|
| லா | பாதகிநானுவந்த பாரியைஹீரா | பரியே |
| | பற்றலாகாதென்றுரைத்தாயலஹீரா | பரியே |
| ஹீ | ஆகிடாதென்றேயறைந்தேனகற்கென்றே | லாலே |
| | அந்தயின்றுநான்வசமாகினுமென்றே | லாலே |
| லா | மின்னனையாசையைவிட்டேயடிஹீராய் | பரியே |
| | மேவுமன்றேயென்றுரைத்தாயலோஹீராய் | பரியே |
| ஹீ | அல்லவோகௌஹரிலும்அதிகமோஹீரா | லாலே |
| | ஆயினுமனையவிதி அவசியம்வேண்டும் | லாலே |
| லா | வேண்டிடாதேயெனைமான்வேட்டமெடுத்தே | பரியே |
| | மீளாதுகானகத்தில்மேவென்றாய்ஹீராய் | பரியே |
| ஹீ | மேவிடாதுன்னிடம்நீவிருப்புறுவாவென | லாலே |
| | வேண்டுமென்னெண்ணமெல்லாம்போச்சுதோவீணே | லாலே |
| லா | வீணிஹீராவேயினிமேலென்னசெய்வாய்ப் | பரியே |
| | வீரமெல்லாம்விதுதாவாச்சுதோஹீராய் | பரியே |
| ஹீ | ஆச்சுதோவாறிபதிசூழ்கிடச்செய்தாய் | லாலே |
| | அஞ்சிடாதேவசைக்காளாக்கினையல்லோ | லாலே |

லாலரசன் ஹீராவைவிட்டுப் புறப்பட்டபோது

ஹீராசெய்தமந்திரத்தால் லாலரசன்மயங்கிப்புலம்பல்.

விருத்தம்.

என்றுபலபலவாறாய்க்கொடியபரியொடுரையெடுத்துக்கூறி
மன்றலணிபூங்குழலாள்கௌஹரும்லாலரசும்விமானத்திலேறி
வென்றிபுறந்தேவகணஞ்சூழ்ந்துவரமீமிசையேவிரைந்துதங்கள்
பொன்றிகழும்பதியஹஷாமதைநாடிச்செல்கின்றபோதிலம்மா
வெகுவதையோர்ந்துபரிஹீராவின்விழிகணெருப்பெனவேசேர்ந்த
வாகுபெறுலாலுடனத்தேவகணமனைத்தும்வெறிமயக்கங்கொண்டே

யூகமிழந்தந்தாத்திலலையவொருமந்திரத்தையோதவன்ஞேர்
ஆகுலங்கொண்டுழலயுவராஜவள்ளன்மனம்புழுங்கியலறுவானே.

திபதை-இ-ம்-காம்போதி-திசுரதாளம்.

கண்ணிகள்.

ஈதென்ஞேகொடும்பாதகிசெய்ததென்னமாயமதோ
சகாயமிதோவுபாயமெதோ-வறியேன்
ஏகனேஏகனேஏகனேஇடர்தவிர்ப்பாயிறையே

மாதிரத்திந்தவேதனைசெய்யவந்துதேமனமுங்
கொடுஞ்சினமுமுரண்டிடவுமிக்காலம்
வாய்த்ததோவாய்த்ததோவாய்த்ததோவறிகிலனிறையே

பத்ரகாளியென்னைத்தைத்தவிர்த்தப்பாங்கிஞலல்லவா
துயர்சொல்லவாயிலைவெல்லவானைதசெய்தாள்
பாரியாள்பாரியாள்பாரியாளுடனெனையும்மிறையே

மித்ரபேதஞ்செய்தோர்க்கக்கெடுதிமீளுமென்றமொழி
யிப்போதவ்வழிவராதவழியறியேன்
மிஞ்சுதேமிஞ்சுதேமிஞ்சுதேதுயரென்செய்வேனிறையே

மாணுருவங்கொணடேவனமதில்வாடவும்புரிந்தா
ளினந்தெரிந்தான்மனம்பொருந்தாதகீலி
மாயமேமாயமேமாயமேயிவ்வாதையெல்லாமிறையே

யானுமென்பரிவாரமுமிந்தவர்குலம்பெறவே
வினைவுறவேபயனுறவேவிதியாய்
ஆச்சுதோஆச்சுதோஆச்சுதோவென்னசெய்குவேனிறையே

ஐம்புலத்தடங்காசதானந்தாதியேபதியே
குணாதிதியேநிதந்திதியேபரமே
ஆதியேஆதியேஆதியேயருள்புரிவாயிறையே

கம்புமேழைக்கிவ்வம்பரத்திடர்கண்ணிடாதபயம்
பரிந்திதயங்குவிர்ந்துபயந்தவிர்த்தாள்
காயகாகாயகாகாயகாலம்பெறவேயிறையே

லாலராசன் துயர்நீங்கி ஹீராவைவென்று
தன்தேசத்தைநாடிப்பிரயாணப்படுதல்.

விருத்தம்.

மதிமடங்கிப்புலம்புயுவராஜவள்ளல்
செல்லவினைவணங்கிநின்றுமகிமையென்றும்

ஆதியியங்குந்தருமலர்ப்பூங் கொம்பைநோக்கி
யகன்றிடவுநமதுதுயர் பரிஹராவன்
மதிநயங்கொண் முகத்தினிறங்கருமையாகி
வளர்குழலுமூக்குமறுப பட்டேயிந்த்ரன்
யதிவயங்கச்செலவொண்ணு விதமிப்போதிற்
பண்ணென்றான்கௌஹார்மனக் கண்ணின்றானே.

இதுவுமது

தருவலர்ப்பூங்கிளைமகிமை யதனால்ஹீராத்
தவளமதிமுகங்கரிய நிறமேயாகி
மருவலர்கூந்தலுமூக்கு மறுப்புண்டாக
மனமுறுகிநாணிமனை யகத்தடங்கத்
திருவனையகௌஹரென்னுந் தேவியோடு
சேனையுடைசூழஜெய முரசமாப்பக்
கருணைவிழிலாளரசன் சுதேசமேகக்
கருத்திட்டான்வாகனியல் தரித்திட்டானே.

மகன்வரவையறிந்த சம்ருத்ஷா எதிர்கொண்டழைத்தல்.

விருத்தம்.

தரித்தபுகழ்லாலரசன் றுயரகலச்சேனையுடைதரவெழுந்தே
அரித்தடஞ்சூழ்பங்காளத்தஹ்ஷாமினருகடுத்தங்கிறங்கவன்பு
பெருத்ததந்தைசம்ருத்ஷாவறிந்துமனமகிழ்ந்தொனிவேயிலங்கும்ரத்
அரீத்தவிசின்மீதேறிப்புறப்பட்டார்பரிவாரசகிதமம்மா [ரு

லாலரசனுங்கௌஹருமபோற்றிசெய்தல்

கலிவிருத்தம்.

தந்தையொடுமந்த்ரிபலதானைபுடைசூழ
மைந்தனுறுமெல்லைவரவள்ளலிளவேந்தும்
இந்துமுகசௌஹருமெழுந்தடிபணிந்தே
எநதையேநீரெனறுமெமைக்காத்தருள்கவென்றாள்

சம்ருதுஷாமகனையுமருமகளையும்வாழ்த்தி
யழைத்துக்கொண்டுதன்னூருக்குவருதல்.

கலிவிருத்தம்.

மன்னிலையுணர்ந்துநனிவாழ்த்திமகனோடு
மின்னிடையின்கௌஹரைவிமானமதிலேற்றித்

துன்னுமிருசேனைகளுஞ் சூழவெழுந்தேவாழ்
தலைநகரைநாடிநடந்தார்தகுதியோடே.

லாலரசனும்கௌஹாரும் நகரப்பிரவேசமாதல்

உலாக்கரு-இ-ம்-சௌராஷ்டகம்-ரூபகதாளம்.

பல்லவி.

லாலினவேந்தனுடன் ஷாமினிமேல்கௌஹார்
நங்கையுடனுலா வாழ்ந்தார் எழில்

அநுபல்லவி.

சாலவேபோனபொருள்கைக்குவந்த
நகையைப்போல்சம்ஹூதுஷாவுமனைவியுங்
கோலமதாயவர்பாலன்வரக்களிகொண்
டாடிடவேயூரார் கண்டாடிடவேசிறார் லாலின

சரணங்கள்

மின்னும்மொளிநவரத்நசிம்மாசனமீதினில்கௌஹாரும்லாலும்நல
மேவவிருப்பப்பொன்னும்பூவுமள்ளியேவீசியெறிவரெப்பாலும்
துன்னுமிருபுறம்யானைசேனைபலசூழவுமந்திரிமார்கள்புடைவர
வன்னமயிலெனக் கன்னன்மொழியயில்
மாதார்கடைனஞ்செய்திடப்
பாதார்திடனெஞ்செய்திடும் லாலின

பேரிகையாதிமுரசங்களார்த்திடப்பீலிக்கொடிகுடைதன்னப்பெரும்
பீதாம்பரக்கேதனம்விண்மறைக்கப் பிறங்கும்வெண்சாமரமன்ன
ஆரியர்வேதியராசிவழங்கிட ஆதுலர்க்குத்தனவர்க்கம்பெருகி
ஊரவர்மென்மேலானந்தங்கொண்டாடிட
உற்றுறுறன்முறையார்களி
பெற்றுடிடகறையார்புய லாலின

தோரணவீதிகடோறுநறுமலர்த் தொங்கலுறப்பக்தனட்டி-மிகு
துங்கமுடன்வாழைகொய்க்குகமுகினஞ் சூழநிரைத்தணியிட்டிப்
பூரணகும்பமிடைக்கிடைதாபித்துப் பொன்மடமேனுப்பரிகையிலே
காமதோடசை கேதனம்வம்மெனக் [யலஞ்
கயலாமேரொடு நயதேவியைத்
தயவாயியல்கண்டெழிலார்த்திட லாலின